சக்தி மலர்

க. சந்தானம்

# செல்வம்

நோட்டையும் பணத்தையும் பற்றி மட்டுமல்ல; இந்தக்காலத்துப் பொருளாதார அமைப்பில் இன்னும் எவ்வளவோ கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் இடமிருக்கின்றன. முற்காலத்தில் ஆயிரம் பேர் செய்யக்கூடிய வேலையை இந்நாளில் இயந்திர சக்தியின் உதவியினால் ஒரே ஒரு மனுஷன் செய்துவிடக்கூடும். இப்படிப்பட்ட சௌகரியம் ஏற்பட்ட பிறகும், உலகத்தில் வறுமை குடிகொண்டிருப்பது ஏன்? கோடிக் கணக்கான மக்கள் முழு வயிறு சாப்பிடுவதற்கு உணவு கிடைக்காமல் ஏன் திண்டாடுகிறார்கள்? இந்தமாதிரி எத்தனையோ கேள்விகளுக்கு இந்த நூலில் ஆசிரியர் பதில் சொல்கிறார்.

சக்தி

029

# செல்வம்

(பொருளாதார நூல்)

★

க. சந்தானம்
எழுதியது

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை, சென்னை 14.

முதல் பதிப்பு: மார்ச் 1942
இரண்டாம் பதிப்பு: டிசம்பர் 1946
மூன்றும் பதிப்பு: டிசம்பர் 1948

உரிமை பதிவு
செய்யப் பெற்றது.

ரூபாய்: ஒன்றரை
(தபால் செலவு தனி)

அச்சிட்டோர்:
சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்) சென்னை—14

# பதிப்புரை

செல்வம் இப்பொழுது மூன்றும் பதிப்பாக வெளிவருகிறது. இந்த மாதிரி நூல்களையே மக்கள் பிரியமாக வாசிக்கமாட்டார்கள் என்றுதான் ஆரம்பத்தில் எண்ணியிருந்தோம். இரண்டாம் பதிப்பும் வெளியிட்ட சில மாதங்களில் விற்றுத் தீர்ந்தது எங்களுக்கே ஆச்சரியந்தான். இந்த நூல் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது என்பதை நாங்கள் சொல்ல வேண்டியதில்லை. வாசகர்களுக்கே தெரியும். மூன்றும் பதிப்பாக இது அச்சாகும் சமயத்தில் இதன் ஆசிரியர் **ஸ்ரீ க. சந்தானம்** சுதந்திர இந்தியாவின் மத்திய அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறார். அவருக்கு வாசகர்கள் சார்பாக எங்கள் நன்றி.

சென்னை,
அக்டோபர் 1948

**சக்தி காரியாலயம்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. நூல் பிரவேசம் | ... | 13 |
| 2. செல்வத்தின் தன்மை | ... | 16 |
| 3. செல்வத்தின் சொரூபங்கள் | ... | 20 |
| உழைப்பு | ... | 20 |
| சொத்து | ... | 22 |
| முதல் | ... | 25 |
| பணம் | ... | 28 |
| கடன் | ... | 33 |
| 4. செல்வ வளர்ச்சி | ... | 38 |
| தொழிலாளி | ... | 38 |
| நிலமும், நீரும் | ... | 43 |
| போக்கு வரத்து சாதனங்கள் | ... | 48 |
| இயந்திர சாலைகள் | ... | 52 |
| வியாபாரம் | ... | 55 |
| செலவும், மிச்சமும் | ... | 60 |
| 5. செல்வப் பிரிவினை | ... | 65 |
| சராசரி வருமானம் | ... | 65 |
| வாய்க்கால்களும், கால்வாய்களும் | ... | 68 |
| சர்க்கார் வரியும், செலவும் | ... | 71 |
| சமூகத்தின் அதிர்ஷ்டசாலிகள் | ... | 77 |
| பிறப்பும், செல்வாக்கும் | ... | 81 |
| எது நல்ல முறை? | ... | 83 |
| சேவைக்குத் தகுந்த ஊதியம் | ... | 86 |
| 6. செல்வமும் சமூக லட்சியங்களும் | ... | 90 |
| செல்வமும், அரசாங்கமும் | ... | 90 |
| செல்வமும், சுகமும் | ... | 93 |
| செல்வமும், நாகரிகமும் | ... | 95 |
| முடிவுரை | ... | 97 |

# முன்னுரை

சென்னை லிங்கி செட்டித் தெருவில் ஒரு பிரபல ஜோசியர் இருக்கிறார். அவரிடம் சிலர் ஜோசியம் கேட்ப தற்குப் போவார்கள், சிலர் ஜோசியம் கேட்கிறது என்ற சாக்கில் அவருடன் பேசுவதற்காகப் போவார்கள். அவ்வளவு உலக ஞானமும் மதி நுட்பமும் உள்ளவர்.

அப்படிப்பட்ட அறிவாளியான ஜோசியருக்கு ஒரு சந்தேகம் வந்து ஒரு கேள்வி கேட்டார். அந்தக் கேள்விக் குப் பதில் அவருடைய ஜோசியத்தில்கூட அகப்படவில்லை. அவர் கேட்டதாவது:—

"இவன் எதற்காக என்னிடமிருக்கிற தாளை வந்து கேட்கிறான்? இவனிடம் கடுதாசி இல்லையா? அச்சாபீஸ் இல்லையா? வேணுமென்கிற நோட்டை அச்சடித்துக் கொள்கிறதுதானே?"

சர்க்கார் ஜனங்களிடம் யுத்த நிதி வசூலிப்பதைப்பற்றி மேற்படி ஜோசியர் இம்மாதிரி கேட்டார். பார்க்கப் போனால் சர்க்கார் ஜனங்களிடம் வரிகள்தான் எதற்காக வசூலிக் கிறார்கள்? கடன் (!) என்னத்திற்காக வாங்குகிறார்கள்? இவை யெல்லாம் வெள்ளி ரூபாயாகக் கொடுக்க வேண்டு மென்ற நியதியாவது இருக்கிறதா? நோட்டாகக் கொடுத் தாலும் வாங்கிக்கொள்ள வேண்டியதுதானே? அந்த

நோட்டை வேண்டுமென்கிற வரையில் அவர்களே அச்சடித்துக் கொள்வதற்கு என்ன?

இந்த மாதிரி கேள்விகளை நம்மிடம் யாராவது கேட்டால் "இதென்ன பைத்தியக்காரக் கேள்விகள்!" என்போம். ஏனென்றால், அப்படிச் சொல்லித் தப்பித்துக் கொண்டால் தான் கொண்டது; பதில் சொல்ல முயன்றோமானால், ரொம்பவும் சங்கடப்பட்டுப் போவோம்.

ஆனால், இந்த நூலின் ஆசிரியர் **ஸ்ரீ க. சந்தானம்** அப்படியெல்லாம் தப்பித்துக்கொள்ள முயலவில்லை; பதில் சொல்லத்தான் முயன்றிருக்கிறார்.

நோட்டையும் பணத்தையும் பற்றி மட்டுமல்ல; இந்தக் காலத்துப் பொருளாதார அமைப்பில் இன்னும் எவ்வளவோ கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் இடமிருக்கின்றன. முற்காலத்தில் ஆயிரம் பேர் செய்யக்கூடிய வேலையை இந்நாளில் இயந்திர சக்தியின் உதவியினால் ஒரே ஒரு மனுஷன் செய்துவிடக்கூடும். இப்படிப்பட்ட சௌகரியம் ஏற்பட்ட பிறகும், உலகத்தில் வறுமை குடிகொண்டிருப்பது ஏன்? கோடிக் கணக்கான மக்கள் முழு வயிறு சாப்பிடுவதற்கு உணவு கிடைக்காமல் ஏன் திண்டாடுகிறார்கள்?

இந்த மாதிரி எத்தனையோ கேள்விகளுக்கு, இந்தப் புத்தகத்தில் ஸ்ரீ க. சந்தானம் பதில் சொல்லி யிருக்கிறார். பதில் சொல்வதற்கு அவர் சிறந்த தகுதியுடையவர் என்பதைச் சென்ற இருபது வருஷங்களுக்கு மேலாக நான் அறிந்திருக்கிறேன். தமிழ் நாட்டிலுள்ள மிகச் சிறந்த அறிவாளிகளில்—சிந்தனையாளர்களில்—ஸ்ரீ க. சந்தானம் ஒருவர். எவ்வளவு சிக்கலான அரசியல்-பொருளாதார பிரச்னைகளா யிருந்தாலும் செடுக்கெடுத்துத் தெளிவான முடிவு கூறும் ஆற்றல் வாய்ந்தவர்.

திருச்சி சிறையில் ஸ்ரீ க. சந்தானம் இந்த நூலை எழுதினார். அங்கேயே கையெழுத்துப் பிரதியில் நான் படித்தேன். படித்ததில் ரொம்பவும் பயனடைந்தேனென்பது

என் நம்பிக்கை. அவ்வாறே தமிழ் மக்களும் இந்த நூலைப் படித்துப் பயன்பெற வேண்டுமென்று விரும்புகிறேன்.

இந் நூலைப் படிப்பதில் எனக்கு இல்லாத ஒரு சௌகரியம் அவர்களுக்கு இருக்கிறது. சிறந்த புத்தகங்களைச் சிறந்த அமைப்புடன் அழகாக வெளியிடுவதில் ஏற்கனவே பிரசித்தி பெற்றிருக்கும் **சக்தி காரியாலயத்தார்** இந்த நூலையும் அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். விஷயத்தின் ருசியும், தெளிவும், அச்சின் அழகும் சேர்ந்து, புத்தகத்தைக் கையில் எடுத்தால் படித்து முடிக்கும்வரையில் கீழே வைக்க மனமில்லாதபடி செய்துவிடுகின்றன.

சிந்தனையைத் தூண்டி, அறிவை வளர்க்கக் கூடிய இத்தகைய புத்தகங்கள் பலவற்றை "சக்தி" காரியாலயத்தார் மேலும் மேலும் வெளியிட வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்கு வேண்டிய ஊக்கத்தை அவர்களுக்குத் தமிழ் மக்கள் அளிக்க வேண்டும்.

**"கல்கி" காரியாலயம்**
சென்னை. 2-3-1942

**ரா. கிருஷ்ணமூர்த்தி**

# இரண்டாவது பதிப்பின் முகவுரை

இவ்வளவு சீக்கிரத்தில், இந்நூலின் இரண்டாவது பதிப்பு அவசியமாக விருக்கும் என்று நான் எதிர்பார்க்க வில்லை. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் சமூகத் தத்துவங் களை அறிந்து கொள்ள ஆவல் மிகுந்து வருவது எனக்குத் தெரியும். ஆதலால், இதில் ஆச்சரியமுமில்லை.

நடந்து வரும் மகா யுத்தத்தின் காரணமாக எல்லா நாடு களின் பொருளாதார விஷயங்களிலும் மகத்தான மாறுதல் கள் உண்டாகி வருகின்றன. அவற்றின் பலனாக, சண் டைக்குப் பிறகு ஒவ்வொரு தேசத்திலும், தொழிலும் வியாபாரமும் புது முறையில் நிர்மாணம் செய்ய வேண்டி வரும். பல இயற்கைப் பொருள்களுக்குப் பதிலாக இப் பொழுது செயற்கைப் பொருள்கள் உபயோகப்படுத்தப் படு கின்றன. செயற்கை இதற்கு நல்ல உதாரணம். பல புதிய இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டும் பழைய இயந்திரங்கள் சக்தி மிகும்படி மாற்றப்பட்டும் வருகின்றன. மாதம் ஆயிரக் கணக்கான யுத்த விமானங்கள் செய்யப்பட்டு வருகின்றன. யுத்தத்திற்குப் பின், பிரயாணத்திற்கும் இவ் வித விமானங்கள் ஏராளமாக உபயோகப்படுமானால் அதன் பலன் என்ன ஆகுமென்று இப்பொழுது முற்றிலும் நிர்ண யிக்க முடியாது. நாணய முறை எங்கும் புரட்சிகரமாக மாறி

வருகின்றது. காகித நாணயத்தின் வெள்ளத்தால் சமூகங்களே சேதமாகிவிடுமோ வென்ற அச்சம் மேலிட்டு வருகின்றது. இந்தியாவில் சண்டைக்கு முன் 200 கோடிக்குக் குறைவாக காகித நாணயம் வழங்கப்பட்டது. இன்று (3-12-43) 800 கோடி ரூபாய்களுக்கு மேலாகிவிட்டது. இங்கிலாந்திலோ 53 கோடி பவுனிலிருந்து 102 கோடி பவுனாகிவிட்டது. தங்கமும் வெள்ளியும் நாணய உலகிலிருந்து தூரத்தப்பட்டு விட்டன வென்று கூறுவது மிகையாகாது.

எல்லா நாடுகளிலும், தொழிலிலும் வியாபாரத்திலும் சர்க்கார் அதிகாரம் அதிகரித்து விட்டது. இவைகளெல்லாம் ஒரு புதிய அபேதவாத யுகத்தின் அறிகுறிகளாகத் தோன்றுகின்றன.

நமது தேசமும், தமிழ் நாடும் முன்னேற வேண்டுமாயின், பொருளாதார விஷயங்களில் தமிழர்களின் அறிவும், ஆவலும் அதிகரிக்க வேண்டும். பள்ளிக்கூடங்களிலும் இது ஒரு அவசிய பாடமாக வேண்டும். வட இந்தியாவில் பல விடங்களில் பொருளாதாரம் ஸ்கூல் பைனல் பரீட்சைக்கு ஒரு பாடமாக விருக்கிறது. சென்னையிலும், அவ்வாறு செய்யுமாறு பொது ஜன கிளர்ச்சி அவசியமென்றும் எனக்குத் தோன்றுகிறது.

பொருளாதாரத்தில் மட்டுமன்று, எல்லாவித அறிவுத் துறைகளிலும், அடிப்படையான தத்துவங்களை எளிய தமிழில் விளக்கிச் சிறிய நூல்கள் ஏராளமாக வெளியாக வேண்டும் என்ற நோக்குடனே இந்நூல் திருச்சி சிறையில் முதலில் எழுதப்பட்டது. அப்படி எழுதுவோர்களுக்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்கத் தயாராக விருக்கிறார்கள் என்பதற்கு இந்த இரண்டாவது பதிப்பே அத்தாட்சியாகுமென்று நம்புகிறேன்.

டெல்லி
3—12—43

க. சந்தானம்

# 1. நூல் பிரவேசம்

தனி மனிதனுக்கு உணவைப்போல் சமூகத்திற்கு ஆதாரம் செல்வம்.

ஒருவன் வாழ்க்கை, உணவைக்கொண்டே பூர்த்தியாகி விடாது. அறிவும், ஆற்றலும், ஆனந்தமும் வேண்டும். ஆனால், உணவில்லாவிடில் மற்ற சாதனங்கள் பயன்பட மாட்டா. சக்திகள் குன்றிவிடும். அறிவு அழிந்து போய் விடும். தர்மம் தவறிப் போகும்.

அவ்வாறே செல்வத்தை மட்டும் கொண்டு சமூகம் சித்தியடைய முடியாதெனினும், அதில்லாமல் இதர பெருமைகளால் பிரயோசனமில்லை. வறுமை மிகுந்த தேசத்தில் கலைகள் தண்ணீரில்லாத கொடிகள்போல் வாடி உலர்ந்து போகும்; மதமும் ஏமாற்றிப் பிழைக்கும் வழியாகும்; அசூயையும் கலகமும் பெருகும்; மனம் குறுகும். பெரியோர் செய்யும் முயற்சிகள் பொதுஜன ஆதரவின்றிப் பிஞ்சில் பழுத்த பழம் போலாகும். ஆதலால், செல்வ நிலையைக் கவனித்துச் சீர்ப்படுத்துவது சமூகத்தின் முதல் கடமை.

செல்வத்தின் தன்மை யாது? அதன் சொரூபங்கள் யாவை? அதன் வளர்ச்சிக்கு வேண்டிய சாதனங்கள் எவை?

அதனை நியாயமாகப் பிரித்தும் வழங்கும் முறைகள் யாவை? செல்வ நிலைக்கும், இதர சமூக லக்ஷ்யங்களுக்கும் உள்ள சம்பந்தங்கள் யாவை? இந்தப் பிரச்னைகளை இந் நூலில் சுருக்கமாக விளக்க முயற்சி செய்யப்படுகின்றது.

பொருளாதாரத்தில் மூன்று அம்சங்கள் உள்ளன. இயற்கைப் பொருள்களும், இயற்கை சக்திகளும் அதன் மூலாதாரம். இவற்றின் தன்மை மாறாதது. இவற்றை சமூகத்திற்கு வேண்டிய செல்வமாக மாற்றுவது மனித அறிவும், சக்திகளும். இவை மெதுவாக மாறக்கூடிய குண முள்ளவை. மூன்றாவதாக, பழக்க வழக்கங்களும் மனித விருப்பங்களும் செல்வ உற்பத்தியின் காரணங்கள். இவை அடிக்கடி திடீரென்று மாறக்கூடியவை. இன்றைக்குக் காப்பி குடிப்பவர் நாளைக்குத் தேயிலைக்குப் போய்விடலாம். பஞ்சு நூலாடை தரிப்போர் பட்டுக் கட்ட ஆரம்பிக்கலாம். இன்று சுருட்டுக் குடிப்பது காட்டுத் தீபோல் பரவி வருகின்றது. ஆகையால் இப்பொழுது புகையிலைப் பயிர் செய்வது மிகவும் லாபகரமாயிருக்கின்றது; சில வருடங்களில் இதன் தீமையைச் சமூகம் அறிந்து, அடியோடு தள்ளிவிடக்கூடும்.

ஆதலால், செல்வத்தைப் பற்றிய தத்துவங்கள் சாசுவதம் இல்லை. நீண்டகாலம் சிறிய மாறுதல்களுடன் பிரயோகிக்கக் கூடிய பல உண்மைகளை ஆராய்ந்து அறியலாம். இவைகளைக்கொண்டு காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப, தலைவர்கள் தம் சமூகத்தின் செல்வ நிலையை நிர்ணயிக்க வேண்டும்.

ஒரு சமூகத்தின் செல்வ நிலை அச் சமூகத்தைச் சேர்ந்த எல்லோரையும் பாதிக்கின்றது. அதனைப் பற்றிய அறிவு ஓரளவு இன்றியமையாதது. இந்த நாட்களில் அரசியலுக்கும் செல்வ வளர்ச்சிக்கும் நெருங்கிய சம்பந்த மிருப்பதாலேயே சாதாரண மக்கள் சிக்கலான அரசியல் முறைகளில் மனம் செலுத்தி ஈடுபடுவது அவசியமாகிறது. பொருளாதார உண்மைகளை நன்கு அறியாவிட்டால், ஜனநாயகத்தின் பயனைப் பெரும்பாலோர் அனுபவிக்க முடியாமல் போய்விடும்.

இச் சிறு நூல் தமிழ் நாட்டில் சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களை உத்தேசித்து எழுதப்பட்டது. ஆதலின், விஷயங்கள் ஸ்தூலமாகவே விளக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், இதைப் படிப்போர் பொருளாதார விஷயங்களை நன்கு கவனித்துத் தாமாகவே ஆலோசித்து முடிவுக்கு வரும் சக்தியைப் பெறுமாறு கூடியவரையில் சாஸ்திர முறை கையாளப்பட்டிருக்கிறது. மிகவும் சூக்ஷ்மமான தத்துவங்களையும் கதைபோல் பாமர மக்களுக்கு உபதேசிப்பது மேலான முறையே. ஆனால் அம் முறையைப் பெரிய மேதாவிகள்தான் கையாளமுடியும். மற்றவர்கள் முயன்றால் மனக் குழப்பத்தில் முடியும். ஆதலால் உண்மையைத் தெளிவாகவும் திட்டமாகவும் எடுத்துரைப்பதே லக்ஷ்யமாக இந் நூலில் கொள்ளப்பட்டிருக்கிறது. பல விடங்களில் சொற்சுவை குறைந்திருப்பினும் பொருட்படுத்தாமல் விஷயத்திலேயே கவனம் செலுத்திப் பொறுமையுடன் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

# 2. செல்வத்தின் தன்மை

எப் பொருளும் தன் சுபாவத்தால் செல்வமாவதில்லை. மனிதனுடைய விருப்பம் அல்லது ஆசையால் அத் தன்மை பெறுகிறது. வட இந்தியாவில் புளி உபயோகிப்ப தில்லை. ஆதலால் புளியம் பழத்தைச் சேகரிக்காமல் விட்டு விடுகிறார்கள். பல காட்டுச் சாதிகளுக்குத் தங்கத்தாலும் வைரத்தாலும் ஆகக்கூடிய காரியம் ஒன்றுமில்லை. அவைகளை அல்ப சாமான்களுக்குப் பதிலாகக் கொடுத்து உதவுவார்கள். எனவே, மனிதன் எந்தப் பொருளை விரும்புகிறானோ அதுவே செல்வம் என்று ஏற்படுகிறது.

இவ்விருப்பம் பல காரணங்களால் உண்டாகலாம். உப யோகத்தையும் சுகத்தையும் கொடுக்கக்கூடிய பொருள்களைச் சகஜமாகவே விரும்புகின்றோம். உபயோகமான பொருள் களைக் காட்டிலும்கூட அலங்காரத்திற்காகவும், அபிமானத்திற் காகவும் உதவும் பொருள்களை விரும்புதல் மனித சுபாவ மாகும். இவ்வித ஆசைகளைத் தடுக்க வேண்டாமா என்பது முக்கியமான பிரச்னையே. ஆயினும், அது இந் நூலைச் சேர்ந்த பிரச்னை இல்லை.

சூரிய வெளிச்சமும் காற்றும் மழையும் சமுத்திரங் களும் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள். ஆனால்

இவைகளை மனித அதிகாரத்திற்கு உள்ளாக்கி வேண்டிய வாறு விநியோகிக்க முடியாது. ஆதலால், இவ்வித பொருள்களையும் செல்வத்தில் சேர்க்கலாகாது.

செல்வத்தின் முக்கிய லக்ஷணம் மதிப்பு அல்லது பெறுமானம். இம் மதிப்பு அந்தந்தப் பொருள்களுக்குள்ள கிராக்கியினால் ஏற்படுகிறது. சலவைக்கல் மலைக்கு அருகில் இருக்கும் கிராமத்தில் செங்கல்லின் விலை சலவைக்கல்லின் விலையைவிட அதிகமாக இருக்கலாம். ஒரு பொருளை விரும்புவோர்கள் அதிகமாகவும் இருந்தால் அப் பொருளின் விலை அதிகமாகும். அவ்வாறே எவ்வளவு உபயோகமான பொருளாயினும் சுலபமாகக் கிடைக்கக் கூடுமாயின் அதன் மதிப்புக் குறைவுதான். சாதாரண காலங்களில் தங்கமும், வைரமும் மிகவும் மதிப்புள்ளவை. உலகில் அவற்றிக்குத் தேவை எவ்வளவுண்டோ அதில் ஒரு பகுதிதான் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் பஞ்ச காலங்களிலும், யுத்த காலங்களிலும் உணவுக்குக் கிராக்கி அதிகரித்துத் தங்கத்திற்கும் வைரத்திற்கும் விலை குறைந்து போய்விடும்.

ஒரு பொருளின் மதிப்பை அதற்கு மாற்றாகக் கொடுக்கப்படும் இதர பொருள்களைக் கொண்டு கணக்கிட வேண்டும். ஒரு மாட்டைக் கொடுத்து ஐந்து ஆடு வாங்கினால், மாட்டின் மதிப்பு ஆட்டை விட ஐந்து மடங்காகும். முன் காலங்களில் பண்டங்களை நேரில் மாற்றியே சமூக விவகாரங்கள் பெரும்பாலும் நடைபெற்று வந்தன. இதனால் பல அசௌகரியங்கள் விளைந்தபடியால் மதிப்பை அளக்கும் கருவியாக நாணயம் ஏற்பட்டது. சாதாரணமாக எல்லோரும் விரும்பக் கூடியவைகளாகவும், சுலபத்தில் கிடைக்கக் கூடாதவைகளுமான தங்கம், வெள்ளி உலோகங்களில் நாணயங்கள் செய்யப்பட்டன. இவைதான் பணம் என்று சொல்லப் படுகின்றன. முன் காலத்தில் இந்த நாணயங்களின் கனத்தையும், கலப்பின்மையையும் அறிவிக்கவே அரசாங்க முத்திரை போடப்பட்டது. நாணயத்தின் மதிப்பு அதிலிருக்கும் தங்கம், வெள்ளியின் மதிப்பாக விருந்தது. இக் காலத்தில் காகித நோட்டுகள் தோன்றி

ஏறக்குறைய இந்த நாணயங்களை விரட்டிவிட்டன. இதைப் பற்றி பின்னால் விவரித்துச் சொல்லப்படும்.

பொருளின் மதிப்பை நாணயத்தில் குறிப்பிட்டால் அதற்கு 'விலை' என்று சொல்வார்கள். ஒரு சாமானுடைய விலை மூன்று விஷயங்களைப் பொறுத்திருக்கிறது:—(1) அதன் தேவை; (2) அதன் சப்ளை; (3) வியாபாரமாகும் பிரதேசத்தில் வழங்கும் நாணயச் செலாவணி. தேவை அதிகமாகி மற்றிரண்டும் மாறாமலிருந்தால் விலை அதிகமாகும். சப்ளை அதிகமாகி மற்றிரண்டும் மாறாமலிருந்தால் விலை குறையும். ஒரு பிரதேசத்தில் செலாவணியிலுள்ள மொத்த நாணயம் அதிகரித்தால், எல்லாச் சாமான்களின் விலைகளும் உயரும்; குறைந்தால், விலைகளும் குறையும்.

ஒரு பொருளின் தேவையையும் சப்ளையையும் பொறுத்து அதற்குக் கிராக்கி ஏற்படுகிறது. அந்தக் கிராக்கியே அதன் விலையை நிர்ணயிக்கு மென்று மேலே கூறப்பட்டது. பொருளை உற்பத்தி செய்யும் செலவுக்குக் குறைந்து அதை நீண்ட நாள் விற்க முடியாது. நஷ்டம் அதிகமாகி உற்பத்தி குறைந்து விடும். அதன் பலனாக விலை உயர்ந்து விடும். அவ்வாறே, உற்பத்திச் செலவுக்கு மேல் அதிக லாபம் வைத்து விற்றாலும், அப் பொருளை உற்பத்தி செய்வோர்கள் அதிகரித்து, கிராக்கி குறைந்து விலையும் குறைந்து போகும். ஆதலால் எல்லோரும் தடையின்றிப் போட்டி போட்டு உற்பத்தி செய்து வியாபாரம் செய்யக் கூடிய பொருள்களின் விலைகள் அவற்றின் உற்பத்திச் செலவுகளைப் பொறுத்திருக்கும். போட்டியின்றி உற்பத்தியோ, விற்பனையோ ஒருவர் அதிகாரத்திற்குள் அகபட்டுவிட்டால் இந்த நியாயம் பலிக்காது. வாங்குவோர்களின் சக்தியை அனுசரித்துக் கூடியவரையில் உயர்ந்த விலைக்கே விற்பார்கள்.

இவ்வாறே அபூர்வ சாமான்களின் விலைகளும் எவ்வித நியாயத்திற்குள்ளும் அகப்பட மாட்டா. ஒரு அரிய நூலுக்கோ, சித்திரத்திற்கோ விலை அதை வாங்குவோர்களின் உற்சாகத்தையும், சக்தியையுமே பொறுத்திருக்கும். ஐயா

யிரம் வருடத்திற்கு முன்னிருந்த ஒரு மனிதனுடைய மண்டை ஓட்டிற்குச் சரித்திர ஆராய்ச்சி செய்யும் கலாசாலைகள் போட்டி போட்டுக்கொண்டு பதினாயிரம் ரூபாய்கள் கூடக் கொடுக்க முன்வரக் கூடும்.

செல்வமும், அதன் மதிப்பும்,விலையும் சமூக ஏற்பாடுகளைப் பொறுத்திருக்கின்றன. பண்டைக் காலத்தில் மனிதன் தன் குடும்பத்துக்கு வேண்டிய பொருள்களைத் தானே தேடிக் கொள்வது வழக்கம். இந்த நாட்களில் குண்டூசி போன்ற சிறிய சாமான்கள் செய்வதற்குக் கூட அரசாங்கமும், சட்டங்களும், கோர்ட்டுகளும் பலவித சமூக ஒத்துழைப்புகளும் தேவையாயிருக்கின்றன. இந்த சட்டங்களும், ஏற்பாடுகளும் சமூகத்தில் உற்பத்தியாகும் செல்வத்தை அதன் அங்கத்தினர்களிடம் பல வழிகளில் பிரித்துக் கொடுக்கின்றன. இவைகளை தெய்வீக விதிகளாகவோ, பிறப்பு உரிமைகளாகவோ நினைப்பது தவறு. செல்வப் பிரிவினை மிகவும் சிக்கலான பிரச்னை என்பதில் சந்தேகமில்லை. பாம்பரையாக வந்திருக்கும் ஏற்பாடுகளைத் திடீரென்று பலாபலன்களை அறியாமல் கலைத்தால் குழப்பமும், கஷ்டமும் உண்டாகும். ஜாக்கிரதையாகத் தீர்க்காலோசனை செய்து மாற்ற வேண்டும். ஆனால் பணக்காரர்கள் தங்கள் சொத்து உரிமைகளுக்கு மதத்தையும் தர்மத்தையும் ஆதாரமாக அழைப்பது வழக்கம். இது தவறு. ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் செல்வத்திற்கெல்லாம், அதன் அமைப்பும், சட்டங்களுமே காரணமாவன. அவைகளைக் காலத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் உரிமையை எந்த சமூகமும் விட்டுவிட முடியாது.

# செல்வத்தின் சொரூபங்கள்

## உழைப்பு

உழைப்பில்லாமல் செல்வமில்லை. காட்டில் பழுத்திருக்கும் பழத்தைக்கூடச் சிலர் பறித்துக் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் கொண்டுவந்து கொடுக்கவேண்டும். கடற்கரையில் கணக்கற்றுக் கிடைக்கும் மணலைத் தோட்டத்திற்குக் கொண்டுவரக்கூட உழைப்பு அவசியம். தான்யங்களை பயிர் செய்வதும், சுரங்கங்களைத் தோண்டி உலோகங்களை எடுப்பதும் மிகப் பிரயாசையான காரியம். ஆதலால், செல்வத்தின் முதல் தோற்றம் உழைப்பு என்று சொல்வது பிசையாகாது.

உழைப்பென்றால், தேகப் பிரயாசை மட்டுமல்ல. சமூகத்திற்குத் தேவையான எந்த வேலையும் உழைப்புத்தான். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக இருப்பதும், ஆபீஸில் குமாஸ்தா வேலை செய்வதும், வக்கீல், டாக்டர் முதலிய தொழில்கள் புரிவதும் உழைப்புத்தான். தேகப் பிரயாசைக்கும், மூளை வேலையைப் பிரதானமாகக் கொண்ட உழைப்பிற்கும் நடுவில் பலவிதத் தொழில்கள் உண்டு. இயந்திரசாலைகளில் வேலை செய்வதற்கும், ஆகாய விமானம் ஓட்டுவதற்கும் தேகமும், மூளையும் சேர்ந்து வேலை செய்ய வேண்டும்.

உழைப்பின் மதிப்பு அல்லது விலையைக் கூலி என்பது வழக்கம். மற்றப் பொருள்களைப் போலவே உழைப்பின் விலையும் அதன் கிராக்கியைப் பொருத்திருக்கிறது; உழைப்பின் அவசியத்தையும், பிரயோசனத்தையும் பொருத்திருப்பதில்லை. எந்த வேலையைச் செய்வதற்குப் பலர் தயாராக இருக்கிறார்களோ, அதற்குக் குறைந்த கூலி கொடுப்பார்கள். தான்யம் பயிர் செய்யாவிட்டால் சமூகம் பிழைக்காது. ஆயினும் எங்கும் விவசாயிக்கு மிகவும் குறைந்த கூலி கிடைக்கிறது. ஏனென்றால், பெரும்பாலோர் இவ் வேலையில் பழகியிருக்கிறார்கள். ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் கீழ்த்தர குமாஸ்தாக்களுக்கும் அல்ப சம்பளம் கிடைப்பதற்கு இதுதான் காரணம்.

கூலி மாதாந்திரம் கணக்காகக் கொடுக்கப்பட்டால் அதற்குச் சம்பளம் என்று பெயர். வியாபாரம், வக்கீல் முதலிய தொழில்களில் கிடைக்கும் கூலி சில மாதம் கூடியும், மற்ற மாதங்களில் குறைந்தும் வரும். அதை வருமானம் என்பார்கள்.

உழைப்பையும் ஒரு பொருளாக நினைத்து அதன் விலையையும் கிராக்கியைக்கொண்டு நிர்ணயிப்பதால் பல அனர்த்தங்கள் விளைகின்றன. பட்டினிக்குப் பயந்து மனிதன் எவ்வளவு சொற்ப கூலியையும் பெற்றுக் கொள்வான். ஆதலால் தொழிலாளிகள் மிகுந்த தேசங்களில் கூலியைக் குறைப்பது சுலபம். இம்மாதிரி கூலி குறைந்துகொண்டே போய்க் கடைசியில் அல்ப ஜீவனத்துக்கு அவசியமான அளவில் வந்து நிற்கும். இப்படிக் கூலி குறையும்பொழுது ஆரோக்கியமும் தேக வலிமையும் குன்றி உழைப்பின் தன்மையும் குறையும். இதனால் கூலி திரும்பவும் குறையும். இந்தப் பீடா சக்கரத்தில் அகப்பட்டுக் கேவலமான நிலையில் இருக்கும் தேசங்களில் இந்தியாவும் ஒன்று. தினம் ஒருஅணு, இரண்டணு சம்பளத்தில் வேலை செய்பவர்கள் இந் நாட்டில் கோடிக் கணக்கில் உளர்.

உழைப்பிற்குத் தனி கௌரவம் கொடுத்து அதற்குக் கொடுக்கவேண்டிய கூலிக்கு நியமங்கள் ஏற்படுத்துவது அவசியம் என்ற அபிப்பிராயம் உலகெங்கும் பரவி வருகிறது. பல தேசங்களில் கூலி வரம்புகள் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன; சட்டங்களினாலும், தொழிலாளிச் சங்கங் களின் கட்டுப்பாடுகளினாலும் ஒவ்வோர் தொழிலுக்கும் குறிப் பிட்ட கூலி விகிதத்திற்குக் குறையக் கூடாதென்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

தொழில் திறமையை விருத்தி செய்வதற்கு நல்ல கூலி மட்டும் போதாது. சிறந்த கல்வி முறையும் வேண்டும். கல்வி, புஸ்தகப் படிப்பு மட்டுமல்ல. தொழிற் பயிற்சியும் மிக அவசியம்.

ஒருவன் சுதந்திரமாகத் தொழில் செய்து பொருள்களைத் தயாரித்துச் சம்பாதிக்கலாம்; அல்லது, முதலாளிகளுக்காக உழைத்துக் கூலி பெறலாம். சமூகத்திற்காக வேலைசெய்து ஊதியமடையலாம். பழைய நாகரிகங்களில் முதலில் சொல்லிய வகுப்பைச் சேர்ந்த கிராமக் கைத்தொழிலாளிகளே பெரும் பாலோராக விருந்தனர். இக் காலத்தில் இயந்திரத் தொழில் களின் பெருக்கினால் முதலாளிகளிடம் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இம்மாதிரி முதலாளி களிடம் கூலிக்கு வேலை செய்வதால் தொழிலாளிக்கு வேலை யில் பிரியம் குறைந்து, மற்றும் பல தீமைகள் உண்டாவதால், தனி முதலாளிகளையே நீக்கிவிட்டு, எல்லாத் தொழிற் சாலை களையும் சமூகப் பொதுச் சொத்துக்கள் ஆக்கவேண்டுமென்ற வாதம் வளர்ந்து வருகின்றது. இதையே அபேதவாதம் என்றும், பொது உடைமை யென்றும் சொல்லுவார்கள்.

## சொத்து

ஒரு மனிதனோ, குடும்பமோ, சிறு கூட்டத்தாரோ பிரத்தியேகமாக அனுபவிக்க உரிமையுள்ள பொருள் களுக்குச் 'சொத்து' என்பார்கள். முன் காலங்களில் நிலம், வீடு, ஆடுமாடுகள், பாத்திரங்கள், நகைகள் இவைகளே முக்கிய சொத்துக்களாக இருந்தன. இந் நாட்களிலோ, பாங்கில்

நிதியாகவும், கம்பெனிப் பங்குகளாகவும், கடன் பத்திரங்களாகவும் வைத்திருக்கும் சொத்தே அதிகமாக விரும்பப்படுகின்றன.

சொத்துச் சேருவதற்குப் பல வழிகளுண்டு. வேலை செய்துவரும் கூலி, சம்பளம், அல்லது வருமானத்தில் கொஞ்சம் கொஞ்சம் மிகுதியாக வைத்துச் சேர்க்கலாம். ஆனால், இவ்வாறு அதிக சொத்து சேர்ப்பதற்கு பல தலைமுறைகள் ஆகும். ஆதலால், பெரிய சொத்துக்கள் சேருவது இதர வழிகளில்தான். தான் பயிர் செய்வதற்கு அதிகமான நிலம் வைத்திருப்பவன் அதை நிலமில்லாத குடியானவனிடம் கொடுக்கிறான். அதற்குப் பதிலாக மகசூலில் ஒரு பாகத்தை எடுத்துக் கொள்கிறான். இதைக் 'குத்தகை' என்று சொல்வது வழக்கம். தானிருப்பதற்கு அவசியமில்லாத வீட்டை வாடகைக்கு விடுகிறான். நிலத்தையும், வீட்டையும் போலவே செலவுக்குப் போக மிஞ்சியிருக்கும் பணத்தையும் வாடகைக்கு விடுகிறார்கள். இந்த வாடகைக்குப் பெயர் 'வட்டி.' பணத்தைக் கடனாகக் கொடுக்காமல் ஒரு கம்பெனியில் பங்காகப் போட்டால் அதற்கு வரும் வாடகையை 'லாபம்' என்று சொல்லுகிறோம். இந்தக் 'குத்தகை,' 'வாடகை,' 'வட்டி,' 'லாபம்' எல்லாம் ஒரே தன்மை யுடையவை. அதாவது சொத்துக்காரன் சொத்து இல்லாதவர்களிடம் கப்பம் வாங்குகிறான். இம்மாதிரி கப்பம் வாங்குவது சமூகத்திற்கு உகந்ததா என்பது சிக்கலான பிரச்னை. வட்டி வாங்குவதே கூடாது என்று மகம்மது நபி கட்டளையிட்டார். ஹிந்து நியதிப்படி முதலுக்குமேல், வட்டி வாங்கக் கூடாது. நிலத்துக்கும், வீட்டிற்கும் வாங்கும் வாடகைகளுக்கு வரம்புகள் செய்து பல நாடுகளில் சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஒருவன் தன் ஆயுளில் சேர்க்கும் சொத்து அவனுக்குப் பிறகு அவன் குடும்பத்தாரைச் சேருகின்றது. இதைப் பற்றியும் நியமங்கள் பலவகைப் பட்டிருக்கின்றன. இந்து சமூகத்தில் தகப்பன் சொத்து அவன் புதல்வர்களுக்குச்

சரியாகப் பங்கு போடப்படுகின்றன. மகன் இல்லாவிட்டால் தான் பெண்சாதிக்கும், பெண்களுக்கும் பாத்தியம் உண்டு. மகம்மதியர்களுக்குள் ஒருவன் சொத்தை அவன் பிள்ளைகள், பெண்கள், மனைவி, தாய் தந்தையர் ஆகிய எல்லோரும் அவரவர்க்கு விதிக்கப்பட்ட பாகப்படி எடுத்துக் கொள்கிறார் கள். இந்த வழக்கங்களை மீறித் தனக்குப் பிற்காலம் வேண்டியவர்களுக்கு எழுதிவைக்கும் உரிமையும் பலவாறு வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு செய்யும் பத்திரத்திற்கு 'உயில்' என்று பெயர். இந்து குடும்பத்தில் பிள்ளைகள் இருக்கும்பொழுது பிதுரார்ஜித சொத்தை உயில் செய்து பிறருக்குக் கொடுத்துவிட முடியாது. தான் சொந்தமாகச் சம்பாதித்த சொத்தை அவ்வாறு செய்துவிடலாம்.

பொதுவாகப் பெண்களுக்குச் சொத்துரிமை குறைவு இந்துக்களுக்குள் நிலம் முதலிய ஸ்திரமான சொத்துக்களை உயிருள்ளவரை அனுபவிக்கும் உரிமைதான் சாதாரணமாக ஸ்திரீகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

சொத்துரிமையை நான்கு வழிகளில் அனுபவிக்கலாம். சொத்துக்காரன் அதைத் தன் உபயோகத்திற்கே வைத்துக் கொள்ளலாம். அல்லது, வாடகைக்கு விட்டு வருமானம் பெறலாம். மூன்றாவதாக, சொத்தை அடைமானம் வைத்துக் கடன் வாங்கலாம். நான்காவதாக அதை விற்று விட்டு வேறு சொத்தாக மாற்றிக் கொள்ளலாம். இந்த உரிமை களை அனுபவிக்கப் பல நியமங்கள் செய்யப்படுகின்றன. ஸ்திரமான சொத்துக்களை விற்கும் பொழுதோ, நீண்ட நாள் வாடகைக்கு விடும் பொழுதோ, அடைமானம் வைக்கும் பொழுதோ ரிஜிஸ்டர் செய்ய வேண்டும்.

சொத்துரிமையின் காரணமாகச் சொத்துக்காரர்கள் சமூகத்திற்கு உபயோகமான எவ்வித உழைப்பு மின்றிக் காலங் கழிப்பதற்கு அவகாசம் கிடைக்கிறது. அப்படி அவர்கள் உழைத்துச் சம்பாதித்தால் சொத்து வளர்ந்து சந்ததியார்கள் சும்மாவிருந்து சுக ஜீவனம் செய்ய ஏதுவாகின்றது.

## முதல்

ஒரு தொழிலுக்குச் சாதனமான கருவிகளை முதல் என்று சொல்லலாம். தச்சனுக்கு முதல் அவன் உளி, ரம்பம், சுத்தி முதலிய ஆயுதங்கள். எல்லாக் கருவிகளும் பணத்தால் வரக்கூடுமாதலால் தொழில் சாதனங்களுக்காகச் செலவழிக்கும் பணத்தை முதல் என்பது வழக்கம். முன் காலத்தில், குடிசைத் தொழில்களுக்கு அதிக முதல் தேவையில்லை. வியாபாரத்திற்குத்தான் கொஞ்சம் முதல் அவசியமா யிருந்தது.

இயந்திரத் தொழில்கள் தோன்றியதிலிருந்து தொழிற்சாலைகளுக்கு அதிக முதல் தேவையாயிருக்கிறது. இக் காலத்தில் ஒரு துணி மில் வைக்கவேண்டுமானாலும், ஒரு தினசரிப் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமானாலும் லக்ஷக் கணக்கான ரூபாய் முதல் வேண்டும்.

அவ்வளவு அதிகமான முதல் தனிப்பட்ட ஆசாமிகளால் போடுவது சாதாரணமாகச் சாத்தியமில்லை. அதற்காகக் கம்பெனிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஒரு கம்பெனிக்கு வேண்டிய முதலைப் பல சிறிய பங்குகளாகப் பிரித்துக் கொடுத்துச் சிறிய தொகைகளாக வசூல் செய்து சேர்க்கிறார்கள். பங்குதாரர்கள் கூடிக் கம்பெனியின் நிர்வாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். சாதாரணமாக நிர்வாகத்தில் முக்கிய அதிகாரத்திற்கு வேண்டிய பங்குகளைச் சில முதலாளிகள் சேர்ந்து எடுத்துக்கொண்டு மீதியைப் பொதுஜனங்களிடம் கொடுக்கிறார்கள். கம்பெனியின் லாபத்தைப் பங்குதாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறார்கள். இதற்கு 'டிவிடெண்ட்' என்று பெயர்.

இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய பணக்கார தேசங்களின் வருட வருமானத்தில் ஒரு பெரிய பகுதி முதலாகப் போடப்படுகிறது. இந்த முதலைக் கொண்டு புதிய புதிய தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. அவைகளில் உற்பத்தியாகும் சரக்குகள் குவிந்து வெளி நாடுகளில் மார்க்கெட் தேட

வேண்டி யிருக்கிறது. இதற்காகப் போட்டி ஏற்பட்டு, பெரிய சண்டைகளும் உண்டாகின்றன.

தம் நாட்டில் முதல் போடுவதற்கு வசதிகள் இல்லாமல் போனாலும் அல்லது போதிய லாபம் கிடைக்காமல் போனாலும் அதை வெளி நாடுகளுக்குக் கொண்டுபோய் அங்கே தொழிற்சாலைகள் ஏற்படுத்தி லாபம் சம்பாதிக்க முதலாளிகள் முயலுகின்றனர். முதலாளிகள் என்றால் சொந்தமாக அதிகப் பணம் வைத்திருப்பவர்கள் என்று எண்ண வேண்டியதில்லை. கம்பெனிகளை ஏற்படுத்திப் பிறர் பணத்தைத் திரட்டும் சக்தி யுடையவர்களே உண்மையான முதலாளிகள். இவ்வாறு ஒரு தேசத்து முதலாளிகள் மற்றோர் தேசத்தில் அதிக முதல் போட்டுவிட்டால் அதைப் பாதுகாக்க அத் தேசத்தின் அரசாங்கத்தில் செல்வாக்கு சம்பாதிக்க முயலுகின்றனர். தங்கள் தேசத்தின் அரசாங்கத்தின் கீழ் அந்த ராஜ்யங்களைக் கொண்டுவர முயற்சி செய்கின்றனர். முதலாளிகள் செழித்துள்ள தேசங்களில் இக் காலத்திய ஆயுதங்கள் செய்ய நல்ல வசதிகள் இருப்பதாலும், இதர தேசங்களில் தொழிற்சாலைகளின் குறைவால் ஆயுத பலம் குறைந்திருப்பதாலும் பலஹீனமான தேசங்களைத் தம் வசப்படுத்தி அவைகளைத் தம் தொழிலுக்கும், முதலுக்கும் அடிமையாகக் கொண்டுவர பலம் படைத்த ராஜ்யங்கள் முயலுகின்றன.

இயந்திரத் தொழில் தனி முதலாளிகளாலும், கம்பெனி முதலாளிகளாலும் செய்யப்படுவதால் மற்றொரு விளைவும் ஏற்படுகிறது. ஒரு தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் சேர்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது. தினந்தோறும் தங்களுக்குக் கிடைக்கும் அல்ப கூலியையும், இயந்திரசாலைகளை நடத்தும் பெரிய முதலாளிகளின் ராஜ போகத்தையும் தொழிலாளிகள் சிந்திப்பது சகஜமாகிறது. நாளடைவில், தொழிலாளிகள் சங்கங்களாகச் சேர்ந்தும், அவர்களுக்கு எதிராக முதலாளிகள் கட்சி கட்டியும் ஜன சமூகமே முதலாளி தொழிலாளி என்ற இரண்டு வகுப்பாகப் பிரிந்து போகின்றது. வேலை செய்யாமல் சொத்தை வைத்-

துக் கொண்டு ஜீவிப்போர்களும் உழைப்பினல் பிழைப்போரும் எந்தக் காலத்திலும், இருந்து வந்திருக்கிற போதிலும், இம்மாதிரி இரண்டு கட்சிகளாக இக் காலத்தில்தான் பிரிவினை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவினையின் பலனுக நாளடைவில் தொழிலாளிகளின் கட்சி வலுத்து, முதலாளிக் கூட்டம் ஒழிந்து சமதர்ம சமூகம் அவசியம் ஏற்படும் என்பது கார்ல் மார்க்ஸ் (**Karl Marx**) என்னும் மேனுட்டுப் பொருளாதார விஞ்ஞானியின் சித்தாந்தம். இந்த சித்தாந்தக்காரர்கள் ருஷியாவில் புரட்சி செய்து பொதுவுடைமை அரசாங்கம் ஸ்தாபித்து நடத்துகிருர்கள். இம்மாதிரி கட்சிப்பிரிவினை அனர்த்தம்தான் என்பதும், ஆனல் உலகத்தில் எல்லோரையும் தொழிலாளிகளாகச் செய்வது இயற்கைக்கு விரோதம் என்பதும், இருகட்சிகளும் ராஜ்யாதிகாரத்திற்கு உட்பட்டு சமூக நன்மையையே முக்கிய நோக்கமாகக் கொண்டு வேலை செய்ய வேண்டும் என்பதும் ஹிட்லர், முஸோலினி முதலியோர்களின் நாஜி, பாஸிஸ்ட் கொள்கை. வரம்பில்லாத முதலாளித் தத்துவத்தால் சில கேடுகள் உண்டாவது உண்மையாயினும், அவற்றைத் தடுப்பது அவசியமாக இருந்தாலும், முதலாளித் தத்துவத்தின் கீழே சுதந்திரமும், செல்வ விருத்தியும், ஜனநாயகமும் சாத்தியம் என்பது ஆங்கில, அமெரிக்க முதலாளித் தத்துவ வாதிகளின் முடிவு. இக் காலத்தில் இம் மூன்று வாதங்களும் ஒன்றையொன்று எதிர்த்து நேர்முகமாகவும் மறைமுகமாகவும் போர் புரிந்து வருகின்றன.

அதிக முதல் சேர்த்து இயந்திரசாலைகளை விருத்தி செய்வதால் பல தீமைகள் அவசியம் உண்டாகியே தீருமென்பதும், இவற்றை எந்த வாதத்தாலும் நீக்க முடியாதென்பதும் கூடிய வரையில் கிராமக் கைத்தொழில்களையே விருத்தி செய்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைத்த சமூகமே சுகமும் சுதந்திரமும் நிரம்பி யிருக்குமென்பதும் காந்தியடிகளின் உபதேசம்.

இந்த வாதங்களின் தத்துவங்கள் எல்லாம் ‘இந்தியாவும் பொதுநல சமுதாயமும்’ என்ற நூலில் விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றன.

## பணம்

சாதாரணமாகச் செல்வத்தையும் பணத்தையும் ஒன்ருக நினைத்துக்கொள்கிறேம். இது தவறு. ஒருவனிடம் ஆயிரம் ரூபாய் இருக்கிறதென்ருல் அதன் அர்த்த மென்ன? ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள உணவு, உடை முதலிய சௌகரியங் களை அவன் மற்றவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ள முடியு மென்பதே. பணம் ஒரு கணக்கு. அந்தக் கணக்கை ஒப்புக் கொள்ளும் ஒரு சமுதாயத்தில்தான் அது செல்லும். பையில் ஆயிரம் ரூபாய் இந்திய சர்க்கார் நோட்டைப் போட்டுக்கொண்டு ஜப்பான் அல்லது அமெரிக்கா போனல் அதைக் கொண்டு ஒன்றும் வாங்க முடியாது. முதலில் ஜப்பானிய நாணயமான 'யென்' ஆகவோ அல்லது அமெரிக்க நாணயமான 'டாலர்' ஆகவோ மாற்றிக்கொள்ள வேண்டும்.

பணத்தைச் செல்வமாக நினைப்பதற்கு ஒரு முக்கிய காரணமுண்டு. முன் காலங்களில் நாணயங்கள் தங்கத்திலும் வெள்ளியிலுமே இருந்தன. தங்கமும், வெள்ளியும் அபூர் வமான உலோகங்கள். அவைகளை எக்காலத்திலும் ஜனங் கள் நகைகளுக்காகவும், பாத்திரங்களுக்காகவும், கோவில், அரண்மனை முதலியவற்றின் அலங்காரங்களுக்காகவும் விரும்பி யிருக்கிருர்கள். எப்பொழுது வேண்டுமானலும், எவருடைய தயவையும் எதிர்பார்க்காமல், தங்கத்தையும் வெள்ளியையும் கொடுத்துவிட்டு வேறு சாமான்களை வாங்கிக்கொள்ளலாம். அவைகளால் செய்யப்பட்ட நாணயங்களுக்கு அவற்றிலுள்ள தங்கம் வெள்ளியின் மதிப்புத்தான் இருந்தது.

வெகு காலம் இந் நிலைமை உலகெங்கும் இருந்து வந்தது. இக் காரணத்தால் பெரிய அரசர்களும் அரசாங் கங்களும் கூடப் பணத்திற்குக் கஷ்டப்படுவதுண்டு. முன் காலத்தில் ஒரு அரசனுக்கு ஒரு கோடி ரூபாய் வேண்டு மென்ருல் அப் பெறுமானமுள்ள தங்கமோ, வெள்ளியோ வேண்டும். அதைக் கொடுக்கக் கூடிய சில தனிகர்களிட மிருந்து நயத்தாலோ, பயத்தாலோ எடுத்துக் கொள்ள வேண்டி யிருந்தது.

அந் நிலை இப்பொழுது முற்றிலும் மாறிவிட்டது. இதற்குக் காரணம் காகித நாணயந்தான். உலகெங்கும் தங்க நாணயமே மறைந்து விட்டது. சில்லறைக்காகவே வெள்ளி நாணயம் பெரும்பாலும் உபயோகப் படுகிறது. இந்தியாவில் ரூபாய் செலாவணியாக வில்லையா என்று கேட்கலாம். உண்மையில் நமது ரூபாயும் ஒரு காகித நாணயம் போன்றதே. ரூபாயில் உள்ள வெள்ளியின் விலை அரை ரூபாய்தான். நமது கிராமங்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் வெறும் காகித நாணயத்தை நம்பமாட்டார்களென்று இந்தப் போலி வெள்ளி நாணயம் வழங்கப்பட்டு வருகின்றது.

எந்த தேசத்திலும் காகித நாணயம் போடுவது சர்க்கார் கையில்தான் இருக்கும்; அல்லது, சர்க்காருக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு தனி பாங்கியின் கையில்தான் இருக்கும். காகித நாணயத்தின் பெறுமானம் சர்க்கார் சட்டத்தைப் பொறுத்திருக்கிறது. ஆனால், எந்த சர்க்காரும் மனம் போனபடி காகித நாணயத்தை வழங்கிவிட முடியாது. ஒரு சமூகத்தில் ஒரு சமயத்தில் செலாவணியில் இருக்கும் நாணயத்தின் மொத்தத்திற்கும் விலை வாசிகளுக்கும் நெருங்கிய சம்பந்த முண்டு. சாமான்களின் உற்பத்தி அதிகரிக்காமல் நாணயம் மட்டும் அதிகரித்தால் விலை வாசிகள் உயரும் என்று முன்னமேயே கூறப்பட்டிருக்கிறது. அதனால் கூலிகளும், சம்பளங்களும் உயர வேண்டி வரும். கணக்கின்றி காகித நாணயத்தை விருத்தி செய்துவிட்டால் அதன் மதிப்புக் குறைந்துகொண்டே போய்க் கடைசியில் ஒவ்வொரு சிறிய சாமானின் விலையும் மிகப் பெரிய தொகையாகி விடும். இப்படித்தான் சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியில் ஒரு நாள் சாப்பாட்டுக்கு லக்ஷக்கணக்கான மார்க்குகள் (ஜெர்மன் நாணயம்) கொடுக்க வேண்டியதாயிற்று. கடைசியில், ஜெர்மன் அரசாங்கத்தார் முன்னிருந்த மார்க்குகளை யெல்லாம் ரத்து செய்துவிட்டு, புதியவற்றை அச்சிட்டு அதன் மதிப்பை ஸ்திரமாக வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள்.

உள் நாட்டு விலைகளை நிர்ணயிப்பது மட்டும் நாணயத்தின் உபயோகமல்ல. வெளி நாடுகளோடு செய்யப்படும் வியாபாரத்தை நடத்துவதற்கு உதவ வேண்டும். உள் நாட்டு நாணயத்தை அந்நிய நாணயமாக மாற்றவும், அந்நிய நாட்டு நாணயத்தை உள் நாட்டு நாணயமாக மாற்றவும் அவைகளின் பரஸ்பர மதிப்புக் கூடியவரையில் ஸ்திரமாக இருக்க வேண்டும். இன்றைக்கு டாலருக்கு மூன்றரை ரூபாயாக இருக்கிறது. நாளைக்கு ஐந்தேகால் ரூபாயாகி விட்டால், அமெரிக்காவிலிருந்து வரும் சாமான்களுக்குப் பாதி மடங்கு விலை அதிகரித்துவிடும். அப்படியே அமெரிக்காவில் இந்திய சாமான்களின் விலை மூன்றில் ஒரு பங்கு குறைந்துவிடும். உள் நாட்டு விலைகள் ஸ்திரமாகவும், அந்நிய நாட்டில் நாணயத்தின் மதிப்பு வியாபாரத்திற்குச் சாதகமாகவும் இருக்கும்படி நாணயச் செலாவணியைப் பெருக்கியும், சுருக்கியும் நிர்வகிப்பது இக்காலத்து ராஜ தந்திரத்தில் ஒரு மகத்தான பொறுப்பாகும்.

இந்தியாவின் நாணயம் ரூபாய். இதற்குத் தற்சமயம் சொந்த மதிப்புக் கிடையாது. பிரிட்டிஷ் நாணயமான பவுன் ஸ்டர்லிங் கோடு ( £—Sterling ) சட்டத்தால் இணைக்கப் பட்டிருக்கிறது. 1914-ம் ௵ வரையில் பவுன் ஸ்டர்லிங்குக்கு 15 ரூபாயாக இருந்தது. சென்ற மகா யுத்தத்தில், ரூபாயிலுள்ள வெள்ளியின் விலை ரூபாயைவிட அதிகரிக்கவே ரூபாயின் ஸ்டர்லிங் மதிப்பை ஏற்றிக் கொண்டே போனார்கள். ஒரு சமயத்தில் பவுன் ஸ்டர்லிங்குக்கு எட்டு ரூபாய் வரையில் வந்தது. பிறகு 10 ரூபாய் ஆக்கினார்கள். கடைசியில் 1920-ம் வருஷத்தில் பவுன் ஸ்டர்லிங்குக்கு ரூ. 13-5-4 நிர்ணயித்தார்கள். இந்த விகிதம் இன்னும் அமுலில் இருந்து வருகிறது. இம்மாதிரி ரூபாயும் ஸ்டர்லிங்கும் பிணைக்கப்பட்டிருப்பதால் நாணயங்களில் பவுனின் மதிப்பு ஏறினால், ரூபாயின் மதிப்பு தானாகவே ஏறுகிறது; குறைந்தால் குறைகிறது. உதாரணமாக 1931-ம் வருஷத்தில் பவுன் ஸ்டர்லிங்கின் மதிப்பைத்

திடீரென்று ஐந்து டாலரிலிருந்து 3 டாலருக்குக் குறைத் தார்கள். அப்பொழுது ரூபாயின் மதிப்பும் குறைந்து டாலரின் விலை உயர்ந்தது, $2\frac{3}{4}$ ரூபாயாகவிருந்த டாலர் $4\frac{1}{2}$ ரூபா யாகி விட்டது. டாலர் மதிப்பு உயர்ந்ததால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிக மாக ஆரம்பித்தது. இதைத் தடுக்க டாலர் மதிப்பை அமெரிக்க அரசாங்கத்தார் குறைத்து விட்டனர். இப் பொழுது பவுனுக்கு 4 டாலராக இருக்கிறது. ஆதலால் ஒரு டாலர் விலை சுமார் ரூ. 3-6-0.

ஒரு நாட்டின் நாணயத்தின் மதிப்புக் குறைந்தால் உள் நாட்டு விலைகள் அதிகரிக்கும். ஏற்றுமதியாகும் சாமான்களின் விலை வெளி நாடுகளில் குறையும். இதற்கு மாறாக வெளி நாடுகளி லிருந்து வரும் சாமான்களின் விலை உள் நாட்டில் அதிகரிக்கும். ஆதலால் ஏற்றுமதி வியா பாரம் அதிகரித்து இறக்குமதி குறையும். நாணய மதிப் புக் குறைவதால் வேறு பலன்களும் உண்டு.

நியதமான சம்பளங்களையும், கூலிகளையும் பெறுவோர் களின் செலவுகள் அதிகரிக்கும். கடன் தொகைகளின் மதிப்புக் குறைந்துவிடும். ரூபாயின் மதிப்பைப் பாதியாகச் செய்து விடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். உடனே அரிசி, பருப்பு, துணி முதலிவற்றின் விலைகள் இரட்டிப் பாகப் போய்விடும். ஆனால், கூலிகளும் சம்பளங்களும் உடனே உயரமாட்டா. 100 கலம் நெல் விற்றுக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் 50 கலத்தை விற்றுக் கொடுத்து விடுவார்கள்.

நாணய மதிப்பு உயர்ந்தால் மேற்கூறியதற்கு நேர் விரோதமான பலன்கள் உண்டாகும். உள் நாட்டு விலைகள் குறையும்; ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரிக்கும். ஸ்திரமான சம்பளம் வாங்குவோர் கூலிக்காரர் இவர்களின் செலவு குறையும். கிஸ்தி, கடன் முதலியவற்றின் பாரம் அதிகரிக்கும்.

இந்தக் குழப்பங்களெல்லாம் கொஞ்ச காலத்திற்குத் தான் இருக்கும். ஏனென்றால், நீண்ட காலத்தில் விலைவாசி களுக்குத் தகுந்தாற்போல் சம்பளம், கூலி, கிஸ்தி முதலிய வைகள் மாறிவிடுகின்றன. நாணயத்தின் மதிப்பு மாறு வதால் சில காலத்திற்குப் பெரிய குழப்பம் உண்டாவது நிச்சயம். ஆதலால், அதைக் கூடிய வரையில் ஸ்திரமாக வைத்திருப்பதே புத்திசாலித்தனமாகும். ஆனால், அவசியம் நேரிட்டபொழுது மாற்றாவிட்டால் பெரிய கஷ்டங்கள் நேரிடும். 1931-ம் வருடம் வரையில் பவுன் ஸ்டர்லிங் என்றால் தங்கப் பவுனின் மதிப்புக் குறிக்கப்பட்டது. ஆனால், அவ் வருடத்தில் இங்கிலாந்தில் பெரிய கஷ்டம் உண்டாகி பிரிட்டிஷ் நாணயத்தின் மதிப்பைக் குறைக்க வேண்டியதாயிற்று. தங்கப் பவுனுக்கும், காகித நாணய ஸ்டர்லிங் பவுனுக்கும் வித்தியாசம் ஏற்பட்டது. அப் பொழுது பவுனின் விலை ரூ. 28-8-0; பவுன் ஸ்டர்லிங் விலை ரூ. 13-5-4 ஆகவே தங்க மதிப்பில் பாதியாகி விட்டது.

இந்தியாவின் நாணயத்தை நிர்வகிப்பதற்கு ரிசர்வ் பாங்கி ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. அதுதான் ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வழங்கலாம். 100 ரூபாய் நோட்டுப் போட்டால், அதற்கு ஈடாக குறைந்தது 50 ரூபாய் பெறு மானமுள்ள தங்க மோகர் அல்லது பிரிட்டிஷ் சர்க்கார் பத் திரங்கள் கூட வைக்கப்படவேண்டும். மீதிக்கு ரூபாயாகவும், மத்திய, மாகாண சர்க்கார் கடன் பத்திரங்களாகவும் ஈடு வைக் கலாம். இந்த மகாயுத்தத்திற்கு முன் மேற்படி நான்கு வகை களிலும் ஏறக்குறைய கால் பாகம் இருந்தது. சென்ற மூன்று வருஷங்களில் பிரிட்டிஷ் சர்க்கார் பத்திரங்கள் அதிக மாகி, நமது நோட்டுகளுக்கு உள்ள ஈடு தொகையில் முக்காலே அரைக்கால் பாகம் இருக்கின்றன.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் இந்தியா இருப்பதால் என்னென்ன பலன்கள் அரசியலில் உண்டாகிறதோ, அதே மாதிரி பலன்கள் பண விஷயங்களில் பவுனோடு ரூபாய் சேர்க் கப்பட்டிருப்பதால் உண்டாகின்றன. பிரிட்டிஷ் கடற் படை

யால் இந்தியாவுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறது. அவ்விதமே பவுனின் மதிப்பால் ரூபாய்க்கும் மதிப்பு உண்டாகிறது. பாதுகாப்புக்குப் பதிலாக எவ்வாறு அரசியல் சுதந்திர மில்லையோ, அதனால் உண்டாகும் நலன்களும் இல்லையோ அவ்வாறே மதிப்புக்குப் பதிலாக பண சுதந்திரம் கிடையாது., நாணய சுதந்திரத்தால் உண்டாகும் செல்வப் பெருக்கு நமக்கு இல்லை. ஒரு நாட்டில் கடன் வசதிகள் இருந்தால், பல காரியங்களுக்கு அவைகள் சொத்து முதல் வைத்துக் கொண்டிருப்பதற்குச் சமானமாக உதவும். இவ் வசதிகள் மிகவும் வளர்ந்திருப்பது இக் காலத்து நாகரிகத்தின் ஒரு விசேஷ அம்சமாகும்.

## கடன்

முன் காலங்களிலும், அரசர்களும் பிரஜைகளும் கடன் வாங்குவதுண்டு. ஆனால், அப்பொழுது சிறிய தொகைகள்தான் கடன் வாங்க முடியும். பெரிய சக்ரவர்த்திகள் கூட ஒரு கோடி ரூபாய் கடன் வாங்குவதென்றால் மிகவும் பிரயாசையான காரியம். இப்பொழுது சென்னை மாகாண அரசாங்கத்தார் வருஷம் ஒன்றிரண்டு கோடி கடன் வாங்குகிறார்கள். இந்திய மத்தியசர்க்கார் இருபது கோடி வரை கடன் வாங்குவது வழக்கம். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நூறு, இருநூறு கோடிகள் கடன் வாங்குவது சகஜம். அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கவர்ன்மெண்டாரோ வழக்கமாக ஆயிரம், இரண்டாயிரம் கோடிகளுக்குக் குறைந்து வாங்குவதில்லை. பெரிய கம்பெனிகளும் லக்ஷம், பத்து லக்ஷம், கோடிக் கணக்கில்தான் வாங்குகின்றன.

ஒவ்வொரு அரசாங்கத்தாரும் கூடியவரையில் தம் பிரஜைகளிடமிருந்துதான் கடன் வாங்கப் பார்க்கிறார்கள்; முடியாவிட்டால் வெளிநாட்டில் வாங்குகிறார்கள். உள்நாட்டுக் கடனுக்கும், வெளிநாட்டுக் கடன்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. உள்நாட்டுக் கடன்களால் ஒரு தேசத்தின் மொத்த வருமானம் குறையாது. அந் நாட்டிற்குள் செல்வப் பிரிவினையில்தான் மாறுதல் ஏற்படுகிறது. வெளி நாட்டுக்

கடன்களுக்கு தேசத்தார் அனைவரும் சேர்ந்து உழைத்து வட்டி கொடுக்கவேண்டும்.

ஒரு சர்க்கார் கடன் வாங்கும்பொழுது பின்னால் இருபது, முப்பது வருஷங்களில் திருப்பிக் கொடுப்பதாகத் தவணை வைத்துக் கொள்வது வழக்கம். அதற்காகப் பிரத்தியோக வரி போடுவதும் வழக்கம். நாட்டின் செல்வத்தை வளர்க்கக்கூடிய செலவுகளுக்காகக் கடன் வாங்கியிருந்தால் பின்னால் வருபவர்களுக்குக் கஷ்டமிராது. அப்படியின்றி யுத்தம், ஆயுத பலம் முதலியன.வகளுக்குச் செலவழிக்கக் கடன் வாங்கினால் வரியின் பளு அதிகரிக்கும். ஜனங்களுக்கு அதிருப்தி வளருவதுமன்றிக் கடைசியில் திவாலாகப் போயோ, புரட்சியின் மூலமாகவோ இந்தக் கடன்களை யெல்லாம் ஒழித்து விடவேண்டி வரும்.

கவர்ன்மெண்டாரைத் தவிர, கம்பெனிகள், தனி ஆசாமிகள் வாங்கும் கடன்களைப் பற்றியும் இது உண்மையாகும். இந் நாட்களில், ஒவ்வொரு பெரிய கம்பெனியும் ஆயிரக் கணக்கான தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்கின்றது. அதன் முதலாளிகள் கண்ணை மூடிக்கொண்டு கடன் வாங்கிவிட்டுத் திவாலாகிவிட்டால் தொழிலாளிகள் வேலை யிழந்து பெரிதும் கஷ்டப்படுவார்கள்.

கோடிக் கணக்கான ரூபாய்களை எளிதில் கடன் வாங்கக் கூடிய வசதிகள் ஏற்பட்டதற்குக் காரணம் பாங்கிகள். இவைகள் பிரஜைகளின் மிச்சப் பணத்தையெல்லாம் ஓரிடம் சேர்த்து அதை வேண்டியவர்களுக்குக் கடன் கொடுக்கின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் அநேகமாக ஒருவரும் கையில் ரொக்கப் பணம் வைத்துக் கொள்வதில்லை. பாங்கியில் போட்டு விட்டுச் செலவுகளை செக் மூலம் செய்கிறார்கள். இவ்வாறு நிதி வைப்பதில் பலவிதங்களுண்டு. கேட்டபோது கொடுக்கும் படியான நிதிக்கு நடை முதல் கணக்கு (Current account) என்று சொல்லுவார்கள். மூன்று மாதம், ஆறு மாதம், ஒரு வருஷம், இரண்டு வருஷம் முதலிய தவணை வைத்தும் கொடுப்பதுண்டு. ஒரு பாங்கில்

போடப்பட்டிருக்கும் மொத்தப் பணத்தில், அவ்வப்போது கேட்பவர்களுக்குக் கொடுக்க ஒரு பாகம் கையில் வைத்துக் கொண்டால் போதுமென்று பாங்கிகள் அனுபவத்தில் கண்டிருக்கின்றன. மீதியைக் கடன் கொடுக்கிறார்கள். சாமான்களின் ஜாமீன் பேரிலும், சர்க்கார் கடன் பத்திரங்கள், கம்பெனி பங்குகள் முதலியவற்றின் ஜாமீன் பேரிலும் கடன் கொடுப்பது வழக்கம்.

ஒருவனிடம் பத்தாயிரம் ரூபாய் இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அதற்குச் சர்க்கார் கடன் பத்திரம் வாங்குகிறான். உடனே ஒரு புதிய கம்பெனியில் பங்குகள் வாங்க ஆசை உண்டாகிறது. சர்க்கார் கடன் பத்திரங்களை ஜாமீன் வைத்து எட்டாயிரம் ரூபாய் கடன் வாங்கி அப் பங்குகளை வாங்குகிறான். அந்தக் கம்பெனி பங்குகளை அடகு வைத்து ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கி வேறு பத்திரங்கள் வாங்கலாம். தவணைக்குப் பணம் கட்டவேண்டும் போது, ஏதாவது சில பத்திரங்களை விற்றுக் கட்டிவிடலாம். இவ்வாறே கடன் பத்திரங்களை வாங்கியும் விற்றும் எளிதில் லாபம் சம்பாதிப்பது பெரிய சூதாட்டமாகிவிட்டது. பல பத்திரங்களை வாங்குவதேயில்லை. வாங்குவதாக ஒப்பந்தம் செய்துகொண்டு சில நாட்களுக்கெல்லாம் அதை விற்பதாகவும் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். விலை ஏறிவிட்டால், பத்திரம் ஒன்றும் மாறாமலே லாபம் கிடைத்துவிடுகிறது; இறங்கி விட்டால் நஷ்டத்தைக் கொடுத்துவிடவேண்டும். நிஜமாகவும் பொய்யாகவும் பத்திரங்களில் பேரம் செய்யப்படும் இடத்திற்குப் பெயர் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ஜ் (**Stock exchange**). இது கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய பெரிய நகரங்களில் இருக்கின்றது. பத்திர விலை உயரும் பொழுது அதற்கு புல் (**Bull**) என்பார்கள். இறங்கும் பொழுது பேர் (**Bear**) என்பார்கள். இதன் சூக்ஷ்மங்களை அறியாதவர்கள் இதில் தாங்களே வியாபாரம் செய்யமுடியாது. அதற்காகத் தரகர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். அவர்களை புரோக்கர்கள் (**Brokers**) என்று சொல்லுவார்கள்.

சர்க்கார், முனிசிபாலிடிகள் முதலிய பொது ஸ்தாபனங்களும், கம்பெனிகளும், மற்றவர்களும் பெரிய தொகைகள் கடன் வாங்கவேண்டுமானால் பாங்கிகளையும், புரோக்கர்களையும் சகாயம் செய்துகொண்டே தீரவேண்டும். முதலாளி தத்துவத்தின் பேரில் அமைக்கப்பட்ட பொருளாதாரத்தையுடைய எந் நாட்டிலும் இப் பணத் தரகர்களே மிகுந்த செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கங்களை நடத்தும் மந்திரி சபைகளும், நிர்வாகிகளும் இவர்களை எதிர்த்து எந்தக் காரியமும் செய்ய முடியாது.

பாங்கிகள் சிறிய முதல் தொகைகளை வைத்துக் கொண்டு, அவைகளைப்போல் பன்மடங்கு தொகைகளைக் கையாளுகின்றன. இம்பீரியல் பாங்கிக்கு முதல் 10 கோடி ரூபாய்தான். ஆனால் அது வருஷம் கையாளுவது இருநூறு கோடி ரூபாய்கள். பாங்கிகள் தம்மிடம் பணம் வைத்திருப்பவர்களின் நம்பிக்கையின் பேரில் நடக்கின்றன. எக் காரணத்தாலாவது இந்த நம்பிக்கை குறைந்து விட்டால் பணம் போட்டவர்கள் கிலி பிடித்து ஒரே சமயத்தில் தங்கள் பணத்தைக் கேட்க ஓடி வருவார்கள். எவ்வளவு நல்ல ஜாமீன் பேரில் ஒரு பாங்கி கடன்கள் கொடுத்திருந்தாலும், அவைகளைத் திடீரென்று வசூல் செய்து கேட்பவர்களுக்குக் கொடுத்துவிட முடியாது. இம்மாதிரி நெருக்கடியான சமயங்களில் பாங்கிகளுக்கு உதவி புரிவதற்காக ஒவ்வொரு தேசத்திலும், அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற ஒரு மத்திய பாங்கி ஏற்படுத்தப் படுகிறது. இந்தியாவில் காகித நாணயம் வழங்குவதோடு கூட, மேற்படி வேலையும் பார்ப்பது ரிசர்வ் பாங்கின் கடமையாகும். மற்ற பாங்கிகள் நெருக்கடியான நிலைமையில் இருக்கும்பொழுது, அவைகளிடமுள்ள ஜாமீன் பத்திரங்களை அடகாக எடுத்துக்கொண்டு ரொக்க நோட்டுகள் கொடுப்பதற்கு அதற்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி இருந்தும், திருவாங்கூர் நாஷனல் பாங்கி திவாலாகப்போனதும், அதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டதும் தமிழ் நாட்டாருக்குத் தெரியும். ஆதலால்

பாங்கி நடத்துவது மிகவும் நாசூக்கான வேலை. பித்தலாட்டக் காரர்களும், சுயநலக்காரர்களும் அதில் புகுந்து கொண்டால் சமூகத்திற்கு பெரிய தீங்கு நேரிடும்.

சுலபமாக கடன் வாங்க வசதியிருப்பதில் பல தீமைகளுமுண்டு. விவசாயிகள் முதலியோர் சக்திக்கு மிஞ்சிக் கடன் வங்கி விட்டுப் பிறகு கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் கடன் வாங்கும் உரிமைகளைக் கட்டுப்படுத்தி நியமங்கள் செய்வது அவசியமாகிறது.

# 4. செல்வ வளர்ச்சி

## தொழிலாளி

உழைப்பே செல்வத்தின் முதல் சொரூபம் என்று சென்ற அத்தியாயத்தில் சொல்லப்பட்டது. ஆதலால் ஒரு சமூகத்தின் செல்வ வளர்ச்சி அதன் தொழிலாளிகளைப் பெரிதும் பொறுத்திருக்கிறது. வயது வந்த எல்லா ஆண் பெண்களும் அவரவர் தொழில்களில் திறமையாக வேலை செய்துவரும் சமூகம் செழிப்பாகவே இருக்கும்.

முன் காலத்தில் ஜாதி வித்தியாசங்கள் பெரிதும் தொழில் திறமையை வளர்ப்பதற்காகவே உண்டாயின. குடிசைத் தொழில்கள் பரம்பரையாக அனுஷ்டிக்கப்பட்டுச் சிறு குழந்தை முதலே அப்பியாசப்பட்டு வந்தால் அவைகளில் எளிதில் தேர்ச்சியடைய முடியும். மிகவும் க்ஷீணமடைந்த இந் நாட்களில் கூட இந்திய நெசவுக்காரர்கள், தங்கம் வெள்ளி வேலை செய்யும் தட்டார்கள், தச்சர்கள், கல்வேலை செய்வோர் முதலியவர்கள் உலகில் வேறெங்கும் காணப்படாத சாமர்த்தியம் பெற்றிருக்கின்றனர். நமது கோவில்களும், தாஜ்மகால் முதலிய நிகரற்ற கட்டிடங்களும் இந்தியத் தொழிலாளிகளின் மேன்மைக்கு அறிகுறியாக இருக்கின்றன.

அவசிய மில்லாமல் செய்கிறார்கள். சர்க்கார் உத்தியோகங்களும் கலாசாலைகளும் ஓயாமல் வளர்ந்து வருகின்றன. அப்படி யிருந்தும் லக்ஷக் கணக்கான திறமையான தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்க முடியாமல் அதிகாரிகள் திண்டாடுகின்றனர்.

இங்கிலாந்து முதலிய நிலவளம் குன்றிய தேசங்களில் விவசாயத்திற்கு அதிகக் கூலி கொடுக்க முடியாதபடியால் பயிர்த்தொழில் மிகக் குறைந்து உணவை வெளி நாட்டிலிருந்து வாங்கிக் கொள்ளுகிறார்கள். வேறு ஆலை சாமான்களை ஏராளமாக ஏற்றுமதி செய்வது சாத்தியமாக இருக்கும் வரையில் இது லாபகரமான ஏற்பாடாக இருக்கலாம். ஆனால் மற்ற நாடுகளில் இயந்திரத் தொழில்கள் விருத்தியாகி அதிகப் போட்டி ஏற்பட்டாலும், யுத்தத்தால் போக்கு வரவுத் தடை உண்டானாலும் மேற்கூறிய தேசங்களின் நிலைமை கஷ்டமாகின்றது.

குடிசைத் தொழில்கள் பெரிதும் நிறைந்து, இயந்திரத் தொழில் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாடுகளில் வேறுவிதமான சங்கடம் ஏற்படுகிறது. தொழிற்சாலை முதலாளிகள் தொழிலாளிகளுக்கு விவசாயத்தில் கிடைக்கும் கூலியை அனுசரித்துக் குறைந்த கூலி கொடுக்கிறார்கள். இத் தொழிலாளிகள் நகரங்களில் தக்கபடி வீட்டு வாடகை முதலிய செலவுகள் செய்யமுடியாமல் மிகவும் கேவல ஸ்திதியில் வாழவேண்டி இருக்கிறது. ஆதலால் ஆரோக்கியம் குன்றுகின்றது. நல்ல கூலி பெறும் மற்ற நாட்டு இயந்திரத் தொழிலாளிகள் போல் திறமை பெற முடிவதில்லை.

இயந்திரத் தொழில்களில் திறமையடைவதற்குக் குடும்ப பரம்பரையில் வந்த அறிவு போதாது. பள்ளிப் படிப்பு மிகவும் அவசியமானது. நம் நாட்டில் ஸ்கூல் பைனல் (School Final) என்று சொல்லும் அளவாவது பொதுப் படிப்பு இருந்தால்தான் இயந்திர வேலைகளில் தேர்ச்சியடைய முடியும். ஆனால் அவ்வளவு காலம்

பள்ளிக்கூடத்திற்குப் போன பிறகு குடிசைத் தொழில்களில் பழகமுடியாது. ஆதலால் ஆலைத் தொழிலுக்கு ஒரு படிப்பும், குடிசைத் தொழிலுக்கு மற்றொரு படிப்பும் வேண்டியிருக்கிறது. இந்த தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கும் பொழுது, அந்நிய அரசாங்கத்தார் இரண்டிற்கும் பிரயோஜனமில்லாமல், 'சர்க்கார் குமாஸ்தா' வேலை ஒன்றுக்கு மட்டுமே உபயோகமுள்ள கல்வி முறையை இந் நாட்டில் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

முதலாளி சமுதாயத்தில் தொழிலாளிகள் ஒற்றுமை, தைரியம், கட்டுப்பாடு இவைகளுடன் சங்கங்கள் வைத்துத் தங்கள் நலத்திற்காக ஓயாமல் கிளர்ச்சி செய்தாலொழிய அவர்களுடைய நிலைமை கேவலமாயிருக்கும். இவ்விதம் கிளர்ச்சி செய்ததின் பலனாக இங்கிலாந்து முதலிய தேசங்களில் (1) மான ஜீவனத்திற்குப் போதிய கூலி, (2) வேலையில் மரியாதை, (3) வேலையில்லாத சமயங்களில் உதவி, (4) வியாதி காலங்களில் சிகிச்சை, (5) முதிய வயதில் பென்ஷன் முதலிய உரிமைகள் கிடைத்திருக்கின்றன. இந் நாட்டில் இவைகளில் ஒன்றுகூட இன்னும் கிடைக்கவில்லை.

இயந்திரசாலைகள் பெருகியுள்ள சமூகங்களில் மற்றோர் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கின்றது. பழைய சமுதாயங்களில் ஸ்திரீகள் அதிகமாக மற்றவர்களின் கீழ் கூலி வேலை செய்வதில்லை. விவசாயம் முதலிய தொழில்களில் தங்கள் குடும்பங்களுடன் வேலை செய்வார்கள். இப்பொழுதோ எல்லாத் தொழில்களிலும் பெண்களும் புருஷர்களுக்குச் சமமாக வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். பலவிடங்களில் ஒரே வேலைக்கு ஸ்திரிகளுக்குப் புருஷர்களைவிடக் குறைவாக கூலி கொடுக்கிறார்கள். அதனால் பருத்தி யரைத்தல், நூல் நூற்றல் முதலிய தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளிகளையே அதிகமாக விரும்புகின்றனர். இதனால் ஆண் பிள்ளைகளுக்கு வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகரித்தும், ஆரோக்கியம் குறைந்தும்

வருகின்றன. இதற்காக பெண்களை ஆலை வேலை யினின்றும் அடியோடு தடுப்பது நியாயமல்ல. சம சொத் துரிமை இல்லாத ஸ்திரீகளுக்கு வேலை செய்து பிழைக்கும் உரிமையையும் குறைத்து விட்டால் அவர்கள் அடிமையாகவே இருக்க வேண்டிவரும். இச் சிக்கல்களை யெல்லாம் ஆராய்ந்த பலர் குழந்தைகள் பெறுவதையும் அவைகளை வளர்ப் பதையும் முக்கிய சமூக சேவைகளாகப் பாவித்து, தாய்மார்களுக்குத் தகுந்த கூலி சமூகம் கொடுக்க வேண்டு மென்று சொல்லுகிறார்கள். ஆனால், பொதுவுடைமை நாடாகிய ருஷ்யாவைத் தவிர வேறெங்கும் இந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுலில் இருந்து வருவதாகத் தெரிய வில்லை.

இயந்திரத்தின் உற்பத்தி சக்திக்கு முதல் காரணம். ஒரு வேலையைப் பல பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் கணக்குப்படி விரைவாகச் செய்வதை ஒரு நூல் ஆலையில், பார்த்தால், ஒரு இயந்திரம் பஞ்சை அடிக்கிறது; மற்றொன்று அதை ஒழுங்காகச் சீவி விடு கின்றது; மூன்றாவது பெரிய திரிகளாகத் திரிக்கின்றது; பிறகு மெல்லிய திரிகளாகத் திரித்துக் கடைசியில் நூலாக ஒரு யந்திரம் நூற்கிறது. பழைய முறையிலோ ஒரே ஆள் பஞ்சைப் பட்டை போட்டுத் திரித்து நூலும் நூற்று விடுகிறான்.

இயந்திரம் பல ஆட்கள் வேலையை ஒருவனின் மேற் பார்வையில் செய்வது மட்டுமல்ல; எவ்வளவு மனிதர்கள் சேர்ந்தும் செய்யக்கூடாத காரியங்களையும் செய்கின்றது. தரையில் மணிக்கு 40, 50 மைல் வேகமாகவும், சமுத்திரத் தில் 30 மைல் வீதமும், வானத்தில் 200, 300 மைல் வீதமும் இயந்திர சக்தியினால்தான் போகமுடியும். எவ்வளவு தீவட்டி கொளுத்தினாலும், மின்சார விளக்கின் பிரகாசம் வராது. ஆதலால் இயந்திர சக்தியை வேண்டிய அளவு உபயோகப் படுத்தாமல் இக் காலத்திய நாகரிகம் நடை பெறாது. ஆனால் இயந்திரம் சமூக சுகத்திற்கு உதவியாக

இருக்கவேண்டும். சமூகத்தில் சிலர் சௌகரியப் படுவதற்காக லக்ஷக் கணக்கான குடும்பங்களுக்கு வேலை யில்லாமலும், நிச்சயமான பிழைப்பில்லாமலும் இருப்பது சரியல்ல. எல்லோருக்கும் நல்ல வேலையும், கூலியும் வேண்டும். இதற்குக் குந்தகமின்றி இயந்திரம் வளர்வதில் தொழிலாளி களின் நன்மையும் வளரும்.

ஜனத் தொகைக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. நாட்டின் செல்வ உற்பத் தியினால் காப்பாற்றக்கூடிய தொகைக்கு அதிகமான ஜனங் கள் இருந்தாலும் கெடுதல்; ஜனத்தொகை மிகக் குறைவாக இருந்தாலும் செல்வ உற்பத்தி தடைப்படும். பொருளாதார நன்மைக் கேற்றவாறு ஜனத்தொகையை வளர்ப்பதும் குறைப்பதும் முக்கிய ராஜ தந்திரங்களுள் ஒன்றாகும்.

## நிலமும் நீரும்

ஒரு நாட்டின் செழிப்புக்கு ஆதாரம் நிலவளமும், நீர் வளமும்தான். மனிதர், ஆடு மாடு மேய்த்துப் பிழைத்த காலத்தில் பசும் புல் நிலமே மிகவும் உயர்ந்ததாகக் கருதப் பட்டது. பிறகு விவசாயம் வலுத்தது. அப்பொழுது நீர் வளமுள்ள பிரதேசங்களே நாகரிகத்திற்கு முக்கிய ஸ்தானங்க ளாயின. இக் காலத்தில் விவசாயத்தைக் காட்டிலும் சுரங்கப் பொருள்களின் பிராதான்யம் அதிகரிக்க ஆரம்பித்து விட்டது. நிலக்கரி, இரும்பு, மண்ணெண்ணெய் இம் மூன்றும் இயந்திரத் தொழிலுக்கு ஆதாரமானவை. மின்சாரம் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு மலைவீழ் அருவிகள் செல்வக் களஞ்சியங்களாகி விட்டன.

ஆதலால் ஒரு நாட்டின் நீர் நில வளங்களின் பிரயோ சனம் மனித அறிவுக்கும் சக்திக்கும் தகுந்தவாறு மாறும். இன்றைக்கு அதிக பலன் தராத நிலத்தை அலக்ஷியம் செய்யக் கூடாது.

உணவுக்கும், உடைக்கும் பிறகே மற்ற செல்வ மனைத்தும். ஆதலால் சமூகத்தின் உணவுக்கும், உடைக்-

கும் வேண்டிய பொருள்களின் உற்பத்தி மிகவும் அவசிய மானது. நெல், கோதுமை, பருப்பு வகைகள், காய்கறிகள், பருத்தி, பட்டு இவை உற்பத்தியாகும் நாட்டிற்கு என்றும் குறைவில்லை. அவ்வாறே கால் நடைகளும் பெரிய தனமாகும்.

விவசாயத்தின் பலன் நில உரிமைகளையும்,விவசாய முறைகளையும் பொறுத்திருக்கின்றது. நிலச் சொந்தக் காரன் வேறாகவும், விவசாய வேலைசெய்வோர் கூலிக்காரர் களாகவும் இருந்தால் விவசாயம் நன்கு நடப்பது கஷ்ட மாகும். இந் நாட்டில் பெரும்பாலான் நிலம் ஜமீன்தாரி, ரயத்வாரி (Ryotwari) என்ற இருவித ஸ்வாதீனத்தில் இருக்கிறது. வங்காளம், பீகார், ஐக்கிய பிராந்தியம் முதலிய மாகாணங்களில் ஜமீன்தாரி முறை வழக்கத்தி லிருக்கிறது. அவ்விடங்களில் எல்லா நிலமும் சில நூறு அல்லது ஆயிரம் ஜமீன்தார்களுக்கு உட்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் கீழ் லக்ஷக்கணக்கான குடியானவர்கள் குத்தகையாகவும், வார சாகுபடியாகவும் பயிர் செய்கிறார்கள். இக் குடியானவர்களுக்கும் சில உரிமைகள் சட்ட மூலம் கொடுக்கப்படுகின்றன. இவர்களிடமிருந்து வாங்கும் குத் தகையில் ஒரு பாகத்தை ஜமீன்தார்கள் சர்க்காருக்குச் செலுத்துகிறார்கள், இதற்கு பேஷ்கஷ் என்று பெயர். குடியானவர்களுக்கும், சர்க்காருக்கும் நேரில் சம்பந்தமில்லை. இம்மாதிரி அரசாங்கத்தாருக்கும் குடிகளுக்கும் இடையே ஒரு தரகர் கூட்டம் அவசியம் இல்லை. ஜமீன்தார்களை ஏதாவது ஒரு வழியில் நீக்கிவிடவேண்டும் என்னும் இயக்கம் நாளுக்கு நாள் வலுத்து வருகின்றது.

சென்னை, பம்பாய், பஞ்சாப் முதலிய மாகாணங்களில் பெரும்பான்மையான நிலங்கள் ரயத்துவாரி முறையின் கீழ் இருக்கின்றன. குடிகளே சர்க்காருக்கு நேரில் கிஸ்தி செலுத்திவிட்டு நிலத்தை சர்வ சுதந்திரத்துடன் அனுபவிக்க வேண்டுமென்பது இதன் மூலக் கொள்கை. இம் மாகாணத் தில் மட்டும் சுமார் 50 லக்ஷம் பட்டாக்கள் இருக்கின்றன.

ஆயினும் கால்வாசி நிலங்கள் பெரிய பட்டாதார்களின் ஆதீனத்தில் வந்துவிட்டன. இவர்கள் நிலத்தைக் குடியான வர்களும் கூலிப் பண்ணையாட்களும் பயிர் செய்கிறார்கள். இந்த உழைப்பாளிகளுக்குச் சட்ட மூலம் எவ்வித உரிமையும் இல்லை. ஆகவே ரயத்துவாரி முறையின் லக்ஷியம் ஓரளவு பலிக்காமல் போய்விட்டது. தவிரவும், அடிக்கடி கிஸ்தியை அதிகரித்து வந்திருப்பதால், சொந்தப் பயிர்செய்யும் குடியான வர்களுக்குக் கூட விவசாயத்தில் அதிக லாபம் கிடைப்ப தில்லை.

நிலத்தைப் பயிர் செய்விப்போர்களே சொந்தக்காரர் களாக இருப்பது மேன்மையான கொள்கையாக இருந்த போதிலும், அதிலும் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஓயாமல் பாகம் செய்யப்பட்டு, விவசாய நிலங்களெல்லாம் மிகச் சிறிய ஸ்தலங்களாகி விடுகின்றன. சிறிய குடியான வர்களுக்குச் சரிவர உரம் போடுவதற்கும், நல்ல உழவு மாடுகள் வைத்துக் கொள்ளுவதற்கும், சுத்த விதை தயார் செய்து கொள்ளுவதற்கும் போதிய முதலும், சாமர்த்திய மும் கிடையாது, இதையெல்லாம் உத்தேசித்து ருஷ்யா வில் ஆயிரம், இரண்டாயிரம் ஏகராக்கள் கொண்ட பெரிய சர்க்கார் பண்ணைகளாகச் செய்து அதில் குடியானவர்களையும் ஆலைத் தொழிலாளிகளைப் போல் செய்துவிடவேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் செய்யப்படுகின்றது. உழுவதற்கும், விதைப்பதற்கும், அறுப்பதற்கும் பெரிய இயந்திரங்கள் உபயோகப்படுத்தப் படுகின்றன. இம் முறை இந்தியாவிற்கு நன்மை தருமா வென்பது சிக்கலான பிரச்னை.

நமது நாட்டில் பண்டை முறைகளில் விவசாயம் நடை பெற்று வருகின்றது. நூதன முறைகளால் மிகவும் விருத்தி செய்ய இடமிருக்கிறது. ஆனால் இந்த விருத் திக்கும் ஒரு வரம்பு உண்டு. மேலே போகப்போகச் செலவுக்குத் தகுந்த பலன் கிடைப்பது கஷ்டமாகி விடு கிறது. கடைசியில் எவ்வளவு உரம் போட்டாலும் மகசூல் பெருகாத நிலைமை வந்துவிடும். இதை க்ஷீண பல நியாயம்

(Law of Diminishing returns) என்று கூறுவார்கள். இந்த நியாயம் மற்ற பொருளாதாரத் துறைகளிலும் காணப்படுகிறது.

ஏற்றுமதிக்காக எவ்வளவு தூரம் விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டுமென்பதும் கடினமான கேள்வி. அப்படிச் செய்வதால் குடியானவர்களும், சமூகமும் சில வேளை பெரும் லாபத்தை யடைய முடியும். ஆனல், வெளிதேசங்களை எதிர்பார்த்திருப்பதால் விலைவாசிகளின் ஏற்றக் குறைவுகளாலும், வேறு நாடுகளின் போட்டிகளாலும் யுத்த முதலிய சம்பவங்களாலும் விவசாயத்தின் நிலை சஞ்சலமாகி விடக்கூடும். ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்குச் சமமான உரம் நிலத்திற்குக் கொடுக்கப் பட்டாலொழிய, பூசாரம் குறைந்து, வருங்காலத்தில் நாட்டின் செழிப்பும் குறைந்துவிடும். கூடிய வரையில் உள்நாட்டுக்கு வேண்டிய விவசாயம் செய்து கொள்வதே மேன்மையாகும்.

சுரங்கப் பொருள்களை அவசரப்பட்டு ஏற்றுமதி செய்வது இன்னும் அதிக மதியீனமானது. பூமிக்காவது உரத்தின் மூலம் உணவு கொடுத்து பூசாரம் குறையாமல் பார்த்துக் கொள்ளலாம். நிலக்கரி, இரும்பு முதலிய சுரங்கப் பொருள்களின் இருப்பு நாளுக்கு நாள் குறையுமே யொழிய அதிகரிக்காது. இன்று காசுக்கு ஆசைப்பட்டு அவைகளை வெளி நாட்டிற்கு அனுப்பி விட்டால், பின்வரும் சந்ததியார் கஷ்டப்படுவார்கள். உதாரணமாக இந்தியாவின் நிலக்கரி இன்னும் நூறு வருஷங்களுக்குத்தான் போதுமென்று கணக்கிடப் பட்டிருக்கிறது. புதிய சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்படலாம். ஆயினும், சிக்கனமாக இருத்தல் அவசியம்.

விவசாயத்திற்கும் இதர தொழில்களுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஆலை உரங்களை உபயோகிப்பதால் மகசூல் அதிகரிக்கும். அவ்வாறே வெகு ஆழத்திலிருந்து தண்ணீர் எடுக்கவும், மகா நதிகளுக்கு அணைபோட்டு அதன் மூலம்

யரந்த பிரதேசங்களைச் செழிக்கச் செய்யவும், மின்சார சக்தியும் பெரிய இயந்திரங்களும் உபயோகப்படுகின்றன.

நாணயச் செலாவணிக்கும் விவசாயத்துக்கும் நேர் சம்பந்தமுண்டு. விலைவாசிகள் நாணயத்தைப் பெரிதும் பொறுத்திருக்கின்றன. 1930-32-ம் வருஷங்களில் பெரிய நாணயக் குழப்பம் உண்டாகி—அதனால் ஏற்பட்ட விலைவாசிகளின் வீழ்ச்சியால் இந்திய விவசாயிகள் பெருங் கஷ்டத்திற்கு உள்ளானார்கள்.

விவசாயப் பொருள்கள் சில தேசங்களில் இயந்திர சக்தி மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அப்பொழுது விவசாயப் பொருள்களின் உற்பத்திச் செலவு குறைந்து விடுகின்றது. அதே செலவில் மனித உழைப்பால் உற்பத்தி செய்ய முயன்றால், விவசாயத் தொழிலாளியின் வருமானம் மிகவும் குறைந்து விடும். இயந்திரங்களை விவசாயத்தில் பெரிதும் உபயோகிக்க வசதிகள் இல்லாமற் போனாலோ, அல்லது அவ்வாறுஉபயோகிப்பது பொது ஜன நன்மைக்கு விரோதமென்று எண்ணப்பட்டாலோ, விவசாயிகளின் வருமானங்களைப் பாதுகாக்க வெளிநாட்டுப் பொருள்களின் விலைவாசிகளைச் சரியான நிலையில் ஸ்தாபிக்க வேண்டும்.

இந்தியாவைப் போன்ற பெரிய தேசங்களில் மாகாணத்திற்கு மாகாணம் பூசாரத்தில் அதிக வித்தியாசங்கள் தோன்றுகின்றன. மிதமிஞ்சிய போட்டியைத் தடுக்காவிட்டால் பஞ்சைப் பிரதேசங்களில் விவசாயமும் முடியாமற் போய்விடும். கரும்புப் பயிர் பீகார், ஐக்கியப் பிரதேசங்களில் செழிப்பாக விளைகிறது. அதனால் சர்க்கரைத் தொழில் இம் மாகாணங்களிலேயே வளர்ந்து இதர மாகாணங்களில் பரவ முடியாமல் இருக்கிறது. மற்ற இடங்களிலுள்ள குடியானவர்களுக்குக் கரும்பு பயிர் செய்யக்கூடிய நிலமும், சாமர்த்தியமும் இருந்த போதிலும் கொஞ்சம் விலை அதிகமாவதால் நெல்லும் சோளமுமே பயிர் செய்யவேண்டியிருக்கிறது. கூடிய வரையில் எல்லா பாகங்களிலும் பலவிதமான பயிர்களை உற்பத்தி செய்வதால் பொது நலம்

வளரும். எப்படி ஜாவாவிலிருந்து வரும் சர்க்கரைக்கு அதிக சுங்கவரி விதித்து இந்திய சர்க்கரைத் தொழில் விருத்தியாயிற்ரே, அவ்விதமே ஒவ்வொரு மாகாணத்திற்கும் கரும்பு முதலிய உயர்தர பயிர்கள் சாகுபடி செய்ய வசதி அளிக்கப்படவேண்டும். ஆதலால் ஒவ்வொரு பிரதேசத்தில் உற்பத்தியாகும் பொருள்களையும், அவைகளின் விலைகளையும் ஒழுங்காகக் கட்டுப்படுத்தி நிர்வாகம் செய்வது அவசியமாகும்.

கால் நடைகள் பாலுக்கும், உழவுக்கும், உரத்திற்கும் அவசியம். அவற்றை நன்கு பராமரிப்பதால் செல்வமும் ஆரோக்கியமும் பெருகும். ஆனால் உபயோகமற்ற பசுக்களையும், எருதுகளையும் வைத்திருப்பதால் வீண் நஷ்டம் உண்டாகிறது. நல்ல ஜாதி மாடுகளை விருத்திசெய்ய வேண்டும். அவசியமில்லாமல் வைத்துத் தீனிபோடக் கூடாது; போதுமான தீனி போடவேண்டும். இந்தியாவில் பால், கோவா, நெய், வெண்ணெய் முதலிய பதார்த்தங்கள் வருடம் 200 கோடி ரூபாய்க்கு உற்பத்தியாகின்றன. இதை பன்மடங்கு பெருக்க இடமுண்டு.

## போக்கு வரத்து சாதனங்கள்

விவசாயமும், மற்றத் தொழில்களும் வளர்ச்சியடையப் போக்கு வரத்து சாதனங்கள் இன்றியமையாதவை. எந் நாட்டிலும் எல்லாப் பயிர்களும் ஒரு பிரதேசத்தில் விளைய மாட்டா. எல்லாப் பொருள்களும் ஒரே இடத்தில் கிடைக்க மாட்டா. மிகுதியாக இருக்கும் பொருள்களை ஒரு இடத்திலிருந்து மற்ற இடங்களுக்குக் கொண்டுபோய் அங்கிருந்து வேறு பொருள்கள் கொண்டு வரவேண்டும். முன் காலங்களில் மாடு, கழுதை, குதிரை, ஒட்டகம், யானை இவற்றின் உதவியால் போக்கு வரத்து நடைபெற்றது. இவைகளால் பாரமான சாமான்களை வெகு தூரம் அனுப்ப முடியாது. இக் காலத்திலோ ரயில், மோட்டார் முதலிய வண்டிகளால் நிலக்கரி, இரும்பு போன்ற கனபதார்த்தங்கள் கூட ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் எளிதில் கொண்டு போகப்படுகின்றன. சாமான்கள் போவதைப் போலவே

தொழிலாளிகள் பல விடங்களுக்கு எளிதில் செல்வதால் தொழில் திறமையும், தொழில்களும் விருத்தியாகின்றன. எல்லாத் தொழில்களுக்கும் ஒரே பிரதேசத்தில் பயிற்சிச்சாலைகளும் ஆராய்ச்சி நிலையங்களும் ஏற்படுத்துவது கஷ்டம். ஆனால் விரைவான போக்கு வரவு சாதனங்கள் இருப்பின் குறிப்பிட்ட இடங்களில் அத்தகைய சாலைகளை அமைத்து நாட்டின் பல பாகங்களிலிருந்து மாணவர்கள் வந்து பயிற்சி பெறச் சௌகரியமாக இருக்கும்.

ஆதலால், போக்கு வரவு சாதனங்களை விருத்தி செய்வது செல்வ வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இவைகளை நான்கு வகையாக வகுக்கலாம்: (1) ரஸ்தாக்கள், (2) ரயில் பாதைகள், (3) கப்பல்களும் படகுகளும், (4) ஆகாய விமானங்கள்.

இயந்திரத் தொழில் பெருகிய நாடுகளில் எல்லா ரஸ்தாக்களும் கப்பியாலும், சிமெண்டாலுமே அமைக்கப்படுகின்றன. பெரும்பாலும் மோட்டார் வாகனங்களே அவைகளை உபயோகப்படுத்துகின்றன. ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் பெரும்பான்மையான ரஸ்தாக்கள் மண் பாதைகளாக இருக்கின்றன. மோட்டார்கள் போகும் சில ரஸ்தாக்களையே அதிகாரிகள் பெரிதும் கவனிக்கிறார்கள். இதனால் கிராம வாசிகளுக்கும் விவசாயிகளுக்கும் அசௌகரியம் ஏற்படுகிறது. நாளடைவில் எல்லாப் பாதைகளும் கப்பி, சிமெண்ட் ரோடுகளாக அமைக்கப் படவேண்டும். ஆனால், நமது செல்வம் அதிகரித்த பிறகே இது சாத்தியமாகும். அதுவரையில் மண் ரோடுகளைப் பார்த்துக்கொள்ள வேறு அதிகாரிகளும், மோட்டார் ரோடுகளைப் பரிசீலனை செய்ய வேறு அதிகாரிகளும் இருப்பது நலம். இரண்டையும் ஒரே ஸ்தல ஸ்தாபனத்திடமோ, அதிகாரியிடமோ கொடுத்துவிட்டால் மண் ரோடுகள் கவனிக்கப்பட மாட்டா.

இந் நாட்களில் மோட்டாருக்கும், ரயிலுக்கும் பலத்த போட்டி இருக்கிறது. ரயிலைக் காட்டிலும் மோட்டார் சர்விஸ் வைத்திருப்பவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு.

ரயில் அதிகாரிகள் ரயில் ரோட்டை நிர்மாணம் செய்து சரிவரப் பரிபாலிக்கவேண்டும். பெரிய ஸ்டேஷன்கள் கட்டி, பல அதிகாரிகளை நியமித்து அபாயமின்றி ரயில் நடத்த ஏற்பாடு செய்யவெண்டும். ஏராளமான முதலை ஒரே சமயத்தில் திரட்டிச் செலவழிக்க வேண்டும். ஆனால் கொஞ்சம் முதலைக் கொண்டு ஒரு பஸ்ஸோ, சாமான் லாரியோ வாங்கிவிடலாம். ஒரே சமயத்தில் அதிக ஜனம் சேருவது அவசியமில்லை. ஊருக்குள்ளே போய் ஜனங்களையும், மூட்டைகளையும் ஏற்றிக் கொள்ளலாம்.

மேற் சொல்லியபடி ரயிலைவிட மோட்டாருக்குப் பல சௌகரியங்கள் இருந்தபோதிலும், வெகுதூரம் செல்வதற்கும், பாரமான சாமான்களை நூற்றுக்கணக்கான மைல் கொண்டு போவதற்கும் ரயில் வண்டிகள் அவசியம். ஆதலால் மோட்டாரை அதிகமாகப் போட்டி போடவிட்டு, கொஞ்ச தூரப் பிரயாணிகளையும், விலையுயர்ந்த பொருள்களையும் எடுத்துச் செல்லும் வேலையை அவைகள் அபகரித்து விட்டால் ரயில் பாதைகளை லாபகரமாக நடத்த முடியாமல் போய் விடும். இதனால் சமூகத்திற்கும் நாளடைவில் பெரிய தீங்கு விளையும்.

ரயிலுக்கும், மோட்டாருக்கும் நியாயமான நியந்தனைகள் ஏற்படுத்திச் சமூக நலத்தைப் பெருக்கும் முறைகளில் நடத்துவது முக்கியமான வேலையாகும். இவ்விரண்டும் பொதுச் சொத்துக்களாக இருந்து, பொது அதிகாரிகளால் நடத்தப்படுவதே சிறந்த மார்க்கம். தனி முதலாளிகளிடம் ஒப்புவித்தால் சில வேளை அவர்கள் சிக்கனமாக நடத்தக் கூடும். ஆனால் தங்கள் லாபத்திலேயே கண்ணாக இருப்பார்கள். அவர்களைக் கட்டுப்படுத்திச் சட்ட திட்டங்கள் செய்து மேற்பார்வை செய்யவேண்டும்.

தரையிலும், வானத்திலும் போவதைக் காட்டிலும் நீரில் போவதற்குச் செலவு குறைவு. தரையில் ரஸ்தா செய்து போகவேண்டும். வானத்தில் விமானத்தின் பாரத்தை அதன் இயந்திர சக்தியைக் கொண்டே தூக்கிச்செல்ல

வேண்டும். ஜலத்திலோ படகு, கப்பல் முதலியவற்றின் பாரத்தைத் தண்ணீர் வகிப்பது மன்றி எத்திசையிலும் தடையின்றிச் செல்லலாம். ஆதலால் ஆறு, கடல் இவைகளைப் போக்கு வரத்துக்குக் கூடிய வரையில் உபயோகிப்பதால் சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோகும் செலவு குறைகிறது. பம்பாயிலிருந்து சென்னைக்கு ரயிலில் ஒரு டன் சரக்கைக் கொண்டுவரும் ரயில் கூலி, லண்டனிலிருந்தும் டோக்கியோவிலிருந்தும் பம்பாய்க்குக் கொண்டுவரும் கப்பல் சார்ஜை விட அதிகமாகிறது! நமது நாட்டில் ரயில் பாதையை விருத்தி செய்வதற்காக ஆற்று மார்க்கங்களை அலக்ஷியம் செய்துவிட்டார்கள். இதனால், நமது பொருளாதாரத்திற்கு மிகவும் நஷ்டமேற்பட்டிருக்கிறது. ஐரோப்பாவில் ரைன், டானியூப் முதலிய நதிகளின் மூலம் பெரிய வியாபாரம் நடக்கிறது. லக்ஷக்கணக்கான பிரயாணிகளுக்கும் உதவுகின்றன. இந்தியாவிலுள்ள ஆறுகளை அம்மாதிரி உபயோகித்தால் தானியங்கள், விறகு முதலிய கன பதார்த்தங்களின் போக்குவரத்தும் ஏழைப் பிரயாணிகளின் சௌகரியங்களும் வளர்ந்து, செலவும் குறையும்.

சமுத்திரக் கரையிலுள்ள தேசங்களுக்குக் கப்பல் சாதனம் மிகவும் அவசியம். முன் காலங்களில் இந்தியாவிலேயே பல கப்பல்கள் கட்டப்பட்டு உள்நாட்டுக் கரையோர வியாபாரமும், வெளிநாட்டு வியாபாரமும் அவைகளில் நடந்துவந்தன. இப்பொழுதோ, கப்பல் கட்டும் தொழிலே மறைந்துவிட்டது. நமது கரையோர வியாபாரத்தில் பெரும்பகுதி ஆங்கிலேயக் கம்பெனிகளிடம் இருக்கின்றது.

ஆகாய விமானங்கள் நாளுக்கு நாள் விருத்தியாகி வருகின்றன. இன்னும் சில வருஷங்களில் தூரதேசத் தபால் போக்கு வரத்து முழுவதும் இவற்றின் மூலமாக நடக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவைப் போன்ற பரந்த நாடுகளில் உள் நாட்டுத் தபால்கள் கூட இதன் மூலம் நடக்கக்கூடும். பிரயாணிகள் வானவழியில் செல்ல ஆரம்பித்

திருக்கின்றனர். ஆயினும் சாமான் போக்குவரத்து சமீப காலத்தில் ஆகாய மூலம் சாத்தியமென்று தோன்றவில்லை.

## இயந்திர சாலைகள்

ஆதி முதற்கொண்டு மனிதன் இயந்திரங்களைக் கொண்டு தன் சக்திகளை விருத்தி செய்ய முயன்றிருக்கிறான். ஆனால் நீராவி, மண்ணெண்ணெய், மின்சாரம் முதலியவற்றால் ஓடும் இயந்திரங்களைக் கண்டு பிடிக்கும் முன் விவசாயமும், குடிசைத் தொழில்களும் செல்வ உற்பத்தியின் சாதனங்களாக இருந்தன. சென்ற நூற்றைம்பது வருஷங்களில் இந்நிலைமை மிகவும் மாறிவிட்டது. இங்கிலாந்தில் நூற்றுக்கு அறுபதுக்கு மேற்பட்ட தொழிலாளிகள் இயந்திர சாலைகளில் வேலை செய்கிறார்கள். இதர நாடுகளிலும் இயந்திர சாலைகளே நாட்டின் செல்வத்தின் பெரும்பாகத்தின் உற்பத்திக்குக் காரணமாகின்றன.

இயந்திர சாலை பெரிதாகப் போனால் அது செய்யும் சாமான்களின் உற்பத்திச் செலவும் குறையும். ஏனெனில் ஒரு சிறிய இயந்திரத்தை ஓட்டும் மனிதன் ஒரு பெரிய இயந்திரத்தையும் ஓட்டலாம். இயந்திரத்தின் சக்தியின் கணக்குப்படி தொழிலாளிகளின் தொகை அதிகரிக்காது. தவிரவும், பெரிய இயந்திர சாலைகளுக்கு அதிகமாக மூலப் பொருள்கள் தேவையாக இருப்பதால் அவற்றை மொத்தமாக வாங்குவதில் செலவு குறையும். பெரிய இயந்திர சாலையின் முதலாளிகள் பாங்குகளிடமிருந்து சொற்ப வட்டியில் கடன் வாங்க முடியும். நன்றாக விளம்பரம் செய்ய முடியும். இத்தகைய சௌகரியங்களால் பெரிய மீன்கள் சிறிய மீன்களைத் தின்றுவிடுவது போல் பெரிய ஆலைகள் சிறிய ஆலைகளை அமுக்கி விடுகின்றன.

இந்தப் பொது உண்மைக்குச் சில விலக்குகள் உண்டு. ஒரு பெரிய இயந்திர சாலையில் ஏராளமான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவைகளை வெகுதூரம் கொண்டுபோய் விற்கவேண்டும். அடிக்கடி பிற தேசங்களில்

போய் விற்க வேண்டிவரும். மற்ற பெரிய ஆலைகளின் போட்டியாலோ, அரசாங்கங்களின் சட்டங்களாலோ, நாணயச் செலாவணிக் கஷ்டங்களாலோ சாமான்கள் விற்க முடியாவிட்டால் ஆலை முழுவதும் வேலை செய்ய முடியாமல் நஷ்டம் ஏற்படும்.

மிகவும் ஜாக்கிரதையாகவும், நுட்பமாகவும் தனித் தனியாகப் பரீக்ஷை செய்தே ஒப்புக் கொள்ளக்கூடிய மருந்துகள் விஞ்ஞான ஆராய்ச்சிக் கருவிகள் முதலியவற்றைச் சிறிய இயந்திர சாலைகளில் செய்வது அதிக லாபகரமாகவும், சுலபமாகவும் இருக்கும்.

இயந்திர சாலைகளை மூன்று விதமாக வகுத்துக் கூறுவது வழக்கம். இயந்திரங்களைச் செய்யும் சாலைகளும், இரும்பு எஃகு உருக்கிக் காய்ச்சும் ஆலைகளும், பெரிய மின்சார சக்தியை உற்பத்தி செய்யும் இயந்திர சாலைகளும் முதல் வகுப்பைச் சேர்ந்தவை. இவை இயந்திரத் தொழிலின் ஆணிவேர்களாகக் கருதப்படும். இவற்றை 'கனத் தொழில்கள்' (Heavy Industries) என்று சொல்வதுண்டு. இவைகளுக்குக் கோடிக்கணக்கான மூலதனம் வேண்டும். பெரிய மார்க்கெட்டுகளும் வேண்டும்.

அடுத்தபடியாக ரசாயன சாமான்கள், கருவிகள், கட்டடம், பாலம் முதலியவற்றின் தளவாடங்கள் இவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும், நூல் நூற்றுத் துணி நெய்யும் ஆலைகளையும் 'மத்தியத் தொழில்கள்' (Medium Industries) என்று சொல்லுகிறார்கள். இவற்றிற்கும் அதிக முதலும் மார்க்கெட்டும் வேண்டும். ஆனால் கனத்தொழில்களைப்போல் அவ்வளவு கஷ்டமில்லை.

கடைசியாகச் சாதாரண வாழ்க்கையில் உபயோகப்படும் போக்ய சாமான்களை உற்பத்தி செய்யும் தொழில்களைச் 'சிறு தொழில்கள்' என்று குறிப்பிடுகிறார்கள். இவைகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் சில ஆயிரங்களோ, ஒன்றிரண்டு லக்ஷங்களோ முதலைக் கொண்டு ஆரம்பித்துவிடலாம். பிஸ்கட்

செய்தல், தோலைப் பதன் படுத்திச் செருப்பு ஜோடு செய்தல் முதலியவை இதற்கு திருஷ்டாந்தங்கள். ஆலைகளுக்குக் கொண்டுபோகுமுன் ஒருவாறு பதனிட்டுச் செய்வதற்காக இருக்கும் இயந்திர சாலைகளை இந்த கோஷ்டியிலே சேர்த்துக் கொள்ளலாம். பஞ்சுச் சாலைகள், தோல் பதனிடும் ஆலைகள் முதலியவை இந்த வகுப்பைச் சேர்ந்தவை. இவற்றிற்கு 'மூலப் பொருள் பக்குவம் செய்யும் சாலைகள்' என்று தனிப் பெயர் வைப்பதும் உண்டு.

முதலில் கூறப்பட்ட பெருந் தொழில்கள் சமூகப் பொதுத் தொழில்களாகப் பாவிக்கப்பட்டு சர்க்கார் வசம் இருக்க வேண்டுமென்கிற கொள்கை பரவி வருகின்றது. இந்தப் பெருந் தொழில்கள் குண்டு, பீரங்கி முதலியவை செய்வதற்கும், ரயில், என்ஜின், மோட்டார், ஆகாயவிமானம், கப்பல், முதலிய போக்கு வரத்துக் கருவிகள் செய்வதற்கும் அடிப்படையானவை. இவற்றைத் தனி முதலாளிகளிடம் விட்டு வைத்தால், இம்முதலாளிகளே பின்னிருந்து அரசாங் கத்தை ஆட்டி வைக்கும் செல்வாக்கைப் பெறுகின்றனர்; மற்ற நாடுகளின் ஆயுத பலங்களைப் பெருக்கி லாபம் சம்பாதிக் கின்றனர்; இத் தொழில்களில் ஒரு நாட்டிற்குள்ளே அதிகப் போட்டியிருப்பது சாத்தியமில்லை யாதலால் தம்மிஷ்டப் படி விலைகளை வைக்கின்றனர்.

மத்திய, சிறிய தொழிற்சாலைகளுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் போட்டி உண்டாவது இயல்பு. தடை யின்றிப் போட்டிக்கு விட்டு விட்டால் குடிசைத் தொழில் கள் நசித்துப் போகுமென்பதில் சந்தேகமில்லை. இத் தொழில்களில் சாதாரணமாகப் பத்து, இருபது குடிசைத் தொழிலாளி செய்யும் வேலையை ஒரே இயந்திரத் தொழிலாளி செய்து விடுவான். ஆதலால் பலருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகும். இதைத் தீர்ப்பதற்குப் புதிய ஆலைகள் ஏற்படுத்தினால் அவைகளில் உற்பத்தியாகும் சாமான்களுக்கு மார்க்கெட் தேட உலக மெங்கும் அலைய வேண்டும். மற்ற நாட்டு முதலாளிகளோடு போட்டி போட

வேண்டும். அவசியமான காலங்களில் நேராகவும் மறைமுகமாகவும் ராஜ்ய பலத்தை உபயோகிக்க வேண்டி வரும்.

எல்லோருக்கும் வேலையும் கொடுத்து இயந்திரத் தொழில்களையும் விருத்தி செய்து இதர நாடுகளோடு வீண் போட்டி போடாமல் செல்வத்தை வளர்ப்பது மிகவும் சிக்கலான பிரச்னை. இதில் அவசரப்பட்டு ஆலைகளை மிதமிஞ்சி வளர்த்தால் முடிவில் பெரிய அபாயம் ஏற்படும். ஆதலின் இயந்திர சாலைகளின் விருத்தியைப் பாரபட்சமற்ற அறிஞர்களைக் கொண்டு கட்டுப்படுத்தி நடத்தவேண்டும். குடிசைத் தொழில்களையும் திடீரென்று அழிய விட்டுவிடக்கூடாது. ஒரு சமயத்தில் ஒரு நாட்டில் எவ்வளவு தூரம் இயந்திர சாலைகள் விருத்தி செய்யலாமென்பது ஜனத் தொகையையும், நாட்டில் கிடைக்கும் மூலப் பொருள்களையும் பொறுத்திருக்கிறது. மொத்த செல்வம் அதிகரித்தால் மட்டும் போதாது, ஏழை வகுப்பார்களின் நிலைமையை எவ்வாறு பாதிக்கிறதென்பதையும் நன்கு கவனிக்க வேண்டும்.

### வியாபாரம்

பிறரை ஏமாற்றி லாபம் சம்பாதிப்பதே வியாபாரம் என்று சிலர் எண்ணுகிறார்கள். இது முற்றிலும் தவறு. சாமான்களை உற்பத்தி செய்துவிட்டால் மட்டும் போதாது. அவைகளைத் தேவை யுள்ளவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பதும் உற்பத்தி செய்வதைப் போலவே மிகவும் அவசியமான தொழிலாகும். செல்வ வளர்ச்சிக்கு நன்கு நடத்தப்படும் வியாபாரம் இன்றியமையாதது.

வியாபாரத்தை மூன்று கிளைகளாக வகுக்கலாம். சாமான்களை உபயோகிப்பவர்களுக்கு நேரில் விற்கும் பொழுது அதைச் சில்லறைக் கடை வியாபாரம் என்று சொல்வார்கள். அதனால் சிறிய வியாபாரம் என்று எண்ண வேண்டாம். கிராமங்களில் பத்து ரூபாய் சாமான்கள் கொண்ட கடைகளைக் காணலாம். பெரிய நகரங்களில் லக்ஷக்கணக்கான முதல் போட்டு தினசரி பல ஆயிரம் ரூபாய்களுக்கு வியாபாரம் செய்யும் சில்லறைக் கடைகளும் உண்டு.

உற்பத்தி ஸ்தலங்களிடமிருந்து சாமான்களை மொத்தமாக வாங்கி சில்லறைக் கடைகளுக்கு விற்பதை மொத்த வியாபாரம் என்று சொல்லலாம். இதற்கு அதிக முதல் வேண்டும். வாங்கும் சாமான்களுக்கு முன்னதாகவே அச்சாரம் கொடுக்க வேண்டியிருக்கும். சில்லறைக் கடை வியாபாரிகளுக்குக் கடனுக்கு விற்க வேண்டியும் இருக்கும். சாமான்களை வாங்கிக் கிடங்குகளில் ஸ்டாக் (Stock) செய்யவும் வேண்டியிருக்கும். ஆதலால் இயந்திர சாலைகளைப்போல் மொத்த வியாபாரத்தையும் கம்பெனிகள் அமைத்து நடத்துவது வழக்கமாகி வருகிறது.

மூன்றாவது, வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், அங்கிருந்து இறக்குமதி செய்து மொத்த வியாபாரிகளுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் விற்பதும்; இதை வெளிநாட்டு வியாபாரம் என்று கூறலாம். இதற்குப் பெரும் முதல் வேண்டும். சாமான் வாங்குவதற்கும், விற்றுக் கொள்முதல் ஆவதற்கும் இடையில் பலமாதங்களாகலாம். சாமான் சப்ளை வேண்டிய காலத்திற்குப் பலமாதங்களுக்கு முந்தியே ஒப்பந்தம் செய்தாக வேண்டும். இடையில் விலை மாறுவதால் அதிக லாப நஷ்டங்கள் உண்டாகலாம். நாணய விகிதங்களின் மாறுபாடுகளாலும் லாப நஷ்டங்கள் சம்பவிக்கக்கூடும். இவற்றை யெல்லாம் சமாளிப்பதற்குச் சக்தி வேண்டும். பெரிய முதலாளிகளால்தான் இது சாத்தியமாகும். அவர்களுக்குக்கூட வெளிநாடுகளிலிருந்து பணம் வசூலிப்பதற்கும், மற்ற நாட்டு முதலாளிகளின் போட்டிகளைத் தடுப்பதற்கும் அரசாங்கத்தின் உதவி வேண்டும். ஆதலால் வெளிநாட்டு வியாபாரிகள் பெரிய இயந்திர சாலை முதலாளிகளைப்போலவே சர்க்காரின் செல்வாக்கைப் பெற முயலுகின்றனர்.

தேவைக்கேற்ப சாமான்களைச் சேகரித்துக் கொடுப்பது வியாபாரத்தின் நியாயமான வேலை. ஆனால் சாமான்களை வாங்கி வைத்துக்கொண்டு அவற்றினிடம் ருசி உண்டாக்குவது தற்காலத்திய வியாபார தந்திரமாகிவிட்டது. இதற்குச்

சாதனம் விளம்பரம். இக்காலத்தை விளம்பர சகாப்தமென்று சொல்வது சரியாகும். எங்கே போனாலும் ஒரே விளம்பர மாக இருக்கிறது. பத்திரிகைகள் பெரும்பாலும் விளம்பரத் திலிருந்து தம் வருமானத்தின் பெரும்பகுதியைச் சம்பாதிக் கின்றன. விளம்பரத் தந்திரங்களில் நிபுணர்களுக்கு ஆயிரக் கணக்கான சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. இதை ஒரு கலையாகப் பாவித்து அதில் பயிற்சி அளிப்பதற்குத் தனிக் கலாசாலைகளும் பெரிய கலாசாலைகளில் தனி வகுப்புகளும் அமெரிக்கா முதலிய நாடுகளில் ஏற்படுத்தப்பட் டிருக்கின் றன.

மற்றோர் முறையும் அதிகமாகக் கையாளப்பட்டுவருகிறது. சாமான்கள் வாங்கக் கையில் பணம் இல்லாதவர்களுக்குப் பத்து, இருபது, முப்பது தவணைகளில் கட்டும்படி ஒப்பந்தம் செய்வித்து விற்று விடுகிறார்கள். தவணை கட்டி முடியும் வரையில் சாமான்கள் வியாபாரிகளின் சொத்தாக இருக்கும். நடுவில் தவணை கட்டத் தவறினால் சாமானை எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். இதனால் ஏழைகளும், நடுத் தர நிலைமையில் இருப்பவர்களும் தங்கள் சக்திக்கு மேல் செலவு செய்யும்படி தூண்டப்படுகிறார்கள். பத்து ரூபாய் கட்டிவிட்டு ஒரு சைகிளையோ தையல் மிஷினையோ வாங்கி வரும் பொழுது சந்தோஷமாக இருக்கிறது. அப்படியே மாதம் இருநூறு ரூபாய் சம்பளமுள்ள ஒரு உத்தியோகஸ் தன் ஐந்நூறு ரூபாய் கட்டி ஒரு மோட்டார் வாங்கிவந்து தன் குடும்பத்தோடு உல்லாசமாகப் போக நினைக்கிறான். ஆனால் மாதாமாதம் தவணை கட்டும்பொழுது கஷ்டம் தெரிகிறது. தவணை கட்டாமல் கட்டின தொகைகளையும் இழந்துவிட நேரிடுகிறது.

விளம்பரச் செலவிற்கும், கடன் வசூலாகாமல் போகும் நஷ்டத்திற்கும் சாமான்களின் விலையை உயர்த்தி வசூல் செய் கிறார்கள். இக்காரணத்தால் சாமான்கள் உற்பத்தியாகுமிடத் தில் உள்ள விலைக்கும், உபயோகிப்பவன் கொடுக்கும் கிரயத் திற்கும் பெரிய வித்தியாசம் இருக்கின்றது. மோட்டார்

போன்ற சாமான்களின் விலை இரண்டு, மூன்று மடங்காகி விடுகின்றது.

சில முதலாளிகள் சாமான்களை வாங்கிச் சேகரித்து வைத்துக்கொண்டு அவற்றின் விலையை இஷ்டப்படி உயர்த்தி லாபம் சம்பாதிப்பதுண்டு. உற்பத்தி செய்கிறவர்கள் சிலரா கவும், அவர்களே மொத்த வியாபாரம் செய்பவர்களாகவு மிருந்தால் இது சுலபம். மண்ணெண்ணெய் வியாபாரம் இதற்கு நல்ல உதாரணம். இந்தியாவில் பர்மா ஷெல் கம் பெனி (**Burma Shell Company**) யாரும், அமெரிக்கா ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனியாரும் மண்ணெண்ணெய் வியா பாரத்தைப் பங்கு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சில வரு ஷங்களுக்குமுன் இவ்விரு கம்பெனிகளும் சண்டை போட்டுக் கொண்டு பெட்ரோல், மண்ணெண்ணெய் விலையை மிகவும் குறைத்து விட்டார்கள். பிறகு இருவரும் சமரசம் செய்து கொண்டு விலையை திடீரென்று உயர்த்தினார்கள். சிமெண்ட் வியாபாரத்தில் இவ்விதச் சண்டை சமீபத்தில் ஏற்பட்டு விலை குறைந்ததும் எல்லோருக்கும் தெரியும்.

அதிகமாக வெளிநாட்டு வியாபாரம் ஆகும் சரக்குகளின் பேரில் கடன் பத்திரங்களைப் போலவே பெரிய சூதாட்டம் நடக்கிறது. பம்பாய்ப் பருத்தி வியாபார நிலையத்தில் (**Bombay Cotton Exchange**) தினம் லக்ஷம் ரூபாய் தோற் பதும், ஜெயிப்பதும் சாதாரண அனுபவம். இவர்கள் பஞ்சு, பருத்தி வாங்குவதில்லை. வாங்குவதாகவும், விற்பதாகவும் ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார்கள். விலைகள் மாறும் பொழுது லாப நஷ்டங்களைக் கணக்குப்போட்டு நஷ்ட மடைந் தவன் செலுத்த லாப மடைந்தவன் வாங்கிக்கொள்ளுகிறான். முதலாளித் தத்துவம் பெருகி நிற்கும் எந்த முறையிலும் இவ்வித சூதாட்டத்தைத் தடுக்க முடியாது.

வியாபாரம் சரியாக நடப்பதற்குப் பாங்கிகள் மிகவும் தேவை. ஒவ்வொரு சமயமும் சில்லறை வியாபாரி சாமான் களை விற்று மொத்த வியாபாரிக்குச் செலுத்தியும், சில்லறை வியாபாரியிடமிருந்து வசூலித்து மொத்த வியாபாரி உற்பத்தி

செய்வோர்களுக்குப் பணம் செலுத்தியுமே வியாபாரம் நடக்க வேண்டுமாயின் அது அடிக்கடி நின்றே போகும். இவர்களுக்கெல்லாம் சாமான்களின் அடகின் பேரிலும், வியாபாரிகளின் சொந்த ஜாமீன் பேரிலும் குறுகிய தவணைக் கடன் கொடுத்து பாங்கிகள் உதவுகின்றன.

வியாபாரிகள் அடிக்கடி தகாத லாபம் வைத்து விற்பதைத் தடுத்துச் சரக்குகளைச் சரசமாகக் கொடுப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல சாதனங்களாகின்றன. சாமான்களை உற்பத்தி செய்வதற்கும், பாங்கிகள் நடத்துவதற்கும் கூடக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தலாம். நமது நாட்டில் பணம் கடன் கொடுக்கும் சங்கங்களே பெரும்பான்மையாக இருக்கின்றன. ஆயினும், வியாபாரத் துறையில்தான் இச்சங்கங்கள் மிகவும் நன்றாகவும், சுலபமாகவும் வேலை செய்ய முடியும் என்பது மற்ற நாடுகளின் அனுபவம். சாதாரணமாக இச்சங்கங்கள் நல்ல சாமான்களை வாங்கி மற்றக் கடைகள் விற்கும் விலைக்கே விற்பது வழக்கம். ஆனால் இதில் வரும் லாபத்தை அங்கத்தினர்களுக்குச் சாமான் வாங்கின ஈவுப்படி திருப்பிக் கொடுத்து விடுகின்றன.

அதிக லாபம் சம்பாதிப்பதற்குச் சாமான்களின் விலையை உயர்த்துவது ஒரு வழி. ஆனால் போட்டியிருக்கும்போது இது சாத்தியப்படாது. இதற்காக நல்ல சரக்குகளையும், மட்ட சரக்குகளையும் கலந்து சரசமாக விற்பது வழக்கம். நெய், பஞ்சு முதலிய சரக்குகளில் இவ்விதக் கலப்பு சேர்ப்பதே தனித்தொழிலாக ஏற்பட்டு விட்டது. இதைத் தடுக்கச் சட்டங்கள் செய்யப் படுகின்றன. உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள் இவற்றால் ஏமாற்றுவோர்களின் சாமர்த்தியம் வளருகின்றதே ஒழிய கலப்புக் குறைவதாகக் காணப்படவில்லை. சுயநலம் ஒரு பெரிய சக்தி. அதைத் தடுப்பது சுலபமல்ல. கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ந்து மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் ஆகிய இரண்டையும் எடுத்துக் கொண்டாலொழிய மட்ட சரக்குகளால் ஏமாற்றும் வழக்கம் அடி-

யோடு தொலையாது. பல தனி வியாபாரிகளுக்கு நடுவில் கூட்டுறவுச் சங்கங்கள்கூட மட்டச் சரக்குகளையும், கலப்புச் சரக்குகளையும் வைத்து வியாபாரம் செய்ய வேண்டிய நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது. விலை சரசத்தை விரும்பி உண்மை யறிந்த ஜனங்கள்கூடத் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்ளத் தயாராக இருக்கின்றனர்.

## செலவும், மிச்சமும்

சாதாரணமாக ஒரு மனிதன் தனவந்தனுக வேண்டு மானுல் செலவைக் குறைத்து, பணத்தை மிச்சம் செய்ய வேண்டும். ஒரு தேசத்தை எடுத்துக் கொண்டால் இது ஓரளவுதான் உண்மையாகும். மிச்சம் பிடிப்பது எப்பொழு தும் நன்மையாகாது. சிலவேளை உற்பத்திக்கு மேல் செலவு செய்வதுகூட நன்மை பயக்கலாம். அதாவது வருங்கால உற்பத்தி சக்தியை வளர்க்கக்கூடிய காரியங்களுக்கு வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்கியும் செலவு செய்வது லாபகர மாக இருக்கலாம்.

ஒரு நாட்டின் மக்களில் பெரும்பாலோர் அதிக மிச்சம் செய்வதால் அந் நாட்டிற்கு எப்பொழுதும் லாபம் கிடைக் காது. பல சமயங்களில் நஷ்டமும் உண்டாகும். தாராள மாகச் செலவு செய்வதால் சாமான்களின் உற்பத்தி பெரு கும். அதனுல் தொழில்கள் வளரும். வேலையில்லாத் திண் டாட்டம் குறையும். இதற்கு மாருகப் பணக்காரக் கூட்டங் கள் அதிக மிச்சம் செய்வதால் தொழில் குறைந்து போக லாம்.

ஒரு நாட்டிலுள்ள மக்கள் ஒரு சமயத்தில் தங்களிடம் உள்ள உழைப்புச் சக்தியையும், முன் உழைப்பால் செய்யப் பட்ட பொருள்களில் மிச்சமாக இருப்பவைகளையும் மூன்று விதங்களில் செலவிடலாம். உடனே உபயோகிக்கக் கூடிய வழிகளில் பிரயோகித்து உண்டு களிக்கலாம்; அல்லது முதலாகப் பாவித்து, வருங்காலத்தில் செல்வ விருத்தி செய் யக்கூடிய இயந்திரசாலைகளை ஸ்தாபிக்கவும், நிலத்தின் விவ

சாயம் வளரக்கூடிய சாதனங்களுக்காகவும் செலவு செய்யலாம்; மூன்றாவதாக நேரில் புதிய வருமானத்தைக் கொடுக்காமற் போனாலும் பொதுநலத்தைப் பெருக்கும் ஜல வசதிகள், சுகாதாரம், நல்ல ரஸ்தாக்கள், புத்தக சாலைகள், கலாசாலைகள் முதலிய சமூகப் பொதுக் காரியங்களில் செலவிடலாம்.

இம் மூன்று துறைகளில் ஒவ்வொன்றிலும் எவ்வளவு பகுதி செலவு செய்ய வேண்டுமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அது கால தேச வர்த்தமானத்தைப் பொறுத்திருக்கிறது. ஆனால் பொதுவாகச் சில நியமங்களைக் கூறலாம். மிகவும் ஏழையாக இருக்கும் தேசங்களுக்கு முதல் சேர்த்துத் தொழில் விருத்தி செய்வதே முதல் கடமை. செலவைக் குறைத்து பாங்கிகளின் மூலம் மிச்சப் பணத்தைத் தொழில்களுக்கு முதலாகக் கொடுக்கும் பழக்கத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்.

தொழில் விருத்திக் கடுத்தபடியாக, பொது நலங்களை அதிகரிப்பது அவசியமாகும். ஏனெனில் அவற்றால் சமூகத்தில் உள்ள எல்லோருக்கும் வித்தியாசமின்றிச் சௌகரியமும், சுகமும் கிடைக்கும். ஆரோக்கியம் வளரும். கல்வி விருத்தியாகும். நாகரிகம் உயரும். இவ்வாறு பொது நலங்களை விருத்தி செய்வதற்குக் கருவியாயிருப்பது வரி. பின் அத்யாயத்தில் வரியைப்பற்றி விரிவாகக் கூறப்படும். ஆனால் வரியினால் ஒரு நாட்டு மக்களுக்கு நஷ்டம் உண்டாகிறதென்பது தப்பெண்ண மாகும். வரியை வாங்கி, எதேச்சாதிகாரமுள்ள அரசாங்கங்கள் விரயம் செய்து வந்திருக்கும் காரணத்தால் இந்த அபிப்பிராயம் வேரூன்றி வந்திருக்கிறது. வரிகளைச் சரியாக உபயோகிக்கும் சமூகத்தில் வரி அதிகமாவதால் சமூக நன்மையும் பெருகும்.

தொழில் விருத்தியும், சமூகச் செலவும் போதிய அளவு ஏற்பட்டுள்ள நாடுகளில் ஜனங்கள் அதிகமாக மிச்சம் செய்வதால் தீமையே விளையும். அந்நிலைமையில் தாராளமாகச் செலவு செய்வதே தருமமாகிறது. இந்த மகாயுத்தம் ஆரம்ப

மாவதற்கு முன் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் பொருளாதார நிபுணர்களும், இராஜதந்திரிகளும் பணத்தை அதிகமாக மிச்சப் படுத்தாமல் செலவழிப்பதின் அவசியத்தைப் பற்றியே தீவிர பிரசாரம் செய்தார்கள். இதற்குக் காரணம்; பணக்கார வகுப்பார்களே அதிக மிச்சம் செய்யக்கூடுமாதலால், அவர்கள் அனாவசியமாகத் தொழிற்சாலைகளைக் கட்டி விடுகிறார்கள்; அல்லது மற்ற நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்து ராஜீய சிக்கல்களை உண்டாக்கி விடுகிறார்கள்.

அதிகமாக மிச்சம் செய்வதால் வேறு தீமைகளும் உண்டாகின்றன. வட்டி குறைந்து சர்க்காரும், கம்பெனிகளும், தனி ஆசாமிகளும் எளிதில் கடன் வாங்கி வீண் செலவு செய்ய வசதி யுண்டாகிறது. இதைத் தடுப்பதற்கு ஒரு நல்ல யுக்தியுண்டு. இக்காலங்களில் தொழிலாளிகளின் கூலிகளையும், கீழ்த்தர உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களையும் உயர்த்திவிட்டால் முதலாளிக் கூட்டங்களின் லாபம் குறைந்து, தொழிலாளிகளின் சுகமும் பெருகிச் சமூகமும் செழிக்கும். ஆனால் இம்மாதிரி செய்வதற்கு முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நடுவில் பட்சபாதமில்லாத வல்லமை பெற்ற அரசாங்கம் வேண்டும்.

செலவிற்கும் மிச்சத்திற்கும் சரியான பாகத்தை நிர்ணயிப்பது சிரம சாத்தியமானதாலும், அப்படி நிர்ணயிப்பினும் அமுலுக்குக் கொண்டுவருவது அதைவிடக் கஷ்டமானதாலும் முதலாளித் தத்துவ சமுதாயங்களில் அடிக்கடி பெரிய பொருளாதாரக் குழப்பங்கள் நேரிடுகின்றன. ஒரு சமயம் மிச்சம் அதிகமாகிப் பணம் மலிவாக இருக்கிறது. அதை வாங்கிப் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தி அனாவசியமாகச் சரக்குகளை உற்பத்தி செய்து குவித்து விடுகிறார்கள். அதனால் சரக்குகளின் விலை குறைந்து லாபமும் குறைந்து பல தொழிற்சாலைகளில் நஷ்டமுண்டாகிறது. அவை சிலகாலம் நஷ்டத்தில் நடந்து மூடப்படுகின்றன. கம்பெனி பங்குகளின் விலைகளும், சர்க்கார் கடன் பத்திரங்களின் மதிப்பும்

குறைந்து விடுகின்றன. சரக்கு உற்பத்தியும் வருமானமும் குறுகிவிடுகின்றன. இந்த நிலைமையைப் பொருளாதார மந்தம் என்று சொல்லலாம். இந்த மந்தம் சிலகாலம் நீடித்திருந்தால் சரக்கு, பணம் இரண்டிற்கும் கிராக்கி அதிகரிக்க ஆரம்பிக்கின்றது. மந்த காலத்தில் மூடப்படாத தொழிற்சாலைகளின் லாபம் பெருகுகிறது. அப்பொழுது தப்பிய பணக்காரர்களின் பத்திரங்களும், பங்குகளும் விலையுயர்கின்றன. எங்கும் அதிக பரபரப்பு உண்டாகிறது. இதைப் பொருளாதார ஏற்றம் (Boom) என்று சொல்லுவார்கள். இம்மாதிரி ஓயாமல் பொருளாதாரம் பெருகியும், குறுகியும் ஊசலாடிக் கொண்டிருக்கும். தனி முதலாளிகளால் சமூகத்தின் செல்வத்தின் பெரும்பாகம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் எந்த நாட்டிலும் இந்த ஊசலாட்டத்தைத் தடுக்க முடியாது. பொது உடைமையின் அவசியத்திற்கு இதை ஒரு முக்கிய காரணமாக அபேதவாதிகள் கூறுகின்றனர். 1930-32-ல் ஏற்பட்ட பெரிய பொருளாதார மந்தம் முதலாளி சமுதாயங்கள் எல்லாவற்றையும பாதித்து வேலையில்லாத் திண்டாட்டமும் ஏழைகளின் கஷ்டமும் அதிகரித்த பொழுது ருஷியாவில் மட்டும் மந்தம் ஏற்படவில்லை. இதை ஒரு உதாரணமாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த வாதத்தை ஆட்க்ஷேபித்து முதலாளி சமுதாய வாதிகள் இவ்விதம் பொருளாதாரம் பெருகியும், குறுகியும் வருவதே அவ்வப்போது சமூக நிலை தகுந்தவாறு சீரடைவதற்குப் பெரிய சாதனமென்றும்; அதனால் ஏற்படும் தீமைகளுக்கு எளிதில் பரிகாரம் செய்து விடலாமென்றும் சொல்கிறார்கள். எப்படி தேகநிலை பாதிக்கப்பட்டால் அதை நிர்ணயிக்க தர்மா மீட்டர் (Thermometer) உபயோகப் படுகின்றதோ, அவ்விதமே பொருளாதார நிலையை நிர்ணயிப்பதற்கு இந்த ஊசலாட்டம் பிரயோசனப் படுகிறதென்று கூறுகிறார்கள். இந்த ஊசலாட்டம் இல்லாத பொது உடைமைச் சமுதாயத்தில் முதல் எவ்வளவு வேண்டும், செலவு எவ்வளவு செய்யலாம், தொழிற்சாலைகள் சரியாக

நடக்கின்றனவா என்பவைகளை நிர்ணயிக்க இயற்கை வழிக ளின்றி இராஜ தந்திரிகளின் மனப்போக்குகளையே பொறுத் திருக்குமென்றும், அதனுல் சமூகத்திற்கு அனர்த்தம் உண்டாகுமென்றும் வாதிக்கிறுர்கள்.

இந்த முடிவு சீக்கிரத்திலேயே அனுபவத்தால் தெரிந்து விடும்.

# 5. செல்வப் பிரிவினை

## சராசரி வருமானம்

சட்டியில் இருந்தாலொழிய அகப்பையில் வராது. நாட்டில் மொத்தத்தில் செல்வம் கொஞ்சமா யிருந்தால் எப்படி பிரித்துக் கொடுத்தாலும் அதிகம் கிடைக்காது. செல்வத்தை விருத்தி செய்வதைப் போலவே அதனை நியாயமாக நாட்டின் மக்கள் அனைவருக்கும் பிரித்துக் கொடுப்பதும் பொருளாதாரத்தின் முக்கிய அம்சமாகும். ஒரு குடும்பத்தின் வருமானம் குறைவாக இருப்பினும் தாய் தந்தையர் எல்லாக் குழந்தைகளுக்கும் பட்சபாதமின்றி உணவும் உடையும் அளித்து வந்தால் சந்தோஷமும் சமாதானமும் நிலவும். பெரிய பணக்காரக் குடும்பத்திலும் சிலருக்கு விசேஷ சலுகையும், மற்றவர்களுக்கு அலக்ஷ்யமும் காட்டப்படின் குடும்பத்தில் கலவரமும், குழப்பமும் ஏற்பட்டு எல்லாரும் துன்புறுவார்கள். குடும்பத்தைப் போல்தான் தேசமும். தேசத்தில் எல்லோருக்கும் கௌரவ ஜீவனத்திற்கு வேண்டிய வருமானம் இருப்பது அவசியம். இது இருந்தபோதிலும், சமூகத்தின் செல்வத்தில் ஒரு சிறு கூட்டத்தார் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டு பெரும்பாலோருக்குச் சிறிய பகுதி கொடுக்கப்பட்டால் பொறாமையும், சண்டையும் உண்டாகாமல் இராது.

ஒரு நாட்டின் செல்வ நிலையை அதன் மக்களின் 'சராசரி வருமான'த்தால் குறிப்பிடுகின்றனர். அத்தேசத்தில் உற்பத்தியாகும் விவசாயப் பொருள்கள், இயந்திரசாலைச் சரக்குகள் இவற்றை மதிப்பிட்டு, மற்ற சமூக வேலைகளையும் மதிப்பிட்டு மொத்தம் கூட்டி ஜனத்தொகையால் வகுத்து வரும் ஈவுக்கு இந்தப் பெயர் கொடுக்கிறார்கள். இது ஒரு ஸ்தூலமான கணக்குத்தான். இதில் தடுக்கமுடியாத பல பிசகுகள் ஏற்படும். ஆதலால் இந்தியாவில் சராசரி வருஷ வருமானம் முப்பது ரூபாய்; இங்கிலாந்தில் வருமானம் அறுநூறு ரூபாய் என்று புஸ்தகங்களில் படித்தும், பிரசங்கங்களில் கேட்டும் நாம் துக்கப்படும்பொழுது இது ஓரளவு ஏமாற்றம் என்பதையும் மறந்துவிடக் கூடாது. உதாரணமாக இந்தியாவில் பெரும்பாலோர் வீட்டு வாடகை கொடுப்பதில்லை. விறகு விலைக்கு வாங்குவதில்லை. ஆடு, மாடுகளின் தீவனத்திற்குக் காசு கொடுப்பதில்லை. ஒவ்வொன்றிற்கும் மற்ற தேசங்களில் விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டும். இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் விட இந்தியா மிகவும் ஏழை என்பதை மறுக்கமுடியாது. ஆனால் சராசரி வருமானக் கணக்குகளைப் பற்றிப் பேசும் பொழுது கொஞ்சம் சாவதானமாக இருக்கவேண்டும்.

சராசரி வருமானக் கணக்கையே ஆதாரமாகக் கொண்டு காரியம் செய்வதில் இன்னொரு அபாயம் இருக்கிறது. இன்றைக்கு இந்தியாவின் வருஷ வருமானம் ஆயிரங்கோடி ரூபாய் என்று வைத்துக் கொள்வோம். இன்னும் இருபது வருஷங்களில் அது இரண்டாயிரம் கோடியாகிறதென்றும் நினைத்துக் கொள்வோம். நாட்டின் சராசரி வருமானம் இரட்டிப்பு ஆகிறது. உடனே இந்திய ஜனங்களுக்கு இரட்டிப்பு சௌகரியம் ஏற்பட்டிருக்கிறதென்று நினைத்துக் கொள்ளக் கூடாது. அதிகமான ஆயிரம் கோடி ரூபாயும் ஒரு லக்ஷம் குடும்பங்களுக்குப் போய்ச் சேரக்கூடும். ஏழு கோடிக்கு மேலான குடும்பங்கள் பழைய நிலையிலேயே இருக்கக் கூடும். சில காலங்களில் பெரும்பாலான ஜனங்

களின் வருமானம் குறைந்துங்கூட நாட்டின் மொத்த வருமானம் அதிகரிக்கலாம். சென்ற ஐம்பது வருஷங்களில் இந்தியாவில் இப்படித்தான் நேர்ந்திருக்கிறது. கிராமங்களில் குடிசைத் தொழில்கள் அழிந்துவிட்டன. படிப்புக்கும், சொகுசான வாழ்க்கைக்கும் பணக்காரர்களும், மிராசுதாரர்களும் பட்டணங்களுக்குப் போய்விடுகிறார்கள். இக் காரணங்களால் கிராமவாசிகளின் வருமானம் குறைந்து போயிருக்கின்றது. ஆனால் இந்தியாவின் மொத்த வருமானம் இக் காலத்தில் அதிகரித்திருப்பதாகச் சர்க்கார் புள்ளி விவரங்களைக் காட்டுகிறார்கள்.

சென்ற நூறு வருஷங்களில் இந்தியாவின் ஜனத்தொகை ஏறக்குறைய இரட்டித்திருக்கிறது. மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்குப் பத்துப் பேர்தான் பட்டணங்களில் இருக்கிறார்கள். ஆதலால் கிராமங்களில் ஜனத்தொகை நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் பெருகியிருப்பதாக ஏற்படுகிறது. இதற்குத் தகுந்தாற்போல் கிராமங்களில் வீடுகள் கட்டப்படவில்லை யென்று எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். உணவு, உடை எதிலும் கிராமவாசிகளின் நிலை கீழே போயிருக்கிறதென்று கூறுவதும் தவறாகாது. ஒரு நாட்டில் பெரும்பாலான குடும்பங்கள் வசிக்கும் தோரணைக்கு 'ஜீவன நிலை' (Standard of life) என்று பெயர். இது நாட்டிற்கு நாடு வித்யாசப்படும். ஒரு தேசத்தின் சராசரி வருமானம் உயரும் விகிதப்படி மக்களின் ஜீவன நிலையும் உயர்ந்தால் அப்பொழுதுதான் செல்வம் சரிவரப் பிரித்துக் கொடுக்கப்படுவதாகும்.

அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் மொத்த வருமானத்தில் நூற்றில் ஒருவருக்கு 25 பங்கும், மற்ற பத்துப் பேர்களுக்கு 25 பங்கும், மீதி 89 பேர்களுக்கு 50 பங்கும் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது தேசத்தின் சராசரி வருமானத்தில் பாதிதான் பெரும்பான்மையான குடும்பங்களுக்குக் கிடைக்கின்றது. யத்தில் ஒரு குடும்பத்துக்கு அதைப்போல் 2½ மடங்கு

கிடைக்கிறது; நூற்றில் ஒன்றுக்கு 25 மடங்கு கிடைக்கிறது. இந் நாட்டில் பெரிய முதலாளிகளின் தொகை அவ்வளவு அதிகமில்லையாயினும் அதற்குப் பதிலாகச் சிற்றரசர்களும் ஜமீன்தார்களும் இருக்கிறார்கள். நம் நாட்டின் செல்வப் பிரிவினையும் மேற்கண்ட விதம் இருக்கிறதென்று நம்பலாம். ஆதலால், நமது குடியானவர்களின் சராசரி வருமானம் வருஷம் பதினைந்து, இருபது ரூபாய்; அதாவது சாதாரணமாகக் கணக்கிடப்படும் சராசரி வருமானத்தில் பாதிதான். புருஷன், பெண்ஜாதி, மூன்று குழந்தைகள் அடங்கிய குடும்பத்தின் வருட வருமானம் ரூ. 75 லிருந்து ரூ. 100 வரை இருக்கலாம். இது ஏறக்குறைய சரியான கணக்கென்று கிராம அனுபவமுள்ளவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

எல்லோருக்கும் நாட்டின் செல்வத்தைச் சமமாகப் பிரித்துக் கொடுத்துவிடக் கூடாதா என்ற பிரச்னை மேலே சொன்னதிலிருந்து கிளம்பும். இப்படித்தான் செய்ய வேண்டுமென்று பிரசித்தி பெற்ற ஆங்கில நாடகாசிரியர் பர்னார்ட் ஷா (**Bernard shaw**) ஒரு புத்தகத்தில் வாதித்திருக்கிறார். இதைப் பற்றிப் பிறகு விசாரிப்போம்.

## வாய்க்கால்களும் கால்வாய்களும்

ஒரு நாட்டின் செல்வத்தை ஒரு பெரிய ஏரிக்கும் அதன் சமூக வகுப்புக்களை ஆயக்கட்டு நிலங்களுக்கும் ஒப்பிடலாம். ஏரியிலிருந்து வாய்க்கால்கள் பிரிந்து, ஒவ்வொரு வாய்க்காலும் பல கால்வாய்கள் வழியாக ஓடி வயல்களுக்கு ஜலம் பாய்கின்றது. மொத்த ஜலம் ஒரு சமயத்தில் குறிப்பிட்ட அளவாக இருப்பதால் ஒரு வாய்க்காலில் மிதமிஞ்சிச் சென்றால் மற்ற வாய்க்கால்களில் குறைந்து போகும். சில இடங்களில் மூன்று போகம் மகசூல் கிடைக்கும் பொழுது மற்ற ஸ்தலங்களில் ஒரு போகத்துக்குக் கூடத் திண்டாட்டமாகிறது.

இவ்வாறே செல்வமும் பல துறைகளில் ஜனங்களைச் சேருகின்றது. ஒரு துறையில் அதிகமாகச் சென்று சில அதிர்ஷ்டசாலிகள் கோடீச்வரர்களாக இருக்கின்றனர். மற்ற

வழிகளில் கொஞ்சம் கொஞ்சமாகக் கசிவதாலும் அதைப் பங்கிட்டுக்கொள்வோர் சங்கியை அதிகமாக இருப்பதாலும் அவர்கள் தினசரி யோகக்ஷேமம் நடத்துவதே பிரம்மப் பிரயத்தனமாகிறது. ஏரியின் வாய்க்கால்களைச் சரிவர அமைத்து மதகுகள் போட்டு எல்லா நிலங்களுக்கும் சமமாகப் பாய்ச்சக்கூடும். ஆனால் அப்பொழுது மூன்று போகம் பயிர் செய்து வந்த பட்டாதார்கள் ஆக்ஷேபிப்பார்கள். அவ்வாறே செல்வப் பிரிவினையைச் சமூக ஏற்பாடுகளால் மாற்ற முடியும். ஆயினும் எந்த மாறுதல் செய்ய ஆரம்பித்தாலும் சில கூட்டத்தாரின் வருமானம் குறைந்து போகும். அவர்கள் ஆக்ஷேபித்தே தீருவார்கள்.

நாட்டின் செல்வம் பிரிந்துபோகும் பெரிய வாய்க்கால்கள் ஐந்து: (1) உழுது பயிர் செய்து ஜீவனம் செய்யும் விவசாயிகளின் ஊதியம்; (2) தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் கூலி; (3) வியாபாரிகளின் வருமானம்; (4) சர்க்கார், ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவற்றின் உத்தியோகஸ்தர்களின் சம்பளம்; (5) குத்தகை யென்றும், வட்டியென்றும், டிவிடெண்ட் என்றும், முதலுக்குக் கிடைக்கும் லாபம்.

இந்த ஐந்து வாய்க்கால்களிலிருந்து பல கால்வாய்கள் பிரிந்து போகின்றன. இவற்றை மூன்று விதமாகப் பிரிக்கலாம். (1) மேற்கூறப்பட்ட கூட்டத்தார்களின் வேலைக்குச் சாதகம் செய்வோர்கள்: உதாரணம்—வண்டி யோட்டுவோர், மூட்டை தூக்குவோர் முதலியோர்; (2) அவர்களின் லௌகிக வாழ்க்கைக்கு அவசியமானவர்கள்: உதாரணம்—உபாத்தியாயர்கள்; வைத்தியர்கள், வக்கீல், வண்ணான், நாவிதன் முதலியவர்கள். (3) நாகரிக வளர்ச்சிக்கும் உல்லாசப் பொழுது போக்குக்கும் வேண்டிய தொழில்களில் ஈடுபட்டவர்கள்: உதாரணம்—ஆசிரியர்கள், சிற்பிகள், பாடகர்கள், நடிகர்கள் முதலோர். இவர்களின் வருமானங்கள் முதலில் கூறிய முக்கிய ஐந்து கோஷ்டியார்களின் வருமானத்திலிருந்து கிடைக்கின்றது.

இப்பொழுது சமூகத்தில் மேற்கண்டவாறு செல்வம் பிரிவினை செய்யப்படுவதில் நியமங்கள் இல்லை; நியாயமும் இல்லை. நியமங்கள் ஏற்படுத்தி நியாயம் வழங்க முடியுமா என்னும் விஷயம் பொருளாதார சாஸ்திரத்திலேயே மிகவும் கடினமான பிரச்னை. இதைப் பற்றிப் பெரிய அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. சாங்கோபாங்கமாகவும் ஆராய முடியாது. ஓரளவு குறிப்பிடுவதுதான் சாத்தியமாகும்.

செல்வத்தை நியாயமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமானால் எந்த நியமத்தை அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென்பது ஒரு முக்கிய கேள்வி. "சேவைக்குத் தகுந்த ஊதியம் கொடுக்கப்படவேண்டும்" என்று பல நிபுணர்கள் சொல்லுகின்றனர்.

"சேவைக்கும் ஊதியத்திற்கும் ஒருநாளும் உண்மையான சம்பந்தம் ஏற்படுத்த முடியாது. தவிரவும் விஞ்ஞான ஆராய்ச்சியின் பலனாக மனிதன் வேண்டிய செல்வத்தை உற்பத்தி செய்துகொள்ளலாம். ஆதலால் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது குடும்பத்திற்கும் தேவையுள்ள அளவு கொடுப்பதே நமது லக்ஷியமாக இருக்கவேண்டும்" என்று பொதுஉடைமை வாதிகள் கூறுகின்றனர். "இரண்டும் சாத்தியமில்லை. வேலைகளைச் சீர்தூக்குவதும் முடியாது. ஆசைக்கு அளவில்லையாதலின் அதனைப் பூர்த்தி செய்ய முயலுவது சமுத்திரத்திற்கு அணை போடுவது போலாகும். ஆதலால் எல்லோருக்கும் சமமாகப் பங்கு போட்டுக் கொடுப்பதுதான் சரி" என்கிறார் பெர்னார்ட் ஷா.

இம் மூன்றும் மிகவும் ருசிகரமான வாதங்கள். ஆனால், நடைமுறையில் இருந்து வரும் செல்வப் பிரிவினை இதில் எந்த முறையையும் அனுசரித்து நிறைவேறவில்லை. இப்போதைய ஏற்பாட்டில் அதிர்ஷ்டமே அதிஷ்டான தேவதை. அடுத்தாற்போல் குடும்ப, சமூக செல்வாக்குத் தந்திரமும், பிறரைச் சமாளித்து நிர்வாகம் செய்யும் சாமர்த்தியமும் முக்கியமாகப் பாவிக்கப் படுகின்றன. புத்திக்

கூர்மையும், தொழில் திறமையும் கடைசித் தரத்தில் கருதப் படுகின்றன. இம்மாதிரி அமைக்கப்பட்ட சமுதாயத்தில் உச்சியில் கோடீச்வரர்களும் அடிப்படையில் கோடிக் கணக் கான ஏழைகளும் இருப்பது ஆச்சரியமில்லை. இது ஒரு அனாதியான விஷ விருக்ஷம். திடீரென்று வெட்டிச் சாய்த்து விட முடியாது. ஆயினும், சமூக சீர்திருத்தங்களால் இதன் கொடுமைகளை நீக்க முடியும். அந்த வழிகளை ஆராய்வது பொருளாதார ஞானத்தின் முக்கிய பலனாகக் கருதவேண்டும்.

இந்தச் சீர்திருத்தம் முதலில் சர்க்கார் ஆதீனத்துக்குட் பட்ட எல்லா பொதுச் செலவுகளிலும் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏனெனில் வரி வசூலித்து சர்க்கார் செலவழிக் கும் பணத்தைத் திட்டம் போட்டு விநியோகிக்க முடியும். இதில் நியாயம் வழங்குவது சுலபம். சர்க்கார் உத்தியோகஸ் தர்களின் சம்பளங்களும், சௌகரியங்களும் கிரமமாக ஏற் பட்டால் அதை அனுசரித்தே சமூகத்தின் இதர வகுப்பார் களின் வருமானங்களை மாற்றி யமைக்கலாம். ஆதலால் இதையே முதலில் ஆலோசிப்போம்.

### சர்க்கார் வரியும், செலவும்

ஐம்பது வருஷத்திற்குமுன் எந்நாட்டிலும் அரசாங்கத் தார் மொத்த செல்வத்தின் ஒரு சிறிய அம்சத்தையே எடுத் துக்கொண்டு நிர்வாகம் செய்தனர். போக்கு வரவு சாதனங் களின் குறைவாலும், காகித நாணயம், பாங்கி வசதிகள் இல்லாமையாலும் வசூல்செய்து மத்திய பொக்கிஷங்களில் சேர்ப்பது சிரம சாத்திய வேலையாக இருந்தது. அரசாங்கத் தின் வேலையும் மிகக் குறைவாக இருந்தது. வெளி நாட்டார் படை யெடுக்காமலும், உள் நாட்டில் கலகமின்றியும் பார்த் துக்கொள்வதே முக்கிய வேலைகளா யிருந்தன. எங்கேயாவது ஒன்றிரண்டு பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி, சில ராஜ மார்க்கங் களும் அமைத்துவிட்டால் பிரஜைகள் புகழ்வார்கள்.

இப்பொழுது அரசாங்கங்களின் பொறுப்பு மிகவும் அதிகரித்துவிட்டது. கல்வி, சுகாதாரம், வைத்தியம், விஞ் ஞான ஆராய்ச்சி, ஜல வசதிகள் முதலிய சௌகரியங்கள்

செய்துகொடுப்பது அரசாங்கங்களின் முக்கிய கடமைகளாகப் பாவிக்கப்படுகின்றன. பல நாடுகளில் வேலை யில்லாதவர் களுக்கு உதவிச் சம்பளங்கள் கொடுப்பதும், வயோதிகர் களுக்குப் பென்ஷன் அளிப்பதும், கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஆதரவு கொடுப்பதும் பொதுக் கடமைகளாகிவிட்டன.

வேலை வளரச் செலவும் வளரும். சென்ற நாற்பது வருஷங்களில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வருமானம் பத்து மடங்காகிவிட்டது. இங்கிலாந்தின் மொத்த வருமானத்தில் ஏறக்குறைய பாதி சர்க்கார் மூலம் செலவழிக்கப்படுகிறது. இந்தியாவில் மத்திய சர்க்கார் நூறு கோடியும், மாகாணங் களும் ஸ்தல ஸ்தாபனங்களும் நூறு கோடியும் ஜனங்களிட மிருந்து வசூல் செய்கின்றன. மொத்த இந்திய வருமானத் தில் இது சுமார் மூன்றில் ஒரு பங்காகும்.

அரசாங்கத்திற்கு வருமானம் வரி மூலம் கிடைக்கிறது. வரி மூன்று வகையில் போடலாம். வருமானத்திலிருந்து நேரில் வசூல் செய்வதற்கு 'நேர் வரி' என்று சொல்லுவார் கள். நிலவரி, வருமான வரி இதன் உதாரணங்கள். முதலில் எல்லா வருமானங்களிலும் ஒரு சமபகுதியை வரியாக வசூலிப்பதே நியாயம் என்று எண்ணினார்கள். ஆனால், இது தவறான முறை யென்று இப்பொழுது ஒப்புக்கொள்ளப் படுகிறது. வருஷம் நூறு ரூபாய் வருமானமுள்ளவனி டம் பத்து ரூபாய் கேட்பதும், ஆயிரம் ரூபாய் வருமான முள்ளவனிடம் நூறு ரூபாய் எடுத்துக்கொள்வதும் சமானமல்ல. நூறு ரூபாயைக் கொண்டு உணவு, உடை வாங்குவது கஷ்டம். அதில் வரி எடுத்துக்கொண்டால் வாழ் விற்கு அவசியமான செலவைக் குறைத்துக்கொள்ள வேண் டும். ஆனால், ஆயிரம் ரூபாயில் நூறு ரூபாய் குறைந்தால் அவசியச் செலவுகளைக் குறைக்க வேண்டியதில்லை. உல்லாசத் திற்காகவும் ஆடம்பரத்திற்காகவும் ஏற்படும் செலவுகள்தான் குறையும். வருமானம் அதிகரிக்க, பணத்தின் பிரயோஜனம் குறைகிறது. கடைசியில் லக்ஷக்கணக்கான வரும்படி உள்ள வர்களுக்குப் பணம் அதிகாரத்திற்கும் அட்டகாசத்திற்குமே

பயன்படுகிறது. ஆதலால் அவசியச் செலவுக்கு வேண்டிய வருமானத்தின்பேரில் வரி போடக்கூடாது. அதற்குமேல் கொஞ்சம் கொஞ்சமாக வரியை உயர்த்திக்கொண்டே போக வேண்டும். கடைசியில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் எடுத்துக்கொண்டு விட்டாலும் அநியாயமாகாது. இந்தியாவில் வருமான வரி இந்த நியமங்களை அனுசரித்தே போடப்பட்டிருக்கிறது. முதல் இரண்டாயிரம் ரூபாய் வரையில் வரியில்லை. அதற்குப் பிறகு ரூபாய்க்கு அரையணாவில் ஆரம்பித்துக் கடைசியில் பத்தணா வரையில் உயருகிறது. நில வரிக்கு மட்டும் இந்த நியாயம் இல்லை. நிலத்தில் பத்து ரூபாய் வருமானம் பெறுபவனும் பதினாயிரம் ரூபாய் குத்தகை வாங்குபவனும் ஒரே ஈவுப்படி கிஸ்தி செலுத்துகிறார்கள். இது அநியாயம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நிலவரி வெகுகாலமாக இம்முறையில் வசூலாகி வருவதாலும், வருமான வரி விகிதத்தை அனுசரித்துத் திருத்தியமைத்தால் பாதிக்குமேல் குறைந்து விடுமாதலாலும் அதை அத் தவறான முறையிலேயே வைத்திருக்கிறார்கள்.

நேரில் வருமானத்திலிருந்து வசூல் செய்யாமல் சாமான்கள் பேரில் சுங்கம் விதித்து வாங்குவதற்கு 'மறைமுக வரி' என்று சொல்லலாம். இந்திய மத்திய சர்க்காருக்கு வருமான வரியில் 15 கோடியும் சுங்க வரியில் 50 கோடியும் கிடைக்கிறது. மறை முக வரியில் சில சௌகரியங்கள் இருக்கின்றன. பொது ஜனங்களை நேரில் கஷ்டப்படுத்தாமல் வசூலாகி விடுகிறது. சாமான்கள் இறக்குமதியாகும்பொழுது, துறை முகங்களிலும், உள் நாட்டு உற்பத்தி ஸ்தானங்களிலும் மொத்தமாக வசூலாகிவிடுகிறது. ஆனால், பல அசௌகரியங்களும் ஏற்படுகின்றன. ஏழை, பணக்காரர் வித்தியாசமின்றி எல்லோரிடமிருந்தும் ஒரே விகிதப்படி வசூல் செய்யப்படுகிறது. உப்பு வரியை எடுத்துக்கொள்வோம். மூட்டை நாலணாவுக்கு உற்பத்தியாகிறது. அதற்கு ரூ 3—2—0 வீதம் வரி வசூலிக்கிறார்கள். ஒரு பணக்காரக் குடும்பத்திற்கு எவ்வளவு உப்பு வேண்டுமோ ஏறக்குறைய அதே அளவு ஒரு

விவசாயியின் குடும்பத்திற்கும் வேண்டும். இருவரிடமும் ஒரேமாதிரி வரி வசூல் செய்வது அநியாயமாகும். தவிர, ஏழைகள் தாராளமாகத் தங்களுக்கு அவசியமான சாமான்களை உபயோகம் செய்வதற்கு இது தடையாக இருக்கும். இக்காரணத்தால் மறைமுகமான வரிகளே கூடாதென்று சில பொருளாதார நிபுணர்கள் வாதிக்கின்றனர். இந்த ஆக்ஷேபணையை ஓரளவு ஒப்புக்கொள்ளலாம். அவசியமில்லாத பொருள்களுக்கு இவ்வித வரி விதிப்பதால் யாதொரு கஷ்டமுமில்லை. சக்திக்கேற்றவாறு அவற்றின் உபயோகத்தைக் குறைத்துக்கொள்ளலாம். சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் புகையிலை போன்ற சாமான்களுக்கு அதிக வரி விதித்து அவற்றின் உபயோகத்தை மட்டுப்படுத்துவது சமூகத்திற்கு நன்மை பயக்கும்.

பொது ஜனங்களுக்குக் குறிப்பிட்ட சேவை செய்து அதற்குக் கட்டணம் விதித்து வாங்குவது மூன்றாவது வரி முறை. தபால், தந்தி, ரயில், ரிஜிஸ்ட்ரேஷன் முதலிய இலாகாக்களில் இம்முறை அனுஷ்டிக்கப்படுகிறது. இதைச் சரிவர நடத்துவதற்கு அந்த வேலையில் வேறு முதலாளிகள் புகாமல் தடுக்க வேண்டும். சென்னை நகரத்திற்குள் கடிதங்கள் கொடுப்பதற்கும், சென்னையிலிருந்து டில்லிக்குத் தூக்கிச் செல்வதற்கும் ஒரே தபால் சார்ஜ் விதிக்கப்படுகிறது. தபால் தொழிலைப் பலர் போட்டியில் நடத்துவதானால் சென்னையில் காலணாவுக்கு எளிதில் கடிதம் பட்டுவாடா செய்துவிடலாம். டில்லிக்கு ஒரு ரூபாய் கொடுத்தாலும் போதாது. ஆனால் மொத்தச் செலவை எல்லோரும் சரி சமமாக ஏற்றுக்கொள்வதால் சொல்ப கட்டணத்தில் தூரத்திற்குத் தபால் அனுப்ப சாத்தியப்படுகிறது. சாதாரணமாக இந்த முறையில் அந்தந்த இலாகாவுக்குரிய செலவுக்கு வேண்டிய கட்டணங்களையே போட வேண்டுமென்பது உத்தேசம்.

அந்தந்த சேவைக்குக் கட்டணம் வசூலித்து இம்மாதிரி எல்லாப் பொது சேவைகளையும் நடத்த முடியாது. பொது வரிகளிலிருந்து நடத்த வேண்டிய இலாகாக்கள்

பல உள. கல்வி சுகாதார இலாகாக்களின் செலவு முழு வதையும் கட்டணம் வசூலித்து நடத்துவதனால் ஏழைகளுக் குக் கஷ்டம் உண்டாகும். நியாய இலாகாவில் அப்படிச் செய் தால் செலவுக்குப் பயந்து பலர் அநியாயத்தைச் சகித்துக் கொள்ள வேண்டிவரும். கோர்ட் கட்டணங்கள் அதிகமாக வைத்திருப்பதால் இந்த நிலைமை ஓரளவு தற்சமயம் ஏற்பட் டிருக்கிறது. மேற்கண்ட முறைகளில் வசூலிக்கப்படும் பணம் நிர்வாக இலாகாக்களுக்குச் செலவழிந்தாலும் சரி, பொதுநல இலாகாக்களுக்குச் செலவழிந்தாலும் சரி, பெரும் பாலும் சம்பளங்களிலும், பென்ஷன்களிலும் செலவு செய்யப் படுகிறது. ஆதலால் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களைச் சரியான முறையில் நிர்ணயிப்பது மிகவும் அவசியமான காரியமாகும். இதன் நியமங்கள் என்ன?

சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு, அவர்கள் வெளியே அம்மாதிரி வேலை செய்தால் என்ன சம்பளம் கிடைக்குமோ அதே சம்பளந்தான் கொடுக்கவேண்டும் என்று சிலர் கூறு கிறார்கள். முதல் தோற்றத்திற்கு இது நியாயமாகவே காணப்படுகிறது. ஆனால் சற்று ஆராய்ந்து பார்த்தால் இந்த நியாயம் அனுபவத்தில் பிரயோசனப்படாது. பல சர்க்கார் உத்தியோகங்களைப்போல் வெளியில் வேலை கிடையாது. போலீஸ்காரனுக்கு மற்ற எந்தத் தொழிலாளியை ஒப்பிட முடியும்? தவிர, சர்க்கார் சம்பளத்தைப் பார்த்துப் பெரும் பாலும் இதர தொழில்களில் சம்பளங்கள் கொடுக்கப்படுகின் றன என்பதையும் மறந்துவிடக் கூடாது.

ஒரு வேலைக்கு லாயக்கானவர்கள் எந்தச் சம்பளத்திற்கு வருவார்களோ அதைத்தான் கொடுக்க வேண்டும் என்று நியமம் வைத்துக் கொள்ளலாம். சாமான்களைப் போலவே சம்பளங்களையும் கிராக்கியைக் கொண்டு நிர்ணயிக்கலாம். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கும் நாடுகளில் போட்டியினால் சம்பளங்கள் மிகவும் குறைந்து வேலைத் திறமையும் குன்றிப்போகும். மேலும் ஒரே உத்தி

யோகத்திற்கு வருடத்திற்கு வருடம் கிராக்கியை அனுசரித்துச் சம்பளம் மாற்றவேண்டி வரும்.

சர்க்கார் வருமானத்தையும், வேலையைச் சரிவரப் பார்க்கக் கூடியவர்களின் வழக்கமான 'ஜீவன நிலை'யையும் பார்த்துச் சம்பளங்களை விதிக்க வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். இந்த நியமம் ஓரளவு சரிதான். ஆனால் சமூகத்தில் எல்லா வகுப்புக்களிலிருந்தும் அபேக்ஷகர்கள் வருகின்றனர். எந்த வகுப்பின் ஜீவன நிலையை ஆதாரமாக எடுத்துக்கொள்வது என்பது சிக்கலான பிரச்னை. மிகவும் ஏழையான வகுப்பார்களை எடுத்துக் கொண்டால் அநியாயமாகும். பணக்கார வகுப்புக்களை அனுசரித்தால் பொதுச்செலவு தாங்க முடியாது.

லஞ்சம் வாங்குவதற்கு இடம் தராமல் சம்பளங்கள் திருப்தியளிக்கக் கூடியதாக இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. இதுவும் சாத்தியமான நியமமல்ல. லஞ்சம் வாங்குவோர் ஏழை உத்தியோகஸ்தர்கள் மட்டுமல்ல. போலீஸ், இஞ்சினீரிங் (Engineering) முதலிய இலாகாகளில் கீழ் உத்தியோகஸ்தர்களைப் போலவே மேல் உத்தியோகஸ்தர்களில் பலர் லஞ்சம் வாங்குகிறார்கள். லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் வாங்குவோர் கொடுப்போர்களின் சீலத்தைப் பொறுத்திருக்கின்றதே யொழியச் சம்பளத்தைப் பொறுத்திருக்க வில்லை.

பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரத்திற்குத் தகுந்த சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதில் சிறிதளவு உண்மை யிருக்கிறது. சம்பளத்தால் மதிப்பும் கௌரவமும் உயருகின்றன. ஆனால் அதிகாரத்திற்கும், சம்பளத்திற்கும் எவ்வித நேர் சம்பந்தமுமில்லை. ஜப்பானில் பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு சாதாரண சம்பளங்களே கொடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் வேலைத்திறமையில் எந் நாட்டிற்கும் கீழ்பட்டிருக்கவில்லை.

மற்றவர்களை விட சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பல சௌகரியங்கள் இருக்கின்றன. சாதாரணமாக, வேலை

போய்விடுமே என்று கவலையில்லை. சில காலம் வேலை பார்த்த பிறகு நிச்சயமாகப் பென்ஷனோ, பிராவிடண்ட் பண்டோ (Provident Fund) கிடைக்கிறது. ஆதலால், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மிதமான சம்பளங்களைக் கொண்டு இனிது வாழ முடியும்.

மேற் கூறியதிலிருந்து எவ்வித நிச்சயமான நியமமும் சாத்தியமில்லை என்று ஏற்படுகிறது. ஆதலால் ஒரு குறைந்த சம்பளத்தையும், ஒரு உயர்ந்த சம்பளத்தையும் தேசத்தின் மொத்தச் செல்வத்தை அனுசரித்து நிர்ணயித்து அதற்கேற்றவாறு எல்லா சம்பளங்களையும் வகுப்பதே சரியான முறையென்று தோன்றுகிறது. இந் நாட்டில் மாதம் முப்பது ரூபாய்க்குக் குறைந்து எக் குடும்பமும் மானமாக ஜீவனம் செய்ய முடியாது. மாதம் ஐந்நூறு ரூபாயில் மிகவும் சௌகரியமாக வாழலாம். இந்த இரண்டு வரம்புகளையும் ஏற்படுத்தி எல்லாச் சம்பளங்களையும் இவற்றிற்குள் வேலைக்கும், அதிகாரத்திற்கும், பொறுப்புக்கும் தக்கவாறு திருத்தியமைத்தால் இதர வழிகளில் செல்வப் பிரிவினையைச் சீர்ப்படுத்துவதற்கு நல்ல அஸ்திவாரமாகும்.

சர்க்கார் உத்தியோகத்தில் இதர தொழில்களைக் காட்டிலும் அதிக சம்பளங்கள் கிடைப்பதால் மற்றத் துறைகளில் உயர்ந்த சேவை செய்யக்கூடியவர்கள்கூடச் சர்க்கார் உத்தியோகத்தை விரும்புகின்றனர். ராஜ்யம் நடப்பது அவசியமாயிருப்பினும், சர்க்கார் வேலையைக் காட்டிலும் உயர்ந்த சமூக சேவைகள் இருக்கின்றன. சர்க்கார் வேலைக்குப் பெரிய சம்பளங்கள் கொடுப்பதால் பொதுச் செலவு அதிகமாவதுடன், விஞ்ஞான ஆராய்ச்சியிலும், கவிதையிலும், கலைகளிலும் பெரிய சேவை செய்யக் கூடியவர்களை அந்த வேலைகளில் ஈடுபடாமல் பணத்தாசை காட்டிக் கீழ்த்தர வேலைகளுக்குத் திருப்புவதாகும்.

## சமூகத்தின் அதிர்ஷ்டசாலிகள்

பெரிய வருமானங்களுக் குள்ள காரணங்களில் அதிர்ஷ்டமே முக்கியமென்று மேலே குறிப்பிடப்பட்டது. இந்த

அதிர்ஷ்டம் இருவகைப்பட்டது. தான் ஒரு உழைப்பும் சேவையும் செய்யாமலேயே சொத்திலிருந்து பெறும் வருமானம் ஒன்று. இவ்வாறு சொத்திலிருந்து வருமானம் பெறுகிறவர்களிடமிருந்து சாமர்த்தியமாகச் சம்பாதிப்பது இரண்டாவது.

சொத்திலிருந்து வருமானம் பெறுவதை ஆதரித்துப் பல நியாயங்கள் கூறப்படுகின்றன. "எல்லோரும் தமக்குக் கிடைக்கும் வருமானங்களை யெல்லாம் அவ்வப்போது செலவு செய்துவிட்டால் சமூகத்தில் முதல் பெருகாது. முதல் இல்லாவிட்டால் விவசாயமும் மற்றத் தொழில்களும் வளரமாட்டா. ஆதலால் தங்களுடைய சௌகரியங்களைப் பார்க்காமல் முதல் சேர்த்துக் கொடுப்பவர்கள் பெரிய சேவை செய்கிறார்கள். அதற்காக அவர்களுக்குக் கூலி கொடுப்பது நியாயமும் அவசியமுமானது" என்கிறார்கள். ஆனால் ஏதோ ஒரு சமயம் மிச்சம் செய்து வைத்துவிட்டால் மிச்சம் செய்த பணத்தைப் பிறகு செலவழிக்கும் உரிமைதான் நியாயமானது. அது போக நிரந்தரமாக வேறு சேவை யில்லாமலே அதற்குக் கப்பம் கட்டவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள முடியாது. நல்ல பாங்கிகள் இல்லாத பண்டைக் காலங்களில் பணத்தைப் பாதுகாத்துக் கொடுப்பதற்காகக் கட்டணம் செலுத்துவது கூட வழக்கத்தி லிருந்தது. அதிக வட்டியோ, லாபமோ இல்லாவிட்டால் ஒருவரும் மிச்சம் பிடிக்க மாட்டார்கள் என்பதும் சரியான வாதமில்லை. வட்டியும் லாபமும் அதிகமாகக் கிடைப்பதால் வீண் செலவுகளும் ஆடம்பர வாழ்க்கையும் பெருகுவதைக் கண்டிருக்கிறோம்.

மற்றோர் வாதமும் கூறப்படுகிறது. முதலுக்குக் கிராக்கி யில்லாவிட்டால் கடன் வாங்குகிறவர்களுக்குப் பொறுப்பு இராது; கொடுப்பவர்களுக்கும் மனம் வராது. ஒவ்வொருவரும் மிச்சப் பணத்தை நகைகளாகவோ இதர வழிகளிலோ புதைத்து வைப்பார்கள். இவ்வாறுதான் இந்தியாவிலும், மற்ற தேசங்களிலும் நடந்து வந்திருக்கிறது.

யாங்கிகளும், கம்பெனிகளும் ஏற்பட்டு வட்டியும் லாபமும் கிடைத்த பிறகே மிச்சப் பணங்களையெல்லாம் முதலாகக் கொடுக்கும் வழக்கம் பெருகி வருகிறது. சோவியத் ருஷியாவில்கூட மிச்சம் பிடித்து சர்க்காருக்குக் கடன் கொடுக்கும் வழக்கம் விருத்தி செய்யப்படுகிறது. இந்த நிலைமையில் கட்டாயமாக வட்டிகளை மிகவும் குறைத்துவிட்டால் வீணுகக் கடன் வாங்கி விரயம் செய்வோர்களுக்குச் சாதகம் செய்வதாகும். ஆதலால் மற்றப் பொருள்களைப் போலவே பணத்தையும் கிராக்கிப்படி வாடகைக்கு விடப் பூரண உரிமை இருக்கவேண்டும் என்று வாதிக்கிறார்கள். ஆனல் ஒரு தேசத்தில் சொத்து வருமானம் அதிகமாயின் சமூக வாழ்வே தாறுமாறுகப் போய்விடுகின்றது. லக்ஷக் கணக்கான குடும்பங்கள் பணக்கார வகுப்பார்களுக்கு அனுவசியமான பொருள்களைத் தயார் செய்வதிலும், பலவிதத் தொண்டுகள் செய்வதிலும் ஈடுபடுகின்றன. வேலை செய்யாமல் உல்லாசமாக இருப்பதே வாழ்க்கையின் லக்ஷியமென்ற எண்ணம் பரவுகின்றது. எல்லா வேலையிலும் அருவருப்புத் தோன்றுகிறது. ஆதலால் மிச்சம் பிடிக்கிறவர்களுக்கு உற்சாகம் கொடுத்தும், வேலையில்லாத வருமானத்தைக் குறைத்தும் சமூகத்தின் நிலைமையை ரக்ஷிப்பதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடவேண்டும். இதற்கு மூன்று முறைகள் பல நாடுகளில் கையாளப்படுகின்றன. சொத்து வருமானத்திற்கு இதர வருமானங்களைக் காட்டிலும் அதிக வரி விதிக்கப்படுகிறது. ஒருவரிடமிருந்து பிதுரார்ஜிதமாகவோ உயில் மூலமாகவோ மற்றொருவருக்குச் சொத்துக் கிடைக்கும்பொழுது அதற்குக் கடுமையான வரி விதிக்கப் படுகின்றது. இங்கிலாந்தில் பெரிய சொத்துக்காரர்கள் இறக்கும் சமயத்தில் பெரிய பாகம் அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வார்சுகளுக்குச் சிறிய பாகமே கிடைக்கிறது. மூன்றாவதாக சில வருடங்களுக்கு ஒரு தரம் முதலுக்கு வரி போட்டு எடுத்துக் கொள்கிறார்கள். இம்முறைகளைத் தாராளமாக உபயோகித்தால் பெரிய சொத்துக்கள் சோம்பேறிகளுக்குத் தலைமுறை தலைமுறையாகச் சேராமல் தடுக்கப்படும்.

ஏழைகளுக்குச் சேவை செய்து சம்பாதிப்பதை விடப் பணக்காரர்களுக்குப் பணிவிடை செய்வது லாபகரமானது. ஆதலால் சொத்துரிமைகளுள்ள சமுதாயத்தில் வக்கீல்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் எல்லோரும் பணக்காரர்களுக்குத் தொண்டு செய்வதும், அவர்களை ஆதரிப்பதும் முக்கிய கடமையாகக் கொள்கிறார்கள். ஒரு பெரிய வக்கீல் என்றால் சட்டத்தில் கெட்டிக்காரர் என்று அர்த்தமில்லை. பணக்காரக் கக்ஷிக்காரர்கள் அவரிடம் வருகிறார்கள் என்பதுதான் நிச்சயம். சம்பாத்தியத்திலிருந்து ஒருவனுடைய சாமர்த்தியத்தை நிர்ணயிப்பது சகஜமாயினும் அது சரியாகாது. சில வேளை சாமர்த்தியமும், சம்பாத்தியமும் சேர்ந்திருக்கலாம். அப்படி யின்றி சம்பாத்திய மிருந்து கூரிய புத்தி யில்லாமலும் புத்தி யிருந்து சம்பாத்திய மில்லாமலும் இருப்பது சர்வ சாதாரணம். எல்லோரும் பணத்தையே நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது, வடமொழிக் கவி பர்த்ரு ஹரி கூறியதுபோல், தனவந்தனே ஞானியாகவும், கெட்டிக்காரனாகவும், நற்குணமுள்ளவனாகவும் பாவிக்கப் படுகிறான்.

பொருளாதார விஷயங்களில் மனித அறிவு வளர வளர, செல்வத்திற்கும் அதிர்ஷ்டத்திற்குமுள்ள சம்பந்தம் க்ஷீணிக்கும். உபயோகமுள்ள வேலை செய்யாமல் மற்றவர்கள் உழைப்பால் உண்டாகும் பொருள்களையும் சேவையையும் பெற எவருக்கும் உரிமையில்லை என்ற கொள்கை நிச்சயம் பரவும். காந்தியடிகள் கூறுவது போல், தனவந்தர்கள் தன் செல்வத்தை ஒரு பொது தர்மமாகப் பாவித்து, மற்றவர்களைப் போல் எளிய வாழ்வில் திருப்தி கொண்டு, மீதி வருமானத்தைக் கலைகளும் தர்மமும் வளர்வதற்கு உபயோகப் படுத்துவதானால் பெரிய பணக்காரர்கள் இருப்பதால் நஷ்டமில்லை. எல்லா நாடுகளிலும் இவ்வாறு சிலர் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் இந் நாட்களில் ஒரு மனிதன் தனக்காகச் செலவழித்துக் கொள்ளும் வழிகள் ஏராளமாகப் பெருகிவிட்டன. ஆதலால் தனி மனிதர்களிடம் செல்வத்

தைக் குவிய விட்டு விட்டு அதை அவர்கள் தர்மமாக விநி யோகிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதில் பிரயோஜன மில்லை. கூடியவரையில் தனி மனிதர்களின் இஷ்டத்தை எதிர் பாரா மல் நேரடியில் பொது நன்மைகளைப் பராமரிப்பதே நியாய மான முறையாகும். ஏழைகள் இருக்கும்பொழுது தான் தர்மங்கள் விரும்பத் தக்கதே. ஆனால் ஏழைகளே இல்லா மல் செய்வதே நமது மேன்மையான லக்ஷியமாகும். இந்த லக்ஷியம் பூரணமாக நிறைவேறும் வரையில் பொது ஸ்தாப னங்கள் மூலம் ஏழைகளுக்கு உதவி செய்யப்பட வேண்டும்.

## பிறப்பும் செல்வாக்கும்

பண்டை நாகரிகங்களில் ஒருவருடைய தொழில் அவன் பிறப்பையும் அவன் குடும்ப சாதிகளின் செல்வாக்கையும் பொறுத்திருந்தது. அநேகமாக ஒவ்வொருவரும் தம் முன் னோர்களின் தொழில்களைச் செய்து வந்தனர். இதனால் சமூ கத்தில் அதிக போட்டியும் பொறாமையும் இல்லாமலிருந்தது. ஆனால் ஒவ்வொருவனும் தன் சாமர்த்தியத்திற்கு ஏற்ற தொழிலை எடுத்துக்கொள்ள முடியாமலிருந்தது. கீழோர் கீழோராகவும் மேலோர் மேலோராகவும் இருந்து வந்தனர்.

இந் நிலைமை இப்பொழுது முற்றிலும் மாறிவிட்டது. முக்கியமான தொழில்கள் சட்ட பூர்வமாக எல்லோருக்கும் திறந்து விடப்பட்டிருக்கின்றன. ஆயினும் பிறப்பும், செல் வாக்கும் பெரிய சக்திகளாகவே இருந்து வருகின்றன.

இது வியாபாரத்தில் நன்கு விளங்குகின்றது. ஒரு பைசா இல்லாமல் ஒரு மார்வாடி வைர வியாபாரம் ஆரம் பித்து விடுவான். அவனுக்கு மற்ற மார்வாடிகள் லக்ஷம் பெறுமானமுள்ள வைரங்களைக் கடனுக்குக் கொடுப்பார்கள். மற்ற சாதியார்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களாக விருந்தா லும் அவர்களை குமாஸ்தாக்களாகவும், காரியஸ்தர்களாகவும் தான் சேர்த்துக் கொள்வார்கள்; பங்காளிகளாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

பெரிய கம்பெனிகளில் கூட டைரக்டர்களைச் சேர்ந்தவர் களுக்குத்தான் முக்கிய ஸ்தானங்கள் கிடைக்கின்றன.

ஆனால் இந்த ஸ்தானங்களுக்கு அவர்கள் தயார் செய்யப் படுகின்றனர்.

வக்கீல், டாக்டர் முதலிய தொழில்களிலும் பந்துக்களின் ஆதரவிருப்பவர்களே எளிதில் நல்ல சம்பாத்தியம் செய்கிறார்கள்.

ஒரு உத்தியோகமோ தொழிலோ அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாயினும் அதற்குத் தகுந்த படிப்புக்கும் மற்றச் செலவுகளுக்கும் ஏராளமான பணம் வேண்டி யிருக்கிறது. சைனியத்தில் உத்தியோகஸ்தர்கள் தயார் செய்ய இந்திய சர்க்கார் ஒரு சைனியப் பயிற்சி சாலை டேராடூனில் வைத்திருக்கிறார்கள். திடகாத்திரமும் மனோ தைரியமுமுள்ள எவனும் இந்த வேலைக்குத் தகுந்தவனாகக் கூடும். ஆனால் ஒரு பையனுக்குப் பதினாயிரம் ரூபாய்கள் செலவழித்தாலொழிய அந்தக் கலாசாலையில் படிக்க முடியாது. இவ்வாறே பல பெரிய உத்யோகங்கள் மறைமுகமாகப் பணக்காரர்களுக்கே ஒதுக்கி வைக்கப்படுகின்றன.

சில வருஷங்களுக்கு முன் சர்க்கார் உத்யோகங்கள் எல்லாம் குடும்ப, சமூக செல்வாக்கைக்கொண்டே அளிக்கப்பட்டன. ஆனால் இந் நிலைமை மாறிவிட்டது. தனிக் கமிஷன்கள் (Commissions) நியமித்து அதன் மூலம் பரீக்ஷைகள் நடத்தி சர்க்கார் சேவகத்திற்கு ஆள் சேர்க்கிறார்கள். சர்க்கார் உத்யோகங்கள் சாதி வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டாலும், ஒவ்வொரு சாதியிலும் உள்ள பணக்காரர்கள் செல்வாக்குள்ளவர்கள் இவர்களின் பிள்ளைகளுக்கே பெரும்பாலும் உத்யோகங்கள் கிடைக்கின்றன.

பிறப்பினாலும், செல்வாக்காலும் உண்டாகும் சௌகரியங்களை முற்றிலும் ஒழித்துவிட முடியாது. பொதுவுடைமைச் சமுதாயத்திலும் பெரிய அதிகாரிகளின் பந்துக்களுக்கு மறைமுகமான சலுகைகள் கிடைத்தே தீரும். இந்த சலுகைகளைக் கூடிய வரையில் குறைத்து எல்லோருக்கும் ஓரளவு சம சந்தர்ப்பம் கொடுக்க முயலுவதே சாத்யமானது.

கல்வியை முழுவதும் இலவசமாகச் செய்வது இதற்கு நல்ல சாதனமாகும். இதனால் அதிக செலவாகும் என்று நினைக்கலாம். ஆனால் சமூகச் செலவில் கல்வி யளிக்கப்பட்டால் அதிக சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை. இப்பொழுது பல வேலைகளுக்கு ஆயிரக் கணக்கில் செலவு செய்து படித்துத் தயாராக வேண்டி யிருப்பதால் உயர்ந்த சம்பளங்கள் அவசியமாயிருக்கின்றன.

நாட்டில் பொதுவாக வறுமை நீங்கி எல்லோரும் கௌரவமாக வாழ வசதிகள் ஏற்பட்டால், பிறப்பினாலும் சூதியாலும் கிடைக்கும் செல்வாக்கு அதிகமாகச் செல்லாது. இத்துடன் ஜன நாயகமும் ஸ்திரமாக ஏற்பட்டு விட்டால் அனைவரும் தம் சாமர்த்தியத்திற்கேற்ற தொழிலில் அமர்ந்து சேவை செய்வது சுலபமாகும்.

## எது நல்ல முறை?

பொருளாதாரத்தைப் புத்தி பூர்வமாகத் திருத்தியமைக்க வேண்டுமானால், செல்வப் பிரிவினைக்குச் சிறந்த முறை யாது? இதைப்பற்றிப் பற்பல யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் முடிவான தத்துவங்கள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

அனுஷ்டானத்தில் சாத்தியப் படுமானால் பொது உடைமை வாதத்தின் லக்ஷ்யமே சிறந்த தென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். சமூகத்தில் ஒவ்வொருவரும் தனக்கு வேண்டிய பொருளை இஷ்டப்படி எடுத்துக் கொள்ள வேண்டும்; தன்னாலான வேலையைச் செய்ய வேண்டும் என்பதே அது. “தற்கால இயந்திர சக்தியால் எல்லாப் பொருள்களையும் வேண்டிய அளவு எளிதில் உற்பத்தி செய்துவிடக்கூடும். இப்பொழுது சாமான்கள் கிடைப்பது கஷ்டமாயிருப்பதால் அனாவசியமான சொத்துக்களைச் சேர்த்துக் காப்பாற்றிப் பலர் கஷ்டப்படுகிறார்கள். எல்லாச் சாமான்களும் காற்றைப் போலவும், ஜலத்தைப் போலவும் அபரிமிதமாகக் கிடைக்குமாயின், அவரவர் தமக்கு அவசியமான அளவே எடுத்துக் கொள்வார்கள். இப்பொழுது

கிரிக்கெட் முதலிய விளையாட்டுகளுக்குப் போட்டிபோட்டு வருவதுபோலவே இயந்திரங்களை ஓட்டுவதும் ஒரு பெரிய விளையாட்டாகிவிடும்'' என்று வர்ணித்திருக்கிறார்கள்.

இது என்றைக்கும் மனக்கோட்டை யாகத்தான் இருக்கும் என்பது பொதுவுடைமை வாதத்தை ஒப்புக்கொள்ளாதவர்களின் முடிவு. பொதுவுடைமைக்காரர்களும் இதைத் தமது லக்ஷியமாகக் கூறுகின்றார்களே யொழிய உடனே சாத்திய மென்று சொல்லவில்லை. இந்த லக்ஷியத்தை உடனே அமுலுக்குக் கொண்டுவர வேண்டு மென்பவர்களை ருஷிய சர்க்கார் கண்டித்தே வருகின்றனர். கல்வியும் வேலைத்திறமும் பொது நல வளர்ச்சியும் பன் மடங்கு வளர்ந்த பிறகே அதைப்பற்றி யோசிக்கக் காலம் வருமென்று அவர்கள் பிரசாரம் செய்கிறார்கள். ஒவ்வொரு தொழிலிலும் திறமையும் சுறுசுறுப்பும் வளர்வதற்கு உதவியாக ஊதியங்களைப் பல தரங்களாக வகுத்திருக்கின்றனர்.

"நமது ஆசைகளுக்கு அளவில்லை. ஆதலால் ஒவ்வொருவருக்கும் இஷ்டப்படி பொருள்களை அளிப்பது சாத்தியமில்லை'' என்பதை ஒப்புக்கொண்டு பர்னார்ட் ஷா சமூகத்தின் வருஷ வருமானத்தை எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிட வேண்டுமென்று கூறுகிறார்.

ஸ்ரீ பர்னார்ட் ஷா தம் வாதத்திற்குக் காரணங்களைப் பின்வருமாறு சொல்லுகிறார்: சேவைக்கும், கூலிக்கும் எவ்வித சம்பந்தத்தையும் நிர்ணயிக்க முடியாது. ஒருவன் கெட்டிக்காரனாயிருந்தால் அதனால் அவனுக்கு அதிக வருமானம் கொடுக்கவேண்டு மென்பது எவ்வித நியாயத்திற்கும் ஒவ்வாது. புத்தியிலோ, அழகிலோ மற்ற விதங்களிலோ குறைந்திருப்பவர்களுக்கே அதிக வருமானம் கொடுத்து இயற்கையின் பட்சபாதத்தைப் பரிகாரம் செய்வதே தர்மமாகும் என்று வாதிக்கலாம். எல்லோருக்கும் இவ்வுலகத்தில் சுகம் வேண்டும் என்ற ஆசை உண்டு. இதை ஒருவரும் அளக்க முடியாது. ஆதலால் தேசத்தின் வருமானத்தைச்-

சரியாகப் பங்கு போட்டுக் கொடுத்துவிட்டு அதை வைத்துக் கொண்டு தம்மாலான சுகத்தைப் பெறுமாறு விட்டுவிட வேண்டியதுதான் நியாயம்.

இது மிகவும் ருசிகரமான வாதம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அனுஷ்டானத்தில் கொண்டு வர முடியுமா என்று ஆராயும் பொழுது பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

முதன் முதலில் எல்லாவித செல்வமும், செல்வப் பிரிவினை முறைகளும் அரசாங்க நிர்வாகத்திலிருக்க வேண்டும். எல்லோருக்கும் ஒரே அளவு வருமானம் கொடுத்துவிட்ட போதிலும் ஒருவர் மற்றொருவரிடமிருந்து எடுத்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வருமானத்தை அவ்வப்போது செலவழித்து விடும்படி கட்டாயப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் சிலர் மிச்சம் பிடித்து மற்றவர்களைவிடப் பணக்காரர்களாவார்கள். அவர்களுடைய சந்ததியாருக்கும், பந்துக்களுக்கும் கொடுத்து விடுவார்கள்.

தனி ஆசாமிக்குச் சமவருமானம் கொடுக்க வேண்டுமா அல்லது குடும்பவாரி பிரித்துக் கொடுக்க வேண்டுமா என்பதும் சிக்கலான பிரச்னையாகும். பெரிய குடும்பங்களுக்கு விசேஷ சலுகை காட்டுவதால் ஜனத்தொகை கணக்கின்றிப் பெருகிச் சராசரி வருமானம் மிகவும் குறைந்துபோகும்.

எல்லோரும் சுலபமாகவும் சௌகரியமாகவும் இருக்கும் வேலையையே விரும்புவார்கள். அதிலும் சோம்பேறித்தனம் செய்ய ஆரம்பிப்பார்கள்.

நமது சிறைச்சாலைகளில் இந்த நியமம் ஓரளவு இருந்து வருகிறது. எல்லாக் கைதிகளுக்கும் ஒரே உணவும், உடையும் கொடுக்கப்படுகின்றன. வேறு சம்பளம் கிடையாது. வெவ்வேறு தொழில்களில் வேலை செய்கிறார்கள். கூலி தாரதம்மியம் சிறிது மில்லாம லிருப்பதால் ஒருவர் செய்யும் வேலையைப் பத்துப் பேர்கள் செய்கிறார்கள். எப்பொழுதும் வார்டர்கள் பயமுறுத்திக் கொண்டிருந்தாலொழிய வேலை

செய்வதில்லை. எல்லோருக்கும் கிரமமான கூலி கொடுத்துக் கணக்கு வைக்கப்பட்டால் சிறைச்சாலைகளை நல்ல லாபகாமான தொழிற்சாலைகள் ஆக்கக்கூடும். எந்த சமுதாயத்திலும் எல்லா சேவையையும் சர்க்கார் பார்வையில் விட்டுவிட முடியாது. முக்கியமாகக் கலைகள் பொது ஜனங்களின் நேரான ஆதரவில் இருக்கவேண்டும். சோவியத் ருஷியாவில்கூட சங்கீத வித்வான்களும், நடிகர்களும், மற்றக் கலைஞர்களும் தங்கள் திறமையைக்கொண்டு ஏராளமாகச் சம்பாதிக்க அனுமதி கொடுக்கப்பட் டிருக்கிறார்கள்.

எவ்வாறு பூமியை முற்றிலும் சமதரையாக்கி விட்டால் வடிகால் இல்லாமல் போய்விடுமோ, அப்படியே எல்லோருக்கும் ஒரே வருமானம் கொடுத்துவிட்டால் சமூகத்தின் நிலை தண்ணீர் தேங்கி நிற்கும் குளத்தைப் போல் சீர் கெட்டுப்போகும். ஓரளவு வித்தியாசங்கள் இருப்பதால் வாழ்க்கையின் விசித்திரமும், ருசியும் அதிகரிக்கும்.

## சேவைக்குத் தகுந்த ஊதியம்

எல்லோருக்கும் ஒரே வருமானம் கொடுக்க முடியாது. சொத்தையோ, பிறப்பையோ, செல்வாக்கையோ அனுசரித்துச் செல்வப் பிரிவினை செய்வதும் நியாயமாகாது. இரண்டிற்கும் நடுவில் சேவைக்குத் தகுந்த ஊதியம் கொடுக்க வேண்டுமென்று பல அறிஞர்கள் கூறுகின்றனர். மற்ற நியமங்களைக் காட்டிலும் இதுவே மிகவும் நியாயமாகக் காணப்படுகிறது.

ஆனால் அனுஷ்டானத்தில் இது சுலபமல்ல. ஒரே தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் திறமைகளையும், ஒரே கால அளவில் செய்யப்பட்ட வேலையையும் சுமாராகக் கணக்கிடலாம். ரோட்டுக்கு மண் வெட்டினால் ஒவ்வொருவரும் வெட்டிய மண்ணை அளந்துவிடலாம். ஒரேவிதத் துணி நெய்தால் கெஜத்திற்குத் தகுந்தாற்போல் கூலி கொடுக்கலாம்.

ஆனால் இரண்டு தச்சர்கள் ஒரே அளவான ஒரே மாதிரி மேஜைகள் செய்தபோதிலும் ஒன்று அழகாகவும் சுத்தமாக

வும் மற்றொன்று வேலைப்பாடு குறைவாகவும் இருக்கும். பேட்டு வேலை செய்யும் நெசவுக்காரர்களுக்கும் சாதாரண துணி நெய்யும் தறிகாரர்களுக்கும் எவ்வாறு தாரதரம் தீர்மானிப்பது ?

இந்தச் சங்கடத்தைப் பார்த்து சிலர், ஒரு வேலைக்குச் செலவழிக்கப்படும் கால அளவைக் கொண்டே கூலியை நிர்ணயிக்க வேண்டும் என்கிறார்கள். இதுவும் சாத்திய மில்லை. ஒருவன் ஒரு மணி நேரம் செய்யும் வேலையை மற்றொருவன் இரண்டு மணி நேரத்தில் செய்வான். ஒரு வனே ஓரிடத்தில் எட்டு மணி நேரம் வேலை செய்யும் பொழுது முதல் மணியில் அதிகமாகவும் படிப்படியாகக் குறைந்து எட்டாவது மணியில் மிகக் குறைவாகவும் செய்கிறான். சில வேலைகளுக்குப் பல வருடங்கள் படித் தும் பழகியும் தயாராகவேண்டி யிருக்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சியில் பல வருடங்கள் பலனில்லாமல் கடைசியில் ஒரு தினத்தில் மிகவும் உயர்ந்த தத்துவமோ, இயந்திரமோ கண்டு பிடிக்கப்படலாம். முன் செய்த பிரயத்தனங்களை யெல்லாம் வீண் என்று நினைத்தால் முன்னேற்றமே ஏற் படாது.

இந்தக் கஷ்டங்களை யெல்லாம் ஆலோசித்துப் பல தொழில்களில் ஒன்றிற்கொன்றின் தாரதம்மியத்தையோ, மேன்மை தாழ்மையையோ நிச்சயிப்பது சாத்தியமில்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டும். மூளைவேலை தேகப்பிர யாசையைவிட லாபகரமானது அல்லது உயர்ந்தது என்றும் எண்ணலாகாது. சாதாரண குமாஸ்தா முதலிய மூளைவேலை கள் விவசாயம், கைத்தொழில் முதலிய தேகப்பிரயாசையால் செய்யக்கூடிய தொழில்களைவிட உயர்ந்ததல்ல. முன்னாட் களில் பெரும்பாலோருக்குக் கல்வி இல்லாததால் எழுதப் படிக்கத் தெரிவதே ஒரு பெரிய காரியமாக இருந்தது. இப் பொழுது நாட்டில் உள்ள அனைவரும் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வதுமன்றிப் பதினைந்து பதினாறு வயது வரை யில் எல்லா சாஸ்திரங்களிலும் ஓரளவு போதிக்கப்பட

வேண்டுமென்று எண்ணப்பட்டு அவ்வாறே பல நாடுகளிலும் நடைபெற்று வருகிறது. இயந்திரத் தொழில்களில் மூளை யும், தேகமும் உழைக்கவேண்டி யிருக்கின்றது.

ஆதலால் சேவைக்குத் தகுந்த ஊதியம் என்ற நியமத்தை ஓரளவுதான் கையாள முடியும். ஒரு குடும்பத்திற்குக் குறைந்தது எவ்வளவு வேண்டும் என்பதுவது, மிகவும் சாமர்த்தியசாலிகளுக்கு எவ்வளவு ஊதியம் கொடுக்கவேண்டுமென்பதுவது அதைக்கொண்டு நிர்ணயிக்க முடியாது. சமூகத்தின் மொத்த செல்வத்தையும் பொதுஜன மனப்பான்மையையும் கொண்டே இவ்வரம்புகள் தீர்மானிக்கப்படவேண்டும். சர்க்கார் அதிகாரத்தைப்பற்றிஎழுதும் பொழுது சம்பளங்கள் மாதம் முப்பது ரூபாயிலிருந்து ஐந்நூறு ரூபாய்வரையில் உயரலாம் என்று யோசனை கூறப்பட்டது. இந்த வரம்புகளே மற்றத் தொழில்களிலிருப்போர்களுக்கும் உசிதமாகும்.

விவசாயத்தில் இவ்வித வரம்புகளை எவ்வாறு ஸ்தாபிப்பது என்பது மிகவும் கஷ்டமான கேள்வி. ஆனால் தீர்க்காலோசனையுடன் சமூகத்தைச் சீர்திருத்தி யமைத்தால் இதுவும் சாத்தியமாகும். முதன் முதலில் விவசாயப் பொருள்களின் விலைகள் மாறுவதற்கு வரம்புகள் செய்து அவைகளைத் தாண்டிச் செல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பிறகு ஒவ்வொரு விவசாய குடும்பமும் குறைந்தது மாதம் முப்பது ரூபாய் பெறுவதற்குப் போதிய நிலத்தை ஒரு பண்ணையாகச் செய்து அது பிரிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கடைசியாக, வெள்ளத்தினால் சேதமாகும் பொழுதும் கால் நடைகள் அகால மரண மடையும் பொழுதும் நஷ்ட ஈடு செய்வதற்கு இன்ஷ்யூரன்ஸ் (Insurance) முறையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். பெரிய சர்க்கார் பண்ணைகள் வைத்து நடத்தும்பொழுது அதில் வேலை செய்வோர்களுக்கு மேற்கூறிய வரம்புகளுக்குள் கூலி கொடுக்கப்பட வேண்டும்.

இவ் வரம்புகளுக்குள் ஒரே தொழிலில் வேலை செய்வோரின் திறமைக்கும் சுறுசுறுப்பிற்கும் தக்கவாறு கூலிகளையும், சம்பளங்களையும் வகுத்துக் கொள்ளலாம்.

இந்த நிலைமையை இருவிதத்தில் அடைய முயற்சி செய்யலாம். எல்லா நிலங்களையும் இயந்திர சாலைகளையும் பொதுவுடைமைகளாக்கி எல்லோரையும் பொது ஊழியர்களாகச் செய்துவிடலாம். அல்லது தற்போதைய சமுதாயத்தை வைத்துக்கொண்டு, குறைந்த கூலிகளைச் சட்ட மூலம் உயர்த்தியும், உயர்ந்த வருமானங்களை வரி மூலம் குறைத்தும் இந்த வரம்புகளைக் கூடியவரையில் நிலை நிறுத்தலாம். ஒழுங்காகவும் நிச்சயமாகவும் செய்ய வேண்டுமாயின் முதல் கூறிய வழியே சரியானதாகும். ஆனால் அதன் பொருட்டுப் பெரிய புரட்சி செய்து தற்போதைய சமூக அமைப்பை அடியோடு அழித்துப் புதிய சமுதாயம் ஏற்படுத்தவேண்டும். இதனால் உண்டாகும் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் விரும்பாதவர்கள் இரண்டாவது முறையைக் கைக்கொண்டோ, அல்லது சில தொழில்களைப் பொதுச் சொத்தாக்கியும் மற்றவைகளைத் தனிச்சொத்தாக இருக்கும்படி விட்டும் ஒரு மத்தியஸ்த வழியைக் கடைப்பிடித்தோ, செல்வப் பிரிவினையைக் கிரமமாக அமைக்கவேண்டும்.

# 6. செல்வமும் சமூக லட்சியங்களும்

## செல்வமும், அரசாங்கமும்

செல்வத்திற்கும் அரசாங்கத்திற்கும் நெருங்கிய சம்பந்த முண்டென்று ஆங்காங்கு காட்டப்பட்டது. பொது வுடைமை சமுதாயத்தில் செல்வ உற்பத்தி, வளர்ச்சி, பிரிவினை எல்லாம் சர்க்கார் மூலமாக நடந்து அவைகளே முக்கிய ராஜீய இலாகாக்களாகின்றன. உலகெங்கும் பொதுவுடைமை பரவிவிட்டால் சைன்யங்களும் போலீஸ் இலாகாக்களும் அவசியமில்லாமல் போய்விடுமென்றும், பலாத்காரம் வேரோடு ஒழிந்து பூர்ண சுதந்திரத்தின் ஒளி தோன்று மென்றும், மார்க்ஸ், லெனின் முதலியோர் கூறி யிருக்கின்ற னர். இது பல நூற்றாண்டுகளுக்குப் பின் சம்பவிக்கக் கூடிய கற்பனை யாதலின் இதைப்பற்றி இங்கே கவனிக்க வேண்டியதில்லை. இப்பொழுது ஜனநாயக அமெரிக்காவுக்கும் சாம்ராஜ்ய பிரிட்டனுக்கும், நாஜி ஜெர்மனிக்கும், போல்ஸ் விக் ருஷியாவிற்கும் பொதுவாக என்ன இருக்கிறதென்றால், மகத்தான ஆயுத பலம் ஒன்றே யாகும். காரணங்கள் பலவா றிருப்பினும் முடிவு ஒன்றுதான். இந்தப் பெரிய சைன்யங் களையும், அவற்றிற்கு வேண்டிய தளவாடங்களையும் தயார் செய்ய ஏராளமான வரி வேண்டியதைத் தவிர அவைகளுக்கு

உதவும் இயந்திர சாலைகளையும் சர்க்கார் மேற்பார்வையில் வைத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

யுத்த தளவாடங்களைத் தவிர, தனி ஆசாமிகளுக்கு லாபம் கொடுக்காமலும் சமூக வாழ்வுக்கு அவசியமாக வும் இருக்கும் தொழில்களை எல்லா அரசாங்கங்களும் செய்யவேண்டி யிருக்கிறது. நகரங்களுக்குக் குடி தண்ணீர், சாக்கடை வசதிகள், ரஸ்தாக்கள், விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைகள் முதலியவைகளைத் தனி ஆசாமிகள் ஒருநாளும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

முதலாளி சமுதாயங்களில் சர்க்கார் தொழில்களில் தலையிடக் கூடாதென்று முதலாளிகள் கேட்பது வழக்கம். ஆனால் தங்கள் லாபத்தில் தலையிடுவதைத்தான் ஆட்சேபிக் கிறார்கள். லாபம் கிடைக்காத சமயங்களில் பொது நிதியி லிருந்து உதவிப் பணங்களும் குறைந்த வட்டிகளும் கேட்கிறார்கள். வெளிநாட்டுச் சரக்குகளுக்கு உயர்ந்த சுங்கம் விதித்துப் பாதுகாக்க வேண்டுமென்று கூச்சல் போடு கிறார்கள். சரக்குகள் அதிகமாக உற்பத்தியானால் வெளி நாடுகளில் உத்தியோகஸ்தர்களை நியமித்து வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள்.

இயந்திரத்தால் நெசவுத் தொழில் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது இந்தியக் கைத்தறித் துணி களின் போட்டியைத் தடுக்க பிரிட்டிஷ் முதலாளிகள் பெரிய கிளர்ச்சி செய்து சுங்கம் விதிக்கச் செய்தார்கள். ஆலைகள் பெருகித் துணியின் விலை மலிந்தபொழுது இந்தியாவில் கைத்தறித் துணிகளோடு போட்டியிட ஆரம்பித்தார்கள். இந்திய சர்க்கார் சுங்கம் விதித்துக் கைத்தறிக்கு ஆதரவு அளிக்கக் கூடாதென்று வாதித்து அதையே சாதித்தனர். இந்திய முதலாளிகள் மில்களை இந் நாட்டில் ஸ்தாபித்த பொழுது அரசாங்க வருமானத்திற்காக பிரிட்டிஷ் துணிகள் மீது விதித்திருந்த சிறிய வரியை இந்திய மில் துணி மீதும் விதித்தார்கள். சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு ஜப்பானியத் துணி மலிவாகப் போட்டி போட ஆரம்பித்தது.

அப்பொழுது பிரிட்டிஷ் துணிகளுக்கும் மற்ற சாமான்களுக்கும் பாதுகாப்பு வேண்டுமென்று 'ஏகாதிபத்திய சலுகை' என்ற புதியதோர் தத்துவத்தைப் பிரசாரம் செய்து வெற்றி பெற்றனர். ஏகாதிபத்தியத்தைச் சேராத வெளி நாடுகளின் சாமான்களுக்கு அதிக வரி போடப்பட்டது.

இவ்வாறு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தார் சமயத்திற்கேற்றவாறு தங்கள் கொள்கையை மாற்றி யிருக்கிறார்கள். இதைப் பற்றி பெரிய கட்சி வாதங்கள் இங்கிலாந்தில் பல காலம் நிகழ்ந்தது. ஒரு சாரார் வியாபாரத்திலும் தொழிலிலும் சர்க்கார் தலையிடக் கூடாதென்றும், அப்பொழுது ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் தங்கள் சக்திக்கும் வசதிகளுக்கும் ஏற்பச் செல்வத்தை உற்பத்தி செய்து மலிவாக மற்றவர்களுக்குக் கொடுப்பார்கள் என்றும் கூறினார்கள். சர்க்கார் தலையிடுவதால் சாமான்களின் விலை கிராக்கி யாகும். ஏழைகள் கஷ்டப்படுவார்கள். தடை யில்லாமலிருந்தால் தேசங்களுக்குள் பரஸ்பர நேசம் பெருகும். சமாதானம் வளரும். எல்லோரும் சுகமாக இருப்பார்கள். இதற்குத் 'தடையில்லா வியாபாரம்' **(Laizzez Faire)** என்று கூறுவார்கள். 1850-லிருந்து 1914 வரையில் இந்தக் கொள்கையே இங்கிலாந்தில் ஓங்கி யிருந்தது. அக் காலத்தில் இயந்திரத் தொழிலில் இங்கிலாந்து மற்ற நாடுகளை விட ஓங்கி யிருந்தது. இதர தேசத்து முதலாளிகளை பிரிட்டிஷ் முதலாளிகள் எளிதில் போட்டி போட்டு முறியடித்து விட்டார்கள். இந்த நிலைமை சென்ற மகா யுத்தத்திற்குப் பின் மாறிவிட்டது. அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி இவற்றின் இயந்திரத் தொழில்கள் சரசமாகச் சாமான்களைச் செய்து பிரிட்டிஷ் மார்க்கெட்டுகளைப் பிடித்துக்கொள்ள ஆரம்பித்தன. ஆங்கில அரசாங்கத்தின் கொள்கைகளும் மாறிவிட்டன. தொழில் பாதுகாப்புக் கொள்கையை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர்.

பொருளாதார தத்துவங்கள்—ஆங்கில பொருளாதார சாஸ்திரிகள் வெகுகாலம் சாதித்து வந்தபடி—சாசுவதமல்ல,

காலதேச வர்த்தமானத்தைப் பொறுத்திருக்கும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். இக் காலத்தில் வெளி நாட்டுப் போட்டிகளுக்குப் பாதுகாப்பளிப்பதால் மட்டும் போதாதென்றும், உள்நாட்டு உற்பத்தியையும், வியாபாரத்தையும் சர்க்கார் மேற்பார்வை யிடவேண்டியது அவசியமென்றும் ஒப்புக்கொள்ளப் படுகிறது. இந்தக் கொள்கையை ஒப்புக் கொண்டு முதலாளி சமுதாயம் எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதைப் பற்றித்தான் இச்சமயம் தீவிர வாதம் நடந்து வருகிறது. இவ் வழி பொது உடைமைக்குக் கொண்டு போய் விடுமென்று பல அறிஞர் கூறுகின்றனர். சர்க்கார் மேற்பார்வையையும் வைத்துக்கொண்டு முதலாளி சமுதாயத்தைச் சரிவர நடத்தலாமென்று மற்றவர்கள் கூறுகின்றனர். 1930-32-ல் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் பலனுக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் இவ் வழியில் பல முறைகள் பரீட்சை செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளின் பலாபலன்களைச் சரிவர ஆராய்வதற்கு அவகாசம் கிடைக்கு முன் இம் மகாயுத்தம் வந்து எல்லா முக்கியத் தொழில்களையும் சர்க்காரே நடத்தும்படியான நெருக்கடியில் கொண்டுவந்து விட்டது. யுத்தம் முடிந்த பிறகு பழைய நிலைமைக்குப் போக முடியுமா வென்பது சந்தேகம். வருங் காலத்தில் இதர நாடுகளில் முழுப் பொதுவுடைமை சமுதாயம் ஏற்படாவிட்டாலும் செல்வ உற்பத்தி, விநியோகங்களில் அரசாங்கத்தார் பெரும் பொறுப்பு எடுத்துக்கொள்வது அவசியமாகும் என்று தோன்றுகிறது. இதன் பலனுக ஜனநாயகத்திற்குப் புதியதோர் பெருமை யுண்டாகும். அரசாங்க அதிகாரத்திலும், செல்வத்திலும் பொது ஜனங்களின் நன்மையையும், சமத்துவத்தையும் சாதிப்பதே ஜனநாயகம் என்ற உண்மை சாசுவதமாக ஸ்தாபிக்கப்படலாம்.

## செல்வமும் சுகமும்

செல்வத்தை சுகத்திற்கே தேடுகிறோம். சாதாரண செலவுகளுக்கு வேண்டிய செல்வ மில்லாதவர்களின் வாழ்க்கை நரகமாகின்றது. ஆனால் ஒருவனுக்குச் செல்வம்

வளர வளர சுகமும் வளரும் என்று எண்ணுவது தவறு. மிதமிஞ்சிய செல்வமும் சுகத்திற்குப் பகையாகும்.

வருங் காலத்தில் தானும் தன் குடும்பமும் கஷ்டப்பட வேண்டி வருமோ என்ற கவலே பணத்தாசைக்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. இத்தக் கவலேயை அடியோடு தீர்க்காத வரையில் சமூகத்தில் சுகம் பூர்ணமாக இராது. முதலாளி சமுதாயங்களில் வயோதிக காலத்திலும், சாகும் பொழுதும், இதர கஷ்டங்கள் வரும்பொழுதும் அவசியமான ஆதரவளிப்பதற்காக இன்ஷியூரன்ஸ் (Insurance) முறை ஏற்பட்டு வளர்ந்திருக்கிறது. இதில் சேருவோர் தங்கள் சம்பாத்தியத்தில் ஒரு அம்சம் வருடா வருடம் செலுத்து கிருர்கள். ஒரு குறிப்பிட்ட கால முடிவிலோ நடுவில் இறந்து விட்டாலோ ஒரு மொத்தத் தொகை கொடுக்கப்படுகிறது. உதாரணமாக வருஷம் ரூ. 50 வீதம் இருபது வருஷம் செலுத்த ஒப்புக்கொண்டு, ஒரு ஆயிரம் ரூபாய் பத்திரம் வாங்கிக் கொள்ளலாம். நடுவில் இறந்தால் குடும்பத்தாருக்கு உடனே ஆயிரம் ரூபாய் கொடுத்துவிடுகிருர்கள். இருபது வருஷமும் ஜீவித்திருந்தால் இன்ஷியூரன்ஸ் கம்பெனிக்கு வட்டி யெல்லாம் மீதமாகிறது. இவ்வாறு அதிர்ஷ்டமுள்ள வர்களிடமிருந்து மிச்சம் பிடித்து துரதிர்ஷ்டசாலிகளுக்கு உதவி யளிக்கப்படுகிறது. தீ விபத்துக்கும், மோட்டார் விபத்துக்கும் தனித் தனியாக இன்ஷியூரன்ஸ் முறைகள் அமுலில் இருந்து வருகின்றன.

பொதுவுடைமை சமுதாயத்தில் இந்த வேலே சர்க்கா ரால் நேர் முறையில் நடைபெறும். வருஷ வருமானத்தில் இதற்காக ஒரு பாகம் ஒதுக்கி வைக்கப்பட்டு எல்லோருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களேப் போலவே பென்ஷன்கள் கொடுத்துவிடலாம்.

எவ்விதத்திலாயினும் வறுமையின் பயத்தையும் கவலேயையும் போக்கினுல் சுகம் தானுகவே கிடைக்கும். வருங் காலத்தைப் பற்றிக் கவலே தீர்ந்தால் அதிக சம்பாத்தி யத்தைப் பெரிய விஷயமாகக் கருதமாட்டார்கள். தற்

போதைய செலவுகளுக்கு வேண்டியதைப் பெற்றுத் திருப்தி யடைவார்கள்.

## செல்வமும் நாகரிகமும்

நாகரிகத்திற்குச் செல்வம் அஸ்திவாரம். அது இல்லாமல் மேல் கட்டிடம் கட்ட முடியாது. ஆனால் வீடு கட்ட விரும்பியவன் அஸ்திவாரத்தை மட்டும் போட்டுவிட்டுத் திருப்தியடைய மாட்டான். அப்படியே வெறும் செல்வத்தைக் கொண்டு பெருமை பாராட்டும் சமூகங்களில் நாகரிகம் குறைவு என்று தீர்மானிக்கலாம்.

பிராணிகள் எப்படி சகஜமாகத் தம் உணவைத் தேடி ஜீவிக்கின்றனவோ அவ்வாறே சமூகத்தின் உபயோகத்திற்கு வேண்டிய செல்வத்தைக் கஷ்டமில்லாமல் சரிவர விநியோகிப்பது பொருளாதார ஏற்பாடுகளின் லட்சியமாயிருக்கவேண்டும். அப்பொழுது மனிதனுடைய எண்ணங்கள் எல்லாம் இதைவிட உயர்ந்த லட்சியங்கள் மீது செல்வதற்குப் பூரண அவகாசம் கிடைக்கும்.

உணவும், உடையும் புருஷார்த்தங்கள் அல்ல. அறிவையும், அறத்தையும், இவ் விரண்டினு லேற்படும் ஆனந்தத்தையும் வளர்ப்பதே நாகரிகத்தின் லட்சியங்கள். இதை நாடி நிற்கும் சமூகம் அநாவசியமான ஆடம்பர வாழ்க்கையைப் பற்றி நிற்காது; தனது நாகரிகத்தை ஜனங்கள் கொளுத்தும் சுருட்டினாலும், குடிக்கும் சாராயத்தாலும் கணக்கிடாது.

ஆதலால் அவசியச் செலவுகளுக்குமேல் உற்பத்தியாகும் செல்வத்தைக் கொண்டு விஞ்ஞானத்தையும், கலைகளையும் பெருக்குவதே நாகரிகத்தை உயர்த்தும் வழியாகும். இதற்கு எல்லையே கிடையாது. ஆயிரம் வருடம் ஓயாமல் முயன்றாலும் இயற்கையின் ரகசியங்கள் எல்லாவற்றையும் அறியமுடியாது; கலைகளின் முடிவைக் காணமுடியாது.

தினம் இரண்டு மூன்று மணி நேரம் எல்லோரும் ஒழுங்காக வேலை செய்தால் சமூகத்திற்குப் போதிய செல்வம் உற்பத்தியாகிவிடும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

பீதிக் காலத்தில் அவரவர் சக்திக்கும் ருசிக்கும் ஏற்ப அறிவை வளர்ப்பதிலும், கலைகளைப் பெருக்குவதிலும் ஈடு படுவதற்கு எங்கு பார்த்தாலும் வசதிகள் இருக்கவேண்டும். கிராமத்துக்குக் கிராமம் புத்தகசாலைகளும், சங்கீத நிலையங் களும், உத்தியான வனங்களும், எல்லோரும் கூடிக் களிக்கும் விளையாட்டு மைதானங்களும் அமைக்கப்படவேண்ம். பகல் முழுவதும் புகையும் அழுக்கும் நிரம்பிய தொழிற்சாலைகளில் உழைத்துவிட்டு இரவு முழுவதும் குடித்து நர்த்தனம் செய்வது ஐரோப்பிய நாகரிகத்தின் தன்மையாகிவிட்டது. இவ்விதம் வளர்ந்து வரும் ஆண் பெண்கள் மனத்தில் குழப்பமும், கோபமும், பொறாமையும் குடிகொள்வது ஆச்சரியமல்ல. கடைசியில் ஒருவரை யொருவர் அழிக்கும் கதிக்கு வந்து விடுவதிலும் வியப்பில்லை.

ஆதலால் செல்வத்தின் அவசியத்தை நன்குணர்ந்து, ஆனால் அதன் வலையில் சிக்காமல், சிறந்த கலைகளையும் தூய சிந்தனைகளையும் கடைப்பிடிப்பதே உயர்ந்த நாகரிகத்தின் லட்சியங்கள் என்று நாம் அறிய வேண்டும். பிற நாட்டா ருக்குத் தீங்கிழைத்து அபகரித்துவரும் செல்வத்தால் நீண்ட நன்மை கிடைக்காது. பலாத்காரம் ஒழிந்து அஹிம்சையும், சுதந்திரமும், ஜனநாயகமும் உலகெங்கும் பரவுவதற்குச் சாதகமான முறையில் செல்வத்தை உற்பத்தி செய்து உப யோகப்படுத்த வேண்டும். செல்வத்திற்கு நாம் அடிமையாக லாகாது. அது நம் அடிமையாக எப்பொழுதும் இருக்க வேண்டும்.

# முடிவுரை

ஆரோக்கியமாக இருக்கும்பொழுது ஒருவனும் தன் தேகத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை. காலா காலம் ஸ்நானம் செய்து, உணவு உண்டு, தூங்குகிறான். இரத்தம் தானே ஓடுகிறது. உணவு தெரியாமலே ஜீரணமாகிறது. உடலில் சக்தி ததும்புகிறது. அனுபவமும், அறிவும், ஆனந்தமுமே தன் காரியங்களாக எண்ணுகிறான். தேக நலம் கெட்டால் இது முற்றிலும் மாறிவிடும். தேகந்தான் பிரதானமாகிவிடுகிறது. அதைப்பற்றியே கவலை கொள்ளுகிறான். பலவித மருந்துக்கள் தேடுகிறான். மற்ற விஷயங்களைப் பற்றிக் கவனிக்க சாத்தியப் படுவதில்லை.

சமூகத்தின் நிலையும் இம்மாதிரியே. செல்வம் அதன் ரத்தவோட்டம் போன்றது. தொழில்களும், வருமானங்களும் ஒழுங்காக அமைந்து செல்வம் தேங்காமல் சுழன்று கொண்டிருக்கும் சமூகத்தில் ஒருவரும் அதன் பொருளாதார நிலையைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் சமூக நிலை குன்றிப் பலர் வறுமையாலும் வேலை யில்லாத் திண்டாட்டத்தாலும், கலங்கிச் சீர் கெட்டிருக்கும் பொழுது பொருளாதாரத்தைத் தவிர வேறு எந்தப் பிரச்னையிலும் மனம் போகாது. உலகெங்கும் தற்சமயம் இந் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் செல்வத்தைப் பற்றிப் பேசுகிறவர்களைப் பாரமார்த்திக புத்தியில்லாதவர்களென்றும், சகார்வார்களென்றும் இகழ்வதில் பயனில்லை. தற்கால ஆராய்ச்சிகளையும், உற்பத்தி சாதனங்களையும் அனுசரித்து நியாயமான பொருளாதார அமைப்பை நிர்ணயிப்பதே கடமையாகும்.

# இந்தப் புத்தகம்

★

தமிழிலே ஒன்றிரண்டு புத்தகங்கள்தான் பொருளாதார விஷயம்பற்றி வெளி வந்திருக்கின்றன. அவைகளிலே இந்த நூலும் ஒன்று. படிக்கத் தெரிந்த யாவரும் புரிந்து கொள்ளும் வகையில் புரியாத பொருளாதார விஷயத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் **ஸ்ரீ. க. சந்தானம்.** இந்த அரிய புத்தகம் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றிருக்கிறது.

★


சக்தி காரியாலயம்

சென்னை 14